ரூபா 15.00
www.uthayan.com
24
சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 15 திங்கட்கிழமை (01.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 340

# இராணுவ நீதிமன்றம் ஒன்றினால் எம்.பி. பதவியை பறிக்க முடியாது

## ஐரோப்பிய நாடுகளை உதாரணம் காட்டுகிறார் ரணில்



கொழும்பு, நவம்பர் 1

**உலகில் ஜனநாயக நாடாளுமன்ற முறை நடைமுறையிலுள்ள நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இராணுவ நீதிமன்றத் தீர்ப்பினால் பறிக்கப்பட்டதில்லை. அதேபோன்று இராணுவ நீதிமன்றத்தினால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கவும் முடியாது. ஐரோப்பிய நாடுகளில் சமீபத்தில் நான் மேற்கொண்ட விஜயத்தின்போது அந் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோது அறிந்துகொண்ட விடயங்கள் இவை.**

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பன்னல போப்பிட்டி விகாரையில் நடைபெற்ற பூஜையின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இந்தத் தண்டனை வழங்க முடியாது (24ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக மாணவர் பிரச்சினை

## பகிரங்கமாக விவாதிக்க வருமாறு எஸ்.பிக்கு அனுரகுமார அழைப்பு



கொழும்பு, நவ.01

பல்கலைக்கழகப் பிரச்சினைகள் தொடர்பாக பகிரங்கமாக விவாதம் நடத்த வருமாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து தீர்வு காண்பதை விடுத்து உயர்கல்வி அமைச்சரான நீங்கள் இதுவரை ஜே.வி.பி. மீது சேறு பூசும் முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள்.



எனவே, பல்கலைக்கழக மாணவர் பிரச்சினை குறித்து பகிரங்க விவாதம் நடத்த வருமாறு உங்களை அழைக்கின்றேன். நீங்கள் தெரிவுசெய்யும் எந்தவொரு தொலைக்காட்சி அலை வரிசையிலும் ஏற்கனவே அறியத்தரும் நேரத்தில் உங்களுடன் விவாதத்துக்கு நான் தயாராகவுள்ளேன். இவ்வாறு அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## தமிழ் கூட்டமைப்புக்கு இதுவரை அழைப்பில்லை

கொழும்பு, நவ.1

தமிழ்க் கட்சிகள் அரங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு இதுவரை தமக்கு அழைப்புக் கிடைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சைக்கான விஞ்ஞானம் பகுதி I, II ஆகியவற்றுக்கான வினாத் தாள்கள்.

### உள்ளே

**நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால ஆலோசனைகள்**
நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால ஆலோசனைகளை செயற்படுத்துவது குறித்து அமைச்சரவை தீர்மானம். பக்கம் 5

**அரச அதிபரின் கூற்றுக்கு தமிழரசுக் கட்சி கண்டனம்**
உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்துள்ள கருத்தை தமிழரசுக்கட்சி கண்டித்துள்ளது. பக்கம் 7

**தனது கெட்ட முகத்தை மாற்ற முயற்சிக்கிறது இலங்கை இராணுவம்**
இன்றைய சூழலில் படையினரின் செயற்பாடுகள் குறித்து ஆராய்கின்றது கட்டுரை. பக்கம் 13

## உள்ளூராட்சித் தேர்தல் அடுத்த மே மாதத்தில்?

கொழும்பு, நவ.01

உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர்வரும் மே மாதமளவில் நடத்த அரசு தீர்மானித்துள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பாக பல்வேறு குழப்பங்கள் நிலவி வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் உத்தேச திருத்தத்தை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இச் சட்டமூலத்தைக் கடுமையாக எதிர்த்தபோதும் நீதிமன்றம் செல்லாமல் பேச்சு நடத்தி திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கின்றது.

அரச தரப்புடன் கடந்த வாரம் பேச்சு நடத்தவிருந்தும் அதற்கான சந்தர்ப்பம் கிட்டாமல் இவ்வாரம் பேச்சு நடத்த முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்த்துள்ளது.

உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச்சட்டமூலம் கடந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவின் அபிவிருத்தி பணிகள் குறித்து மஹிந்த அந்நாட்டு பிரதமருடன் ஆராய்வு

கொழும்பு, நவ. 01

சீனாவுக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சீனப் பிரதமர் வென் ஜியாபோவுக்கும் இடையில் ஷங்காய் நகரில் நேற்றுச் சந் திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

சீன அரசின் நிதி உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது துறைமுகம், விமானம், மின்சக்தி ஆகிய துறைகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு சீன அரசு நிதி உதவி வழங்குகிறது.

இந்தச் சந்திப்பின்போது, சீனாவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவுக்கு சாட்சியங்களை அனுப்பக் கோருகின்றன உலகத் தமிழ் அமைப்புகள்

கொழும்பு, நவ. 01

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்துள்ள நிபுணர் குழுவுக்கு சாட்சியங்களை அனுப்ப முன்வரும்படி பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ் அமைப்புகள் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இறுதி யுத்தத்தின் போது உயிர்தப்பிய பலர் இன்று வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் தாம் நேரில் அனுபவித்தவற்றையும் நேரில் கண்டவற்றையும் எழுத்துமூல சாட்சியமாக நிபுணர் குழுவுக்கு அனுப்பிவைக்கவேண்டுமென இந்த (24ஆம் பக்கம் பார்க்க)

தீபாவளி மலிவு விற்பனை
ஸ்கேட் பிளவுஸ் -250/- (வீரோ கழிவுடன்)
பஞ்சாபி, கவுண் -250/-
சாறி (டஸ்ற்) -550/-, 650/-
சேட் -250/-, 450/-
ரவுசர் -600/-
மற்றும் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள் அனைத்தும் மலிவு விலையில்....
கணேசன் சென்ரர்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.T.P: 021 222 5708



முதலாம் ஆண்டு நிறைவு தினம் 02.11.2010
நியூ மெடிகெயர்
இல.32 கச்சாய் வீதி, சாவகச்சேரி.
மருத்துவமனையில் முதலாம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நாளை (02.11.2010) செவ்வாய்க்கிழமை அன்று இலவச மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

Family Electric Bike
தீபாவளியை முன்னிட்டு...
யப்பான் ரேடர்ஸில்
12ஆம் திகதிவரை ரூபா 1000/= விலைக் குறைப்பு
யப்பான் தொழில்நுட்ப மின்சார மோட்டார் சைக்கிள்கள்
★ பெற்றோல் மோ.சைக்கிள் ஒருலீற்றர் பெற்றோலிற்கு 40-70Km செலவு- ரூபா115/=
★ மின்சார மோ.சைக்கிள்கள் ஒரு தடவை மின்னேற்றத்திற்கு 40-70Km செலவு- ரூபா13/=, சேமிப்பு ரூபா102 /=
★ Family e- BicyCle - Rs.49,500/=
Moto Lanka வால் கொள்வனவாளருக்கு விசேட அன்பளிப்பு
விற்பனை விலை
★ City Lover- Rs.99,500/=
★ De' Lovely - Rs.99,500/=
★ Cool Boy - Rs.99,500/=
★ Prince - Rs.84,500/=
★ Sport Boy - Rs.99,500/=
★ Sport Girl - Rs.84,500/=
★ King e- Scooter - Rs.94,500/=
★ Queen e- Scooty -Rs.89,500/=
JAPAN TRADERS இல.10-14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.No: 0213209637 Hot Line: 0770868079





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் சர்வதேச வலையமைப்பை சீர்குலைக்க இலங்கை அரசு ஏற்பாடு

## அதற்கான நடவடிக்கை ஆரம்பித்துவிட்டது என்கிறார் பீரிஸ்

கொழும்பு, நவ.1

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சிங்கள ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பெருமளவிலான சொத்துக்களும் வலுவான தொடர்பாடல் வளங்களும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைப் பயன்படுத்தி நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் புதிய முயற்சிகளில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு ஈடுபட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆயுதப் போராட்டமொன்றை நடத்த முடியாது என்பதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ள புலிகளின் சர்வதேச வலையமைப்பு, வேறு வழிகளில் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கும், சுற்றுலாத் துறையை வீழ்ச்சியடையச் செய்வதற்கும் புலிகள் முயற்சித்து வருவதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

இதற்கு எதிராக அரசாங்கம் பல்வேறு வழிகளில் நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகிறது என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு வலுவாக இயங்கி வரும் நாடுகளிடம் இலங்கை தொடர்பில் எடுத்துரைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து இலங்கையிலுள்ள இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்படும் என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

யுத்த நீதிமன்றம் ஒன்றினால் மரண தண்டனைக் கூட வழங்க முடியும் எனவும், இதனால் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தவறானது என்ற வாதங்கள் அடிப்படையற்றவை எனவும் அமைச்சர் பீரிஸ் அந்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# இராணுவத்துக்கு புதிய புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, நவ.1

சிறிலங்கா இராணுவம் புதியதொரு புலனாய்வுப் பிரிவை உருவாக்கியுள்ளது. ஐந்தாவது இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்ற பெயரில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பெரும்பாலான அணிகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே செயற்பட்டு வருகின்றன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள 5ஆவது இராணுவப் புலனாய்வுப் பிரிவு வடக்கு, கிழக்குக்கு வெளியிலேயே பணியில் ஈடுபடுத்தப் படவுள்ளது.

அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான புலனாய்வுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குமாறு சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் அண்மையில் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார்.

அதுபோலவே வடக்கு, கிழக்குக்கு வெளியே அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை கண்காணிக்கும் நோக்கில் இந்த புதிய இராணுவப் புலனாய்வுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அதேவேளை, சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பணிப்பாளராக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே சிறிலங்கா இராணுவப் பேச்சாளராகப் பதவி வகித்தவர்.

அத்துடன் லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார். (ஒ)

# புலிகளுக்கு ஆதரவான இணையங்களை முடக்கும் நடவடிக்கையில் அரசு தீவிரம்

கொழும்பு, நவ.1

புலிகளுக்கு ஆதரவான செய்திகளையும் சிறிலங்கா அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிரான செய்திகளையும் வெளியிடுகின்ற இணையத்தளங்களை முடக்கும் நடவடிக்கையில் சிறிலங்காவின் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்கமைவாக, எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாமலேயே அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள் பல சிறிலங்காவில் தடை செய்யப்பட்டுள்ளன.

அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வந்த 'லங்கா நியூஸ் வெப் இணையத்தளத்தை சில மாதங்களுக்கு முன்னர் சிறிலங்கா தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தடைசெய்திருந்தது.

புலிகளுக்கு ஆதரவான இணையத்தளங்களையும் தடைசெய்யுமாறு தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசுக்கும் சிறிலங்கா அதிபருக்கும் எதிரான செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள் மீது தடையை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை பகிரங்கமாகவே மேற்கொள்ள தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ)

பிள்ளைகளுக்காக பெற்றோர் போராடத் தயாராக வேண்டும்

# இலவசக் கல்வி முறை ஒழிக்கப்பட்டால் நாட்டில் காடையர்களே உருவாகுவர்

## ஜே.வி.பி. தலைவர் கூறுகிறார்



கொழும்பு, நவ.01

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வழங்கவுள்ள ஒரே சொத்து கல்வி மாத்திரமே. இலவசக் கல்வி ஒழிக்கப்பட்டால் இன்று அரசில் அங்கம் வகிக்கும் காடையர்கள் மற்றும் கல்வியறிவற்றவர்கள் போன்றவர்கள்தான் இந்த நாட்டில் உருவாகுவார்கள். எனவே பல்கலைக்கழகங்கள் குறித்து கவனம் செலுத்தும்படி பெற்றோரை வேண்டுகிறோம்.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவை நேற்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அப்போதே சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலவசக் கல்வியை சீரழிப்பதற்காக, கல்வியைத் தனியார்மயப்படுத்தும் சதி முயற்சியொன்று தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாட்டை ஆளும் குண்டர்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைசீரழித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக நீங்கள் போராட வேண்டும்.

தற்போதைய அமைச்சர், அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்ட நாள் முதல் சகல பல்கலைக்கழகங்களிலும் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. அமைச்சர் ஒருவரை நியமிக்கும் முன்னர் ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்திருக்க வேண்டும். தமது வாயைக் கட்டுப்படுத்த முடியாத ஒருவர் கல்வி கற்ற பல்கலைக்கழக மாணவர்களுடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? இப் பிரச்சினைகளை புத்தி சாதுரியத்துடன் தீர்க்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் என்ன நடக்கின்றதென்பதை பெற்றோர் அறிவார்களா? பாதுகாப்பு அமைச்சுக்கு 21 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பத்தில் ஒரு பங்கே கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் பல்கலைக்கழகங்களை நடத்திச் செல்வது எவ்வாறு?

இது குறித்தெல்லாம் பெற்றோர் முன்வந்து கேள்வி எழுப்ப வேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# போகம்பரை சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் தங்களை இடம் மாற்றுமாறு அவசர கோரிக்கை

## அமைச்சருக்கும் ஆணையாளருக்கும் கடிதம்

கொழும்பு, நவ. 01

கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் சக கைதிகளால் தாங்கள் தாக்கப்படுகின்றனர் என்றும் தங்களை வேறு பாதுகாப்பான இடத்துக்கு மாற்றும்படியும் கோரி சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சருக்கும், ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நாங்கள் சிறைச்சாலைக்குள் பலவிதமான துன்பங்களை அனுபவித்து வருகிறோம். தடுத்துவைக்கப்பட்டுள்ள (38 பேர்) எங்களை ஏனைய கைதிகள் புலிகள் இப்போது அழிக்கப்பட்டுவிட்டார் எனக் கூறி அடித்துத் துன்புறுத்துகிறார்கள்.

இவ்விடயங்களை நாங்கள் அதிகாரிகளிடம் கூறினால் அவர்களும் சேர்ந்து எங்களுடன் வாக்குவாதப்படுகிறார்கள்.

மேலும் எங்களுக்கு உண்பதற்கு போதிய உணவு கிடைப்பதில்லை; தண்ணீர் கிடைப்பதில்லை; மலசலகூட வசதிகள் கூட எங்களுக்கில்லை. எமது பெற்றோர் வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் தூர இடங்களில் இருந்து இங்கு வந்தால் எங்களைப் பார்ப்பதற்கு அவர்களை அனுமதிப்பதில்லை.

நாம் அனுபவிக்கும் இந்தக் கஷ்டங்களைப் பற்றி முறையிடுவதற்கு எந்தவொரு உயர்மட்ட அதிகாரியோ அல்லது அரசியல் தலைவர்களோ எம்மைப் பார்ப்பதற்கு இங்கு வருவதில்லை.

அண்மைய நாள்களில் இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடைந்துள்ளது. எனவே, இங்கிருப்பதற்கு எமக்குப் பாதுகாப்பில்லை. இதனால் எங்களைப் பாதுகாப்பான ஒரு இடத்தில் வையுங்கள். ஒவ்வொரு நாளும் நாங்கள் மரண பயத்திலேயே வாழ்கிறோம்.

எமக்குத் தனியான ஓர் இடத்தைத் தந்து எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். தயவுசெய்து எங்கள் பிரச்சினைகளை உங்கள் கவனத்தில் எடுத்து ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்து பிணையிலாவது எம்மை விடுதலை செய்ய சிபார்சு செய்யுங்கள்.

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)



சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஷானா நபீக்கின் விடுதலையை வலியுறுத்தி திருகோண மலை - மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை துஆப் பிரார்த்தனை நிகழ்வொன்று இடம்பெற்றது. ரிஷானா நபீக்குக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரி சவூதி மன்னருக்கு அனுப்பவுள்ள மகஜரில் கையெழுத்திடும் நிகழ்வும் இடம்பெற்றது.

பருத்தித்துறையில் இருந்து நாகர்கோயில் ஊடாக

# மருதங்கேணிக்குச் செல்லும் கடற்கரை வீதி மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் சிரமம்

வடமராட்சி, நவ.1

பருத்தித்துறையிலிருந்து நாகர்கோயில் ஊடாக மருதங்கேணிக்குச் செல்லும் கடற்கரை வீதி மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள், அரசாங்க அலுவலர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமுமாகிய எம்.கே.சிவாஜிலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தாம் அண்மையில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு விஜயம் செய்தமை தொடர்பான விவரங்களைத் தெரிவிக்கும்போதே இதனை அவர் கூறினார். சுமார் 20 கி.மீ. பிரயாணம் செய்ய வேண்டியுள்ளவர்கள் 45 கி.மீ. பயணிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி, செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, உடுத்துறை ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று மக்களின் இன்றைய நிலைகுறித்துத் தான் ஆய்வு செய்ததாகவும் அவர் கூறினார். அங்கு மீளக்குடியேறியுள்ள மக்கள் தமது நிவாரணங்களைப் பெறுவதற்காக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் குழுமிநின்றதை அவதானித்தேன். அவர்கள் பல நாள்களாக அலைந்து திரிவதை என்னால் உணர முடிந்தது. இந்தப் பகுதிகளில் 99 வீதமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. பல வீடுகள் அத்திபாரத்துடன் தரைமட்டமாகக் காணப்பட்டன. ஆனால் இந்த மக்களுக்கு குடும்பமொன்றுக்கு 12 தகரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இவற்றைப் பொருத்துவதற்கான கம்பு, தடிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

அத்துடன் பளையிலிருந்து மருதங்கேணி செல்லும் வீதியிலுள்ள பாலம் மோசமாகப் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டு மறுமுனையில் வைத்து மீண்டும் ஏற்றப்படுவதால் அவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதேவேளை வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

மற்றும் உடுத்துறை ம.வி., மருதங்கேணி இ.த.க., ஆழியவளை றோ.க.வி., ஆகியவற்றில் ஆசிரி[illegible] பற்றாக்குறை நிலவுவதாக தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரிஷானாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு இளவரசர் சார்ள்ஸும் கோரிக்கை

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஷானாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் சவூதி அரேபிய மன்னரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிசுவொன்றைப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ரிஷானாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தண்டனையைத் தளர்த்துமாறு பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், சவூதி அரேபிய மன்னரிடம் கோரியுள்ளார் என இலங்கை வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அரச விவகாரங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடத் தமக்கு அதிகாரமில்லை என பக்கிங்ஹாம் மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

சார்ள்ஸ் இளவரசர் ரிஷானாவுக்காக மன்னிப்புக் கோரினாரா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, ரிஷானாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சவூதி மன்னரிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரிஷானாவுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்கள் பிரார்த்தனைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தண்டனையைத் தளர்த்துமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் சவூதி அரேபிய மன்னரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து செயற்படுவதன் மூலமே மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்

## அரச அதிபர் இமெல்டா சுகுமார் உரை

சண்டிலிப்பாய், நவ.1

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்துக்காக நான் இரவு பகலாகப் பாடுபட்டு வருகிறேன். முரண்பாடாக நடப்பதினாலோ அல்லது ஆக்ரோஷமாகப் பேசுவதினாலோ எதையும் எவரிடமிருந்தும் பெற முடியாது. மக்களுக்காக இணைந்து செயற்படுவதன் மூலம் மட்டும்தான் எதையும் சாதிக்க முடியும்; மக்களின் தேவைகளையும் நிறைவேற்ற முடியும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினரால் நடத்தப்பட்ட சர்வதேச முதியோர், மாற்று ஆற்றலுடையோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும்போது கூறினார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.முரளி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அரசாங்க அதிபர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

இடம்பெயர்ந்த மக்களை விரைவாகச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டுமென்ற ஒரே நோக்குடன் இரவு பகலாக செயற்பட்டு வருகிறேன். இதற்காகச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திப் பல தடவைகள் பேச்சு வார்த்தை நடத்தி வந்துள்ளேன். எனது முயற்சி வீண் போகாது. பச்சை விளக்குக் காட்டப்பட்டுள்ளது. மிக விரைவில் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள்.

முப்பது வருடங்களுக்குமேலாக இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன. கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து அவர்களை மீட்க வேண்டும். அவர்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டும்.

போர் இடம்பெற்றபோதுதான் உயர் பாதுகாப்பு வலயம் என்ற இடம் இருந்தது. தற்பொழுது போர் முடிந்து விட்டது. நாட்டில் சமாதானம் அமைதி நிலவுகிறது. அபிவிருத்தி வேலைகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன. இந்த அமைதிச் சூழ்நிலையில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேச்சுக்கே அர்த்தமில்லை. இடம்பெயர்ந்த மக்கள் அந்தந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படவேண்டும். ஆயிரக் கணக்கான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதினால் மக்களை மீள்குடியமர்த்த முடியாத நிலைஏற்பட்டுள்ளது. கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றதும் வடமராட்சி கிழக்கில் குடியமர்த்தப்பட்டதுபோல் வலி.வடக்கிலும் குடியமர்த்தப்படுவார்கள். கண்ணிவெடி அகற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாகஇருப்பதே காலதாமதத்துக்குக் காரணமாகும் - என்றார். (எ-115)

# போரால் கல்வியை இழந்தோருக்கு துரித கற்றல் செயற்றிட்டம்

சுன்னாகம், நவ.1

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளால் கல்வி வாய்ப்புகளை இழந்த மாணவர்களுக்கு துரித கற்றல் செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களங்கள் என்பன இணைந்து 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

தரம் 3 முதல் தரம் 9 வரை நடத்தப்படவுள்ள இச்செயற்றிட்டத்தில் தாய்மொழி, ஆங்கில மொழி, கணிதம் ஆகிய பாடங்களும் தரம் 6 முதல் 9 வரையான வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாடமும் இச்செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டிலிருந்து இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-38)

# கட்டுடைப் பாலம் திருத்தப்பணி ஆரம்பம்; மாற்றுப்பாதைப் பயணத்தால் மக்கள் சிரமம்

சுன்னாகம்,நவ.1

கட்டுடைப் பாலத்தின் திருத்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இப்பகுதியூடான போக்குவரத்து நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாலத்திற்கு அருகே போடப்பட்டுள்ள சிறிய தற்காலிகப் பாதையூடாகவே துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பயணிக்க வேண்டியுள்ளது. எனினும் மழை ஆரம்பித்துள்ள நிலையில் இப்பாதையூடாகப் பயணிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை-

வாகனங்கள் மூலம் பயணிப்போர் சீரணிச் சந்தியில் இருந்தும், மானிப்பாய் மருதடிச் சந்தியிலிருந்தும் மாற்றுப் பாதையூடாகத் திருப்பி விடப்படுகின்றனர். டச்சு வீதி வழியாகவே இவர்கள் பயணம் செய்யமுடிகிறது. இவ் வீதியும் அகலம் குறைந்ததாகக் காணப்படுவதால் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பாலம் திருத்தும் பகுதிக்கு அருகில் மக்கள் சிரமமின்றிப் பயணிக்கும் வகையில் தற்காலிகப் பாதையொன்றை அமைத்துத் தரும்படி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் இப்பகுதி மக்கள் மனு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர். (எ-38 )

# இக்கட்டான இன்றைய சூழலில் ஒற்றுமையுடன் தமிழ்- முஸ்லிம் மக்கள் பயணிக்க முன் வர வேண்டும்

## சிறீதரன் எம்.பி அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.1

கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து தமிழ்- முஸ்லிம் மக்களாகிய நாம் ஒற்றுமையுடன் எமது இலக்கினை நோக்கி பயணிப்போம் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார். நிந்தவூர் ஷிப்லியின் 'தற்கொலை குறிப்பு' கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இன்றைய சூழ்நிலையில் எதிர்காலம் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய தருணத்தில் உள்ளோம். தமிழ் -முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ்வதை சிங்கள மக்கள் விரும்பமாட்டார்கள்; விடவும் மாட்டார்கள். எனவே கடந்த கால கசப்பான வரலாறுகளை மறந்து முஸ்லிம் - தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமையுடன் வாழ முன்வர வேண்டும்.

ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதால் எந்த வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. தந்தை செல்வாவின் காலத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றாக வாழ்ந்த காலம் மீண்டும் வரவேண்டும்.

எல்லாவற்றையும் இழந்து போன- இடிந்து போன- அழிந்து போன- இன்றய சூழலில் நாமே தமிழ் - முஸ்லிம் மக்கள் மொழி ரீதியாக ஒற்றுமைப்பட வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் தலைமைத்துவம் அற்ற சூழலில் வாழ்ந்து வருகின்றோம். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த சூழல் வர வேண்டும். உண்மையின் தரிசனம் வெளியில் வர வேண்டும். எல்லாவற்றுக்கும் ஒரு காலம் வரும். அந்த காலத்துக்கு நாம் தயாராக வேண்டும். புதிய இலக்கியங்கள் இன்றய சூழலில் வெளிவந்து, அந்த சூழலை உருவாக்க வேண்டும். நாங்கள் யாழ் பொது நூலகத்தை திருத்தியிருக்ககூடாது. அதை ஒரு ஆதாரமாக வைத்திருக்க வேண்டும். சிங்கள மக்கள் மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு தொடக்கம் தலதா மாளிகை குண்டு வெடிப்பு வரை எல்லா வற்றுக்கும் ஆதாரங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் எம்மிடம் கடந்த காலம் பற்றி என்ன ஆதாரம் இருக்கிறது?

எனவே இந்த இக்கட்டான சூழலில் தமிழ், முஸ்லிம் இலக்கிய வாதிகளும் மக்களும் ஒற்றுமையுடன் எமது இலக்கு நோக்கி பயணிப்போம்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத்தை சேர்ந்த விரிவுரையாளர் விசாகரூபன் எழுத்தாளர்களான குனேஸ்வரன், அஜந்தகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (எ-319)

# வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையில் அநாதரவான நிலையில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ.1

வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையில் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வயலுக்குச் சென்ற விவசாயி ஒருவர் கொடுத்த தகவலின் பேரில் பருத்தித்துறைப் பொலிஸாரால் இச்சடலம் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட சடலம் வி.சுப்பிரமணிய ஐயர் (வயது 83) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இறந்தவர் வைத்திருந்த 2004 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் அட்டை மூலமே சடலம் இனங்காணப்பட்டுள்ள தாகக் கூறப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்றப் பணிப்பின் பேரில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி வின்சன் தயாளன் அன்ரலா மரணவிசாரணைகளை நடத்தினார். பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் புசல்ல தலைமையிலான பொலிஸ் குழுவே இவரது சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் நான்கு நாள்களுக்கு முன் உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அடையாளம் காணப்பட்டுள்ள சடலத்தை உறவினர்கள் ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-236)

# அமைச்சர்கள் மில்றோய், திஸ்ஸ கரலியத்த சிறுவர் காப்பக திறப்பு விழாவுக்கு வருகை

சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்ணான்டோ ஆகியோர் 'கடவுளின் சொந்தப்பிள்ளைகள்' அமைப்பின் காப்பகத்தை அச்சுவேலியில் இன்று முற்பகல் 10 மணியளவில் திறப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

'கடவுளின் சொந்தப்பிள்ளைகள்' அமைப்பினால் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டது.

இந்தக் காப்பகத்தில் வைத்து 50 சிறுவர்கள் பராமரிக்கப்பட உள்ளனர். இவர்கள் அனைவரும் 4 வயது முதல் 18 வயது வரையானவர்கள். இவர்களில் கல்வி கற்கும் சிறுவர்கள் அருகில் உள்ள அரச பாடசாலைகளில் இணைக்கப்படுவர். தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புபவர்களுக்கு தொழில் பயிற்சிகளும் வழங்கப்படவிருக்கின்றன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், விதவைகளுக்கு உதவுவதை நோக்கமாக கொண்டே இக் காப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் எமக்கு போதுமான நிதி உதவி தற்போது இல்லை. காப்பகத்துக்கு நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்- என்றும் அந்த அமைப்பினர் கேட்டுள்ளனர். (எ-14-15-86)

# 'தகவல்களின் தரிசனம்' நூலகக் கண்காட்சி

வலிகாமம் தெற்கு பிரதேச சபை நூலக விழிப்புணர்வு நிறுவனத்துடன் இணைந்து 'தகவல்களின் தரிசனம்' என்ற பெயரிலான கண்காட்சியொன்றை நடத்தவுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளில் ஒன்றான இக்கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களும், பிரதேச வாசகர்களும் பயன் பெறக் கூடிய வகையில் இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (எ-38)




வண்ணார்பண்ணையில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புதிய குருமனை திறப்புவிழா நேற்றுமுன்தினம் (30.10.2010) சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வண.எஸ்.தேவதாசன் உரையாற்றுவதையும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பேராயர் அருட்கலாநிதி ஏ.டபிள்யூ.ஜெபநேசன் புதிய குருமனையைத் திறந்து வைப்பதையும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# மர நடுகை பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் எதிர்வரும் 18ம் திகதி இடம்பெறவுள்ள மர நடுகை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அவரது யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடல் குடாநாட்டின் பல பகுதிகளிலும் சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சுடன் இணைந்து மேலும் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த மர நடுகைத் திட்டத்தில் தேக்கு, வேம்பு,மலைவேம்பு, மங்குஸ்த்தான், கஸுவலினா போன்ற மரங்கள் நடப்படவுள்ளன. இதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர மற்றும் பிரதேச சபைகளின் ஊடாக குப்பைகளை கூட்டெருவாக மாற்றும் திட்டம் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. (எ- 201)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவைத் தாக்க வெடிகுண்டுகள் அனுப்பிய மருத்துவ பீட மாணவி கைது

## அல்-குவைதா தீவிரவாதியா?

சனா, நவ. 01

ஏமனிலுள்ள சனா நகரிலிருந்து அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகருக்கு 2 வெடிகுண்டுகள் விமான பார்சல் மூலம் அனுப்பப்பட்டன.

2 தனியார் சரக்கு விமானங்களில் இவை தனித்தனியாக அனுப்பப்பட்டிருந்தன. இது பற்றிய இரகசிய தகவல் சவூதி அரேபியா உளவுப்படைக்குத் தெரிந்தது. அவர்கள் இதுபற்றி அமெரிக்காவுக்குத் தகவல் கொடுத்தனர்.

அப்போது இரு விமானங்களும் ஒரு பகுதியில் பறந்து கொண்டிருந்தன. இரு விமானங்களையும் உடனடியாக தரை இறக்க உத்தர விடப்பட்டது.

ஒரு விமானம் துபாயில் தரை இறக்கப்பட்டது. மற்றொரு விமானம் லண்டனில் தரை இறக்கப்பட்டது.

2 விமாணங்களிலும் பொலிஸார் சோதனை நடத்தினர். அதில் வெடிகுண்டுகள் இருந்ததைக் கண்டுபிடித்தனர். 2 வெடிகுண்டுகளும் கணனிக்கு பயன்படுத்தப்படும். மை காட்ரேஜினில் மறைத்து வைத்து அனுப்பப்பட்டிருந்தன.

அதில் கையடக்கத் தொலைபேசி சிம்காட் பொருத்தப்பட்டிருந்தது. அந்த எண்ணுக்கு போன் செய்ததும் வெடிக்கும் வகையில் அமைத்து இருந்தனர்.

2 வெடிகுண்டுகளும் சிக்காகோ நகரிலுள்ள 2 யூத கோவில்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டிருந்தன. கோவிலுக்குப் பார்சல் சென்று சேர்ந்ததும் அதை வெடிக்க வைக்க சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

இந்தப் பார்சல்களை அல்-குவைதா தீவிரவாதிகள் தான் அனுப்பி இருக்க வேண்டும் என்ற கோணத்தில் விசாரணை நடந்தது.

வெடிகுண்டு பார்சலில் ஒன்று யூ.பி.எஸ். என்ற தனியார் சரக்கு விமான நிலையம் மூலமும், மற்றொரு பார்சல் வெப் எக்ஸ் என்ற சரக்கு விமான நிறுவனம் மூலமும் அனுப்பப்பட்டிருந்தன.

பொலிஸார் அந்த இரு நிறுவனங்களுக்கும் சென்று விசாரணை நடத்தினார்கள். அப்போது ஒரு இளம் பெண் இந்தப் பார்சல்களை அனுப்பியமை தெரிந்தது.

அவருடைய தொலைபேசி எண்ணை பொலிஸார் கண்டுபிடித்தனர். அதன் மூலம் அவரது முகவரியைக் கண்டுபிடித்து பொலிஸார் உடனடியாகச் சென்று முற்றுகையிட்டனர்.

அங்கு பார்சலை அனுப்பிய இளம் பெண் இருந்தார். அவர் மருத்துவக் கல்லூரி மாணவி என்று தெரிந்தது. அவரை பொலிஸார் கைது செய்தனர். வீட்டிலிருந்த அவருடைய தாயாரையும் கைது செய்தனர்.

அவர்கள் பெயர், விவரம் எதையும் வெளியிடவில்லை. மாணவி அல்-குவைதாப் பெண்தீவிரவாதியாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அவரை இரகசிய இடத்தில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

அவரிடம் வெடிகுண்டை கொடுத்து அனுப்ப சொன்னவர்கள் யார்? என்ற முழுவிவரமும் தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அரங்கில்

இதனை அடுத்து இரு சரக்கு விமான நிறுவனங்களும் ஏமனிலிருந்து பார்சல்களை அனுப்பியதை நிறுத்தியுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகள் ஏமனிலிருந்து பார்சல் பொருட்களைக் கொண்டு வருவதற்கு உடனடியாக தடை விதித்துள்ளன.

ஏமன் நாட்டிலுள்ள ஷப்பா பகுதியில் அல்-குவைதா தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இங்கு செயல்படும் தீவிரவாதிகள்தான் வெடி குண்டுகளை அனுப்பி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

இதுதொடர்பாக ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே கூறும்போது, அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள் கொடுத்த தகவலின்படி சம்பந்தப்பட்ட பெண்ணை அடையாளம் கண்டு கைதுசெய்துள்ளோம்.

அல்-குவைதா தீவிரவாதிகளுக்கு எதிராக நாங்கள் போராடி வருகிறோம். இதில் மற்ற நாடுகளுக்கு உரிய ஒத்துழைப்பு கொடுப்போம். ஆனால், எந்த நாடும் எங்கள் உள் விவகாரத்தில் தலையிட அனுமதிக்க மாட்டோம் என்றார்.

ஏற்கனவே அமெரிக்காவில் தாக்குதல் நடத்த முயற்சித்து கைதான தீவிரவாதிகள் சிலர் நாங்கள் ஏமனில் தான் பயிற்சி பெற்றோம் எனக் கூறி உள்ளனர். இந்த நிலையில் ஏமனிலிருந்து இப்போது அமெரிக்காவை தகர்க்க வெடிகுண்டு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, ஏமனில் பதுங்கியிருக்கும் அல்- குவைதா தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அமெரிக்காவை தாக்குதலுக்கு அனுமதிக்க மாட்டோம் என்று ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா கூறியிருக்கிறார்.

பயணிகள் விமானம் மூலம் அமெரிக்காவில் தாக்குதல் திட்டங்கள் நடத்தலாம் எனக் கருதி அமெரிக்கா வெளிநாடுகளி லிருந்து வரும் பயணிகள் விமானத்தை முழுமையாகக் கண்காணித்தன.

இப்போது சரக்கு விமாணம் மூலம் சதித் திட்டம் நடந்திருப்பதால் சரக்கு விமானங்களையும் முழுமையாகக் கண்காணிக்க உத்தர விடப்பட்டுள்ளது.



பிரேஸில், மினஸ் கெராயிஸில், தொழிலாளர் கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி தில்மா ரௌசஃப் (வலது), தன் ஆதரவாளர்களுக்கு கைகொடுக்கி றார்.

# நேபாளத்தில் 14 தடவைகள் வாக்குப்பதிவு பிரதமரை தேர்ந்தெடுப்பதில் இழுபறி நீடிப்பு

காத்மாண்டு, நவ. 01

நேபாளத்தில் 14 தடவைகள் வாக்குப்பதிவு நடைபெற்றும் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. இழுபறி நீடிக்கிறது.

நேபாளத்தில் பிரதமராக இருந்தவர் மாதவ் குமார் நேபாள். மாவோயிஸ்ட் கட்சியினரின் நெருக்குதலால் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.

இந்த நிலையில் கடந்த ஜூன் 30ஆம் திகதி முதல் பிரதமரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்று வருகிறது. இதுவரை 13 தடவைகள் வாக்குப்பதிவு நடந்தன. ஆனால் பிரதமரைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் நீடித்தது. யாருக்கும் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை 14 ஆவது தடவையாக வாக்குப்பதிவு நடந்தது. பிரதமர் பதவிக்கு நேபாளி காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராம் சந்திர பெட்யால் போட்டியிட்டார்.

வாக்களிப்பில் 138 பேர் மட்டுமே வாக்களித்தனர். இதில் 96 பேர் பெட்யாலுக்கு ஆதரவாக வாக்களித்தனர். 2 பேர் அவருக்கு எதிராக வாக்குகளைச் செலுத்தினர். எஞ்சியுள்ள 40 பேர், எவருக்கும் வாக்களிக்காமல் நடுநிலையாக இருந்தனர்.

இதனால் 14ஆவது தடவையாக வாக்குப்பதிவு நடந்தும் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் அடுத்த தேர்தல் இன்று முதலாம் திகதி நடைபெறவுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

564 உறுப்பினர்களைக் கொண்டது நேபாள நாடாளுமன்றம். இதில் 301 உறுப்பினர்கள் வாக்கு அளித்து ஏகமனதாகத் தேர்ந்தெடுப்பவர்தான் பிரதமராக முடியும். (சி)

# சீனாவை ஆதரவு நாடாக கருதும் மியான்மர் மக்கள்

பீஜிங், நவ. 01

மியான்மரில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், யார் ஜெயிக்கிறார்களோ இல்லையோ, அதன் அண்டை நாடான சீனா ஜெயிக்கத்தான் போகிறது.

ஆம். மியான்மர் ஆட்சியாளர்கள், சீனாவைத் தங்கள் பாதுகாப்புக்கான ஆதரவு நாடாகக் கருதத் தொடங்கி விட்டனர். இந்தியாவைச் சுற்றியுள்ள ஒவ்வொரு நாட்டையும் தன் பக்கம் இழுத்து வருவதில் சீனா பெருமளவு வெற்றி பெற்று விட்டது.

இந்தியா அல்லது அமெரிக்கா பக்கம் மியான்மர் சாய்ந்துவிடக் கூடாது என்பதில், சீனா பெருமளவு கவனம் செலுத்தி வருகிறது. ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான பனிப்போரின் போது, மியான்மர் இராணுவ ஆட்சியாளர்கள், சீனாவின் ஆதரவுடன் மியான்மரில் கிளர்ச்சி செய்து வந்த கம்யூனிஸ்ட்களை ஒடுக்கினர்.

அதன்பின்னர் சீனாவுக்கு எதிராக மியான்மரில் நடந்த கிளர்ச்சிகள், 1967இல் சீனா, மியான்மரில் உள்ள தன் தூதரகத்தை இழுத்து மூடியது என இருதரப்பும் எதிர் எதிராகவே இருந்தன.

இருந்தபோதும், மியான்மரில் ஆதரவுக் கரம் நீட்டுவதற்கு அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகளுக்கு சிறிதளவே வாய்ப்பிருந்தது. ஆனால் அடுத்து வந்த மியான்மர் ஆட்சியாளர்கள் சீனா பக்கம் சாயத் தொடங்கினர்.

இது குறித்து லண்டன் பொருளாதாரப் பாடசாலையின், மியான்மர் அரசியல் நிபுணர் மவுங் ஜார்னி கூறுகையில், ''சர்வதேச அளவில் தங்கள் பாதுகாப்புக்காக சீனாவை மியான்மியர் விரும்புகின்றனர்.

மியான்மரில் கிடைக்கும் மூலப் பொருட்களுக்காக சீனர்கள் மியான்மரை விரும்புகின்றனர். அதோடு, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அரசியல் ரீதியில் சீனாவுக்கு பர்மா பலமாக இருக்கும்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் இந் நிலைமை மாறப் போவதில்லை'' என்று குறிப்பிடுகிறார். (சி)

# உலக அழகியாக அமெரிக்க அலெக்சாண்டிரியா தெரிவு




அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்சாண்டிரியா மில்ஸ், 2010ஆம் ஆண்டிற்கான உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நடப்பு ஆண்டிற்கான உலக அழகிப் போட்டி, சீனாவின் சான்யா நகரில் வெள்ளிக்கிழமை நடந்தது. இந்தப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த 18 வயதான அலெக்சாண்டிரியா மில்ஸ் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாவது இடத்தை போட்ஸ்வானாவைச் சேர்ந்த எம்மா வாரசும், மூன்றாவது இடத்தை வெனிசுலாவைச் சேர்ந்த அட்ரியானா வாசினியும் பெற்றனர். உலகம் முழுவதிலுமிருந்து 119 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில், இந்தியா சார்பில் பங்கேற்ற மானஸ்வி மாம்காய் 20ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலெக்சாண்டிரியா மில்ஸ் கூறுகையில், ''மற்றவர்களின் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த விரும்புகிறேன். என்னால் முடிந்தவரை, ஒவ்வொருவருக்கும் உதவ விரும்புகிறேன். மிஸ் வேர்ல்ட் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டது மிகப்பெரிய கௌரவம்'' என்றார். (சி)

# நேட்டோ படையால் ஆப்கானில் 30 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

காபூல், நவ. 01

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் அமைந்துள்ள 'நேட்டோ' படையினரின் முகாம்களைத் தாக்கிய தலிபான் தீவிரவாதிகள் 30 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் தென்பகுதி பக்டிக்கா பகுதியில் 'நேட்டோ' படையின் முகாம்கள் உள்ளன. இவற்றின் மீது ரோக்கெட் மூலம் ஏவப்படும் கையெறி குண்டுகள், சிறிய ஆயுதங்கள், சிறிய ரகப் பீரங்கிகள் ஆகியவை மூலம் வெள்ளிக்கிழமை பல முனைகளில் இருந்தும் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தில், நேட்டோ படையைச் சேர்ந்த ஐந்து பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது, நேட்டோ படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் 30 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்தியது தாங்களே என தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (சி)

# பாகிஸ்தான் கடற்படையால் 32 இந்திய மீனவர்கள் கைது

இஸ்லாமாபாத், நவ. 01

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன் பிடித்தனர் என இந்திய மீனவர்கள் 32 பேரை பாகிஸ்தான் கடற்படையினர் வியாழக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

மீனவர்களிடமிருந்து 6 படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர். தங்களது கடல் பகுதிக்குள் 60 நாட்டிக்கல் மைல் தூரத்தில் இந்திய மீனவர்களை தாங்கள் கைது செய்தனர் என்றும் கடற்படையினர் கூறியுள்ளனர்.

கைதாகியுள்ள மீனவர்கள் அனைவரும் கராச்சி நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

கைதாகியுள்ள மீனவர்கள் உண்மையிலேயே இந்தியாவைச் சேர்ந்தவர்கள்தானா, அவர்கள் மீன்பிடிக்கத்தான் கடற்பகுதிக்குள் நுழைந்தார்களா என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கில் விசாரணை நடந்து வருகிறது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு கடற்படையினரும் கடல்பகுதிக்குள் மீனவர்கள் அத்துமீறி நுழைகின்றனர் எனக் கூறி பரஸ்பரம் கைதுசெய்வது வழக்கமாக இருந்து வருகிறது.

அதுபோல இரு நாடுகளும் கைது செய்யப்படும் மீனவர்களைப் பரஸ்பரம் விடுவித்து வருகின்றன. சமீபத்தில் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இந்திய மீனவர்கள் 442 பேரையும், கராச்சியிலுள்ள நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 142 மீனவர்களையும் அரசு விடுவித்திருந்தது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர்களின் இன்றைய ஏக்கம்

அரசாங்க நிறுவனங்களில் பணிபுரிவோர், மக்கள் விரும்பும் மொழியில் அவர்களுக்குரிய சேவையை வழங்க வேண்டும். அவ்வாறு செய்ய மறுத்தால் அது தொடர்பில் நாட்டின் பிரசை ஒருவர் நீதிமன்றத்தின் உதவியை நாடலாம்.

2007 ஆம் ஆண்டின் அரச சுற்றறிக்கையின் பிரகாரம் இதற்கு வகை செய்யப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பணி புரியும் ஒருவர் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொதுமக்களில் எவரும் எந்த மொழியில் தமக்குரிய சேவையை விரும்புகிறாரோ அதனை வழங்க வேண்டும்.

அதனாலேயே, அரசாங்க சேவையில் சேரும் அனைவரும் இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக, மொழிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களாக இருந்தால் மட்டுமே சம்பள உயர்வு என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகத் தேசிய மொழி அமைச்சின் மேலதிக செயலாளர் மடுவே கெதர தெரிவித்திருக்கிறார்.

அரசாங்க சேவையில் சிங்கள மொழித் தேர்ச்சி மூலம் சேர்ந்தவர்கள் தமிழ்மொழியிலும், தமிழ் மொழித் தேர்ச்சி மூலம் சேர்ந்தவர்கள் சிங்கள மொழியிலும் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற வேண்டும் என்பது அவசியம், விதி, நியதி.

சட்டத்திலும் அரசாங்க நிர்வாக விதிகளிலும் இவ்வாறு இருந்த போதிலும்,இரண்டு மொழிகளில் தேவைப்படும் எந்த ஒரு மொழியிலாவது மக்களுக்குச் சேவையாற்றுவதற்குத் தயார் என்ற உத்தரவாதம் அளித்த அரச சேவையாளர்கள், அதன் பின்னர் நடைமுறையில் தாம் இணங்கிய விதியை மீறுகின்றனர். தமது வசதிக்கேற்ப, மக்கள் விரும்பும் மொழியில் சேவையாற்ற மறுக்கின்றனர். அரசுடன் தமக்குள்ள ஒப்பந்தத்தை மீறுகின்றனர். சம்பள உயர்வு கிடைக்காவிடிலும் பரவாயில்லை என்ற இறுமாப்புடன் மக்கள் விரும்பிய மொழியில் சேவை யாற்ற மறுக்கின்றனர்.

பணி நியமனத்தின்போது ஒப்புக்கொண்டவாறு மக்கள் விரும்பும் மொழியில் அவர்களுக்குச் சேவையாற்ற மறுத்த மூன்று அரச அலுவலர்கள் மீது, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருப்பதாக தேசிய மொழி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்திருக்கிறார். இந்த மூன்று வழக்குகளும் சிங்களத்தில் சேவையாற்றுவதற்கு மறுத்தமையினாலா அல்லது தமிழில் சேவையாற்றுவதற்கு மறுத்ததினாலா என்பது தெரிவிக்கப்படவில்லை. அனேகமாக இரண்டாவது வகையினதாகவே இருக்கும் என்று நம்பலாம், கருதலாம்.

சகல மக்களும் தத்தமது தாய்மொழிகளில் அரச அலுவலகங்களுடன் அல்லது அரச அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தமக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்வதற்கு ஏற்றவாறு இப்போது வசதி செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காலத்தில் - 54 ஆண்டுகளுக்கு - அரை நூற்றாண்டு காலத்துக்கு - முன்னர் சிங்களத்தையும் தமிழையும் அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தி இருப்பின், மக்களுக்கு அளிக்கப்படும் அரச சேவைகளில் குறைபாடுகளும் உச்ச நீதிமன்றம் வரை சென்று வழக்காடும் நிலையும் வந்திருக்காது.

நாட்டின் அண்மைக்கால சரித்திரத்தில் தனிச் சிங்களச் சட்டமே இந்த நாட்டின் பெரும் சாபக் கேடாக வந்தது. சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் விரோதங்களையும் குரோதங்களையும் தீரா பகைமையையும் தோற்றுவித்தது. கடந்த அரை நூற்றாண்டு காலமாக நாட் டில் உண்டான மனித அழிவுகளுக்கும் உடைமைச் சேதங் களுக்கும் ஏனைய பேரழிவுகளுக்கும் மனித அவலங்க ளுக்கும் அதுவே வித்திட்டது.

தனிச்சிங்களச் சட்டம், அப்போதைய அரச தமிழ் ஊழியர்களை லட்சக்கணக்கில் அவர்களது தொழிலை உதறித் தள்ளிவிட்டு வரத்தூண்டியது. அதன் சங்கிலித் தொடர் விளைவுகளாக, தமிழ் மக்களை பலவகைகளிலும் பாதிக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கும், பாகுபாடுகளுக்கும் அவர்களை அழித்து எண்ணிக்கையில் மேலும் சிறுபான்மையினராக்கி, இந்த நாட்டை தனிச்சிங்கள நாடு என்று உரிமை கொண்டாட வேண்டும் என்ற உணர்ச்சியை சிங்கள மக்களிடம் தூண்டி வளர்ப்பதற்கு அத்திபாரம் இட்டதும் அந்தத் தனிச் சிங்களச் சட்டமே. இடையில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து தமிழுக்கும் அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுச் சட்டப் புத்தகத்தில் பதியப் பட்ட போதிலும், தனிச்சிங்களச் சட்டம் ஆழ வேரூன்றி இனக்குரோதத்துக்கும் தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கவும், அவர்களை சொந்தப் பூமியில் இருந்து தூக்கி எடுக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டன. அத்தகைய பல சூழ்ச்சித்திட் டங்கள் நடைமுறையாக்கப்பட்டன. அவற்றின் விளைவே கடந்த 30 வருட கால வினைகள்; அழிவுகள்; இராணுவ அடக்கு முறைகள்.

காலத்துக்குக் காலம் தமிழர்களிடையே உருவாகிய எட்டப்பர்களை, எலும்புத் துண்டுகளைக் காட்டி தமது பக்கம் சேர்த்து, அவ்வப்போது ஆட்சியிலிருந்த கொழும்பு அரசுகள் - சிங்கள அரசுகள் - தாம் தமிழர்களுக்கும், அவர்களது உரிமைகளுக்கும் எதிரானவர்கள் அல்லர் என்று உலகத்துக்கு வேடம் போட்டுக் காட்டின.

இத்தனை அவலங்கள் அழிவுகளுக்குப் பிறகும் தமிழ் மக்களும் இந்த நாட்டு பிரசைகளே அவர்களும் சிங்கள மக்களுக்குரிய சகல உரிமைகளோடும் சமத்துவமாக வாழ வழிசெய்யவேண்டும் என்ற எண்ணக்கருவை முற்றாக அழித்துத் துடைத்து-

ஆதிபத்தியக்காரர்கள் நாம், அடிமைகள் போன்றவர்கள் தமிழர்கள் என்ற பகிரங்கப்படுத்தாத செயல்திட்டங்கள் இப்போது வெளிக்கிளம்புகின்றன.

ஜனநாயகத்துக்கும் அதன் கோட்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் ஊறு விளைவிக்காது, தங்களையும் இந்த நாட்டின் பிரஜைகள் என்று கருதி இந்த நாட்டின் சொந்தக்காரர் என்ற நிலை தமக்கு எப்போது கிடைக்கும் என்று ஏங்கித்தவிக்கிறார்கள் தமிழர்கள். அவர்களது வேணவாவும் அதுவே.

அதற்கான மார்க்கம் எதனையும் இந்த அரசு நினைத்துத் தானும் பார்க்குமா என்பதே தமிழ் மக்களின் இன்றைய ஏக்கம்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால ஆலோசனைகள்: செயற்படுத்துவது குறித்து அமைச்சரவை தீர்மானம்

*நேற்று 31.10.2010 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி இது.*

கொழும்பு நகரில் இதுவரை காலமும் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடத்தி வந்த சோதனைகள் யாவும் முடிவுக்கு கொண்டு வரப் பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் புறநகர்ப் பகுதிகளிலும் ஏனைய பிரதான நகரங்களிலும் இந்தச் சோதனைகள் முடிவுக்கு வரும் என்று எதிர் பார்க்கப் படுகின்றது. ஆயுதங்களை ஏந்திக்கொண்டு நாட்டின் பாதுகாப்பில் ஈடுபட்டுவந்தஇராணுவத்தினில் பெரும் பாலானவர்கள் இனிமேல் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

பிரதான நகரங்களில் குறிப்பாக கொழும்பு தலைநகரில் காவல் பணிகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இப்போது நகரங்களை அழகுபடுத்தும் பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அவர்கள் தமது பகுதிகளில் உள்ள வீட்டார்களை அழைத்து வீதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் படியும் வீட்டுக்கு வெளியில் இருக்கும் மரங்களின்கிளைகளை வெட்டும் படியும் கோரிவருகின்றார்கள். அதிகாரமற்ற முறையில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் தகர்ப்பதிலும் பொலிஸார் உதவி வருகிறார்கள். ஏனைய அரச அதிகாரப் பிரிவினரும் வீதிகளை விஸ்தரிப்பதிலும் நடை பாதைகளை அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். பொலிஸாரும் இராணுவத்தினரும் நாடு தழுவிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு வாரங்களுக்குச் சற்று அதிகமாகவே உள்ள நிலையில் அதற்கான செயற்பாடுகள் விறுவிறுப்பு அடைந்து வருகின்றன.

அந்த கொண்டாட்டங்களைக் குறிக்கும் வைபவம் நவம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் அதேசமயம் நாடு முழுவதும் 1.1 மில்லியன் மரங்களை 11 நிமிடங்களுக்குள் நாட்டி முடிக்கும் திட்டத்துக்கும் ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. அன்றைய தினம் 10.07 ஆகிய சுபவேளையில் ''பெயட்ட செவன'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. சகல மாவட்டங்களிலும் இது முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

கொழும்பு சுதந்திர சதுக்கம் உயிர்ப்பு பெற்றுவிடும். வரலாற்று முக்கியத்துவமிக்க சுதந்திர மண்டபத்தில் சமயச்சடங்குகள் மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெற விருக்கின்றன. நவம்பர் 17 ஆம் திகதி இது ஆரம்பமாகும்.

ஜி15 நாடுகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதியின் சத்தியப்பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ள அனுப்புமாறு அந்த நாடுகளுக்கு தகவல் அனுப்பு வதென ஜனாதிபதியின் பதவியேற்பு தொடர்பான வைபவங்களை ஏற்பாடு செய்யும் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான குழு இந்தவாரம் முடிவு செய்தது. தென் ஆஸிய பிராந்திய ஒத்துழைப்புக்கான (சார்க்) நாடுகளுக்கும் அழைப்பு அனுப்புவதென முடிவு செய்துள்ளது.

நவம்பர் 19 ஆம் திகதி காலையில் நாடுமுழுவதிலுமுள்ளபாடசாலைகளில் வகுப்புகள் தொடங்குவதற்கு முன்னர் சிறப்பு ஒன்று கூடல் ஒன்றை நடத்துவதென்றும் அமைச்சர்கள் குழு தீர்மானித்தது. இந்தக் கூட்டங்களில் ஜனாதிபதியின் சத்தியப் பிரமாணம் பற்றியும் சமய சடங்குகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட இருக்கின்றது. குறித்த தினம் காலை பத்துமணிக்குப் பிறகு சுபவேளையில் ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். சுமார் 5000 அழைப்பாளர்கள் பழைய நாடாளுமன்றத்துக்கு வெளியில் ஜனாதிபதியின் செயலகத்துக்கருகில் வைபவத்தைப் பார்வையிடுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. அதே சமயம் காலி துறைமுகத்திலிருந்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி கப்பல் ஒன்று புறப்படும். அக்கப்பலில் இருந்து பௌத்தபிக்குகள் பிரித் ஓதியபடி பயணம் செய்வார்கள். கிராம சேவகர்கள் தத்தமது பகுதிகளில் வைபவங்களுக்கு ஏற்பாடுகள் செய்யும்படியும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

### சீனாவுக்கு ஜனாதிபதி பயணம்

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஜனாதிபதி சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஷாங்காய் நகரில் நடைபெறும் வர்த்தக சந்தையில் கலந்து கொள்வார். அதன்பின் சீன பிரதமர் வென்ஜியாபோவை சந்திக்க பெய்ஜிங்கிற்குப் புறப்படுவார். ஜனாதிபதியின் பயணத்தின் போதே பெய்ஜிங் கில் நவம்பர் 2 ஆம் திகதியும் அடுத்த நாளும் சீன வெளிநாட்டு வர்த்தக வைபவம் நடைபெறவிருக்கின்றது. சீனாவுக்கும் இதர வெளிநாடுகளுக்கும் இடையில் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதை நோக்கமாகக் கொண்டதே இந்தச் சந்தையாகும்.

சீனப் பிரதமரோடும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் மேற்கொண்டும் சீன நிதி உதவிகள் கோரப்படலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது. வரவு, செலவுத் திட்டத்துக்கு முன்னராக இவை நடைபெறுவதால் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. நவம்பர் 23 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் ஜனாதிபதி நிதியறிக் கையைச் சமர்ப்பிக்க விருக்கிறார்.

## புதிய பட்ஜட்டில் ஏழைகளுக்கு நிவாரணம்; பொதுச்சேவையாளர்களுக்குச் சம்பள உயர்வு

### ஏழைகளுக்கு நிவாரணம்

இம்முறை நிதி அறிக்கையில் ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் அம்சங்கள் இடம்பெறலாம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. பொதுத் துறை சேவையாளர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படலாம். வரவு, செலவுத் திட்டம் வருவதற்கு முன்னரே சிகரெட் மற்றும் மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு விட்டன.

ஜனாதிபதியின் புதிய பதவி ஏற்பினைத் தொடர்ந்து தமது அமைச்சரவை யில்சில மாற்றங்களைச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சரவையில் வரவிருக்கும் புதுமுகங்களில் முன்னாள் ஐ.தே.க. உறுப்பினர்கள் இருவரும் இடம்பெறலாம் என்று அந்தவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் கண்டி மாவட்டம் அப்துல்காதர் மற்றும் பதுளை மாவட்டம் லக்ஷ்மன் செனவிரட்ண ஆகியவர்களாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. ரவூப்ஹக்கீம், மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் டிலான் பெரேரா ஆகியவர்களும் அமைச்சர்களாகலாம் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

புதிய முகங்களை உருவாக்கும் முயற்சிகளில் முக்கியத்துவம் பெறும் இன்னொரு விடயம் என்னவென்றால் கடந்த புதன்கிழமை அமைச்சரவை எடுத்த தீர்மானமாகும். கற்றுக் கொண்ட பாடங்களும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு தனது விசாரணை கள் தொடர்பான இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பித்த தன் பின் 7 வாரங்களுக்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை

செப்ரெம்பர் 13 ,2010 திகதியிட்ட கடிதம் ஒன்றில் ஆணைக்குழு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு தெரிவித்துள்ள விவரம் என்னவென்றால், இந்த ஆணைக்குழுவின் கருத்துப்படி சில விஷயங்கள் அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளில் உடனடியாக நடவடிக்கைஎடுக்கப்படுமானால் மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் ஏற்படும். அவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாய் இருக்கும். ஆணைக்குழுவுக்குவழங்கப்பட்டுள்ள ஆணையில் எதிர்பார்க்கப்படும் தேசிய இணக்கப்பாட்டுக்கான செயற்பாட்டுக்கும் அது ஊக்கமளிப்பதாக விருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக்கு வெளிநாட்டமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தான் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்திருந்தவை பற்றி அமைச்சர் குறிப்பிட்டுள்ளவை சில வருமாறு:-

- காவலில் உள்ள ஆள்கள் தொடர்பான வழக்குகள் கூடிய வரை விரை வாகத் தீர்க்கப்படல், தடுப்பு முகாம்களில் மாற்றம் ஏற்படுமானால் குடும்ப உறுப்பினர்கள் எப்பொழுதுமே அறி விக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- அரசாங்கம் அறிக்கை மூலமாக நிலப்பிரச்சினைகள் தொடர்பாக தனியார் நிலங்கள் அரசாங்கத்தின் முகவர் அமைப்புகளின் குடியிருப்புகளுக்குப் பயன்படுத்தப் படமாட்டா என்பதைப் பொதுமக்களுக்கு உறுதியளிக்க வேண் டும்.
- சட்டவிரோத குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்ட போதிலும் முன்னர் மோதல்கள் இடம்பெற்ற இடங் களில் சட்டமும் ஒழுங்கும் பலப்படுத் தப்படுதல்.
- நிர்வாகம் மற்றும் மொழிப் பிரச் சினைகள் தீர்க்கப்படுதல்.
- சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவித்தல் மற்றும் வாழ் வாதார முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கல்.

இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் அரசாங்கத்தின் கொள்கைகளும் பிரதிபலிக்கவே செய்கின்றன.

அதிகாரமளிக்கப்படாத ஆயுதங்கள் சேகரிக்கப்படுவது கிழக்கு

**தமிழில்: கோகுலன்**

மாகாணத் தில் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது வடக்கிலும் தொடர்கின்றது. உயர் பாதுகாப்பு வலையங்கள் முன்னேற்றகரமாக குறைக்கப்பட்டு வருகின்றன. அங்குள்ள காணிகள் அவைகளுக்குரியவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அல்லது சமூக மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்கப்படுகின்றன.

சரணடைந்த 11,696 புலிகள் உறுப்பினர்களில் ஏறத்தாழ 5,120 பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழு தெரிவித்துள்ள முக்கிய விடயங்களில், கைதானவர்கள் தொடர்ச்சி யாக இடத்துக்கிடம் மாற்றப்படுவதால் அவர்கள் இருக்குமிடம் உறவினர்களுக் குத் தெரியாமல் இருக்கிறது என்ற விடயம் பிரதானமாகக் குறிப்பிட்டப்பட்டது என்பதாகும்.இதனைத் தீர்ப்பதற்கு பின்வரும் கருத்து வெளியிடப்பட்டது.

- காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரப்பட்டியல் ஒன்றை வெளியிடுவது.
- ஒருவர் விடுவிக்கப்பட்டால்மீண்டும் கைது செய்யப்படாத வகையில் சான்றிதழ் ஒன்றை வழங்குவது.
- சட்டங்களின் பொதுவான தாமதம் தொடர்பாக ஆராய்வது. (வழக்குத் தொடர்வது அல்லது விடுவிப்பதை விரைவு படுத்தல்)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 16 | | 02.11.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : | ஏகாதசி மு.இ 07.38 வரை |
| நட்சத்திரம் | : | பூரம் [illegible] |
| சுபநேரம் | : | 10.34-12.04 வரை |
| ராகுகாலம் | : | 03.04-04.34 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தில் சர்வாதிகாரம் கூடாது என்கிறார் கருணாநிதி



சென்னை, நவ.01

ஜனநாயகத்தில் சர்வாதிகாரமும், சர்வாதிகார ஆட்சியும் கூடாது. ஒரு கட்சியே - ஒருவரே தொடர்ந்து ஆள வேண்டும் என்று எண்ணுகிறவன் நானல்லன் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் நிபந்தனையின்றி அமைப்பு சாராத தொழிலாளர்களும் பயன் பெற அனுமதி வழங்கியதற்காக நன்றி அறிவிப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் செங்கல்பட்டு அருகே ரூபா 50 கோடியில் தமிழ்நாடு கட்டுமான உயர் பயிலகம் கட்டும் திட்டத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்து அவர் பேசியவை வருமாறு -

இந்த நாள் மிகமுக்கியமான நாள். கமுதியில் தேவர் குரு பூஜை நடைபெறும் நாள். தமிழகத்தில் உள்ள அனைத்துத் தலைவர்களும் அணிவகுத்துள்ளனர்.

நான் அந்த விழாவுக்குச் செல்லாதவன் அல்லன். இடையே உடல் நலிவுற்று ஓரிரு ஆண்டுகள் செல்லாமல் இருந்திருக்கலாம். தி.மு.க. ஆட்சியின்போது தேவர் நினைவிடத்தை நான் அமைத்துக் கொடுத்தேன்.

தேவர் சூளுரை மேற்கொண்டு எந்தத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டாரோ அவர்களின் நலனுக்காக நாமும் பாடுபடுகிறோம். தொழிலாளர்கள் எனக்குக் கூறுவது நன்றியல்ல, அது வாழ்த்து. தொழிலாளர்களின் வாழ்த்துகள் நிச்சயம் பலிக்கும்.

அமைப்பில் உள்ளோரையும், அமைப்புகளைச் சாராதோரையும் அரவணைத்து அவர்களையும் பயனாளிகளாக மாற்றுகிறோம். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 33 நலவாரியங்களில் 2 கோடியே 9 இலட்சத்து 89 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 41 ஆயிரத்து 651 உறுப்பினர்களுக்கு ரூபா 108 கோடி சிகிச்சைக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் இதய சிகிச்சை கூட அளிக்கப்படுகிறது.

சிகிச்சையால் உயிர் பிழைத்த குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை நன்றி கூறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. என்றாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இத்திட்டத்தைப் பழிக்கின்றனர்.

இதை எண்ணும்போது, அவர்கள் நலம் பெற என்ன திட்டங்களை நாம் அறிவிப்பது என்று திகைக்கின்றேன். அவர்கள் உடல் நலம் கெட்டால் காப்பாற்ற லாம். மன நலம் கெட்டால் என்ன செய்வது?

ஒருகட்சியே, ஒருவரே தொடர்ந்து ஆள வேண்டும் என்று எண்ணுகிறவன் நானல்லன், பலரும் வரலாம்.

ஜனநாயகத்தில் அதற்கு வழியும், முறையும் உண்டு. ஆனால், மக்கள் யார், யாரை விரும்புகின்றார்கள் என்பதுதான் முக்கியம்.

ஜனநாயகத்தில் சர்வாதிகாரமும், சர்வாதிகார ஆட்சியும் கூடாது. நான் மீண்டும் ஆட்சிக்கு வருவது என் கையில் இல்லை. அது நாட்டு மக்கள், தொழிலாளர்கள் கைகளில் உள்ளது.

நான் சீமான் வீட்டுப் பிள்ளையல்லன். எளிய சூழலில் வாழ்ந்ததால்தான் தொழிலாளர்களைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஏழைகளிடத்தில் அன்புடன் பழகுகிறேன் என்றால் அது பெரியார், அண்ணா காட்டிய வழி. சாதி, மதம் எனக்கு இல்லை.

நீங்கள் காலால் இட்ட கட்டளையை தலையால் செய்யும் தொண்டனாக என்றும் இருப்பேன். முதல்வர் என்ற கர்வத்தால் உங்களை மறக்கமாட்டேன். நான் என்றென்றும் உங்களின் தோழன், தொண்டன், உறவினன். நான் உங்களின் உடன் பிறப்பு. என்னோடு நீங்களும் இருக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.



தீபாவளி என்பது இலட்சுமியை வரவேற்கவும் வணங்கவுமான பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி குஜராத், அகமதாபாத்தில் விற்பனைக்காக இலட்சுமி சிலையைத் தயாரித்து அதற்கு வர்ணம் தீட்டுகிறார் பெண் ஒருவர்.

## இந்தியச் செய்திகள்

# இலங்கைக்கு விரைவில் பயணிகள் கப்பல் சேவை

### மத்திய அமைச்சர் வாசன்

சென்னை, நவ. 01

தூத்துக்குடிக்கும், இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை மிக விரைவில் தொடங்கும் - என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் கூறினார்.

மன்னார்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் வாசன் மேலும் கூறியவை வருமாறு -

தூத்துக்குடிக்கும், இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க இந்தியா - இலங்கை அதிகாரிகள் இடையே நடைபெற்ற பேச்சு திருப்தி அளிப்பதாக உள்ளது. இந்தப் பயணிகள் கப்பல் சேவை விரைவில் தொடங்கும்.

நாகையிலிருந்து, சென்னைக்கும், சிங்கப்பூருக்கும் இடையே இயக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து 1977 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. இதை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு, மத்திய அரசுக்கு தங்கள் கருத்துக்களை அனுப்பினால் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- இப்படி அவர் கூறினார்.

# சோனியாவிடம் இராஜினாமாக் கடிதம் கையளித்தார் மகாராஷ்டிர முதல்வர்

டில்லி, நவ. 01

மகாராஷ்டிர முதல்வர் அசோக் சவாண் தனது பதவியை இராஜிநாமாச் செய்கிறார் எனவும் அதற்கான கடிதத்தை சோனியா காந்தியிடம் கையளித்துள்ளார் எனவும் அறிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் இத்தகவலை அவர் தெரிவித்தார்.

மும்பையில் கொலாபா பகுதியில் கார்கில் படையினருக்கு வீடு ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பாக சவாண் இராஜிநாமா செய்துள்ளார்.

631 அடுக்குகளைக் கொண்ட இந்தக் குடியிருப்பில் சவாணின் மாமியாருக்கும் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியது. இதுகுறித்து நேரில் விளக்கம் அளிக்குமாறு சவாணுக்கு கட்சித் தலைவர் சோனியா காந்தி உத்தரவிட்டிருந்தார். இதற்காக சனிக்கிழமை டில்லி வந்த அவர், சோனியாவைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேசினார். பின்னர் தனது இராஜிநாமாக் கடிதத்தை அளித்தார் எனவும், இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்க வேண்டியது நீங்கள்தான் என்று சோனியாவிடம் கூறினார் எனவும் சவாண் தெரிவித்தார்.

இதனிடையே மகாராஷ்டிர முதல்வர் அசோக் சவாணை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது. இந்த விடயத்தில் அனுதாபத்துக்கே இடமில்லை. உடனடியாக அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய பின்னர் அப்போது முதல்வராயிருந்த விலாஸ் ராவ் தேஷ்முக் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக அசோக் சவாண் நியமிக்கப்பட்டார். 51 வயதாகும் சவாண், முன்னாள் மத்திய அமைச்சரும், மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான எஸ்.பி. சவாணின் மகனாவார்.

இது குறித்து காங்கிரஸ் பொதுச் செயலர் ஜனார்தன் திவிவேதிசெய்தியாளர்களிடம் கூறுகையில் -

கட்சித் தலைவர் சோனியா காந்தியிடம் அசோக் சவாண் தனது இராஜிநாமாக் கடிதத்தை அளித்துள்ளார். உடனடியாக மூத்த தலைவர்கள் பிரணாப் முகர்ஜி மற்றும் ஏ.கே. அந்தோனி ஆகியோரை அழைத்து இந்த விவகாரம் தொடர்பாக முழுமையான அறிக்கை அளிக்குமாறு சோனியா கேட்டுக் கொண்டார் - என்று கூறினார்.

# தமிழகத்தில் 6ஆவது முறையும் கலைஞர் கருணாநிதியே முதல்வர்

### துணை முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை

பசும்பொன், நவ. 01

தமிழகத்தில் 6 ஆவது முறையாக கருணாநிதி தலைமையில் தி.மு.க. ஆட்சி அமையும் என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

பசும்பொன்னில் நடைபெற்ற முத்துராமலிங்க தேவரின் பிறந்த நாள் மற்றும் குருபூஜை விழாவில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு தேவர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியவை வருமாறு -

இந்தத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி பலமாக உள்ளது. இந்தக் கூட்டணிக்கு எதிராக யார் யாரோ என்னென்னமோ செய்து பார்க்கிறார்கள். அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை.

நான் உறுதியாகச் சொல்வேன், தமிழகத்தில் 6 ஆவது முறையாக தி.மு.க ஆட்சியைப் பிடிக்கும். மீண்டும் கருணாநிதி முதல்வராக ஆட்சியில் அமர்வார்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# 70 'செல்போன்'களை உடலில் மறைத்து கடத்தி வந்த இலங்கைப் பெண் கைது

### தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பா என அதிகாரிகள் விசாரணை

ஆலந்தூர், நவ. 01

கொழும்பிலிருந்து சென்னைக்கு உடலில் செல்போன்களை மறைத்து வைத்துக் கடத்தி வந்த இலங்கைப் பெண்ணை சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர். அவருக்கு தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு உள்ளதா என அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து ஒரு விமானம் வந்தது. இதில் வந்த பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். அப்போது இலங்கையைச் சேர்ந்த ரீஸ்வியா (வயது - 20) என்ற பெண்ணின் உடைகள் சந்தேகப்படும்படியாக இருந்ததால் அவரைச் சுங்கத் துறை பெண் அதிகாரிகள் தனியறைக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினார்கள்.

அப்போது உடல் முழுவதும் செல்போன்களை வைத்து 'செலோ [illegible] காரிகள் கண்டுபிடித்தனர். அவரது உடலில் இருந்த 70 செல்போன்களை அதிகாரிகள் கைப்பற்றினர். மேலும் அவருடைய சூட்கேசில் இருந்து உயர் ரக 3 செய்மதிச் செல்போன்களைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர்.

காரணம், அவை தீவிரவாதிகள் பயன்படுத்துபவையாகும்.

இதுதொடர்பாக ரீஸ்வியாவை அதிகாரிகள் கைது செய்து அவருக்குத் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு உள்ளதா என்று அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் கொழும்பில் இருந்து வந்த மற்றொரு விமானத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்த சரவணன் (வயது - 35) என்பவர் ரூபா 20 லட்சம் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகள், டிஜிட்டல் கமராக்கள் ஆகியவற்றை கடத்தி வந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதுதொடர்பாக சரவணனை சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

இது பற்றி விமான நிலையச் சுங்கத் துறைக் கமிஷனர் பெரியசாமி செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

கடந்த சில தினங்களாக விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரிகள் நடத்திய அதிரடிச் சோதனையின் மூலம் ரூபா ஒரு கோடி மதிப்புள்ள தங்க பிஸ்கட்டுகள், செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் இலங்கைப் பெண் செய்மதிச் செல்போன் கடத்தி வந்துள்ளார். இது தீவிரவாதிகள் பயன்படுத்துவதாகும். இந்தச் செல்போன் யாருக்காகக் கடத்தி வரப்பட்டது.

இதன் பின்னணியில் உள்ளவர்கள் பற்றி விசாரணை நடத்த தனிப்படைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரை விமான நிலையச் சுங்கத் துறை மூலம் சுங்கத் தீர்வையாக ரூபா 2,327 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் மாதம் மட்டும் ரூபா 422 கோடி சுங்க வரி வசூலிக்கப்பட்டது. இந்தியாவில் முதன்முறையாக இவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

- இப்படி அவர் கூறினார்.

# அயோத்தித் தீர்ப்பை எதிர்த்து இந்து மகாசபை மேன்முறையீடு

### 10 ஆம் திகதி உச்சநீதிமன்றில் மனு

லக்னோ, நவ. 01

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலம் குறித்த வழக்கில் அலகாபாத் உயர் நீதிமன்று அளித்த தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய இந்து மகா சபை முடிவு செய்துள்ளது.

அந்த அமைப்பின் பல்வேறு பிரிவுகளும் ஒன்று சேர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளன. எதிர்வரும் 10 ஆம் திகதி மூத்த சட்டத் தரணி ஹரிசங்கர் ஜெயின் மூலமாக கட்சியின் பொறுப்பாளரான தினேஷ் சந்திர தியாகி உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்கிறார்.

இந்தத் தகவலை, இந்து மகா சபை உத்தரப் பிரதேச மாநிலத் தலைவர் கமலேஷ் திவாரி தெரிவித்தார்.

இந்த முடிவுக்கு அதிருப்திக் கோஷ்டி தலைவரான சுவாமி சக்கரபாணியும் ஒப்புதல் அளித்துள்ளார் என அவர் கூறினார்.

இந்து மகா சபை கட்சியின் தலைவர் பதவிக்கு ஹிமானி சர்வார், சுவாமி சக்கரபாணி, சந்திர பிரகாஷ் கவுசிக் ஆகிய [illegible] தலைவர்கள் உரிமை கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் சட்டத்துறை சார்ந்த விடயங்கள் வெளிவர வேண்டும்

## மாவட்ட நீதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

சட்டத்துறை சார்ந்த ஆக்கங்களை வெளியிடும் போது அவை சாமானிய மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். ஏனெனில் சட்டம் சார்ந்த விடயங்களை சட்டத் துறை சார்ந்தவர்கள் மட்டுமன்றி சாதாரண மக்களும் அறிந்திருப்பது அவசியமானது என்றார் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர்.

யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'நீதம்' மலர் வெளியீடும் வருடாந்தக் கலைவிழாவும் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே மாவட்ட நீதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சட்டத்துறை மாணவர்களால் 'நீதம்' எனும் மலர் வெளியிடப்படுவது சிறப்புக்குரியதாகும். சட்டம் என்பதை சட்டத் துறையினர் மட்டுமன்றி சாதாரண மக்களும் தெரிந்திருக்க வேண்டும்.

எனவே சட்ட ஆக்கங்கள் சாதாரண பாமரமக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் அமையப் பெற வேண்டும் என்பதேஎனது விருப்பம்.

சட்ட மாணவர்கள் சட்டத் துறையைத் தொழில் முயற்சிக்காக மட்டும் பயிலக் கூடாது. சமூக நலனில் அக்கறை கொண்டு சமுதாயப் பொறுப்புடன் அதனை மேற்கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பாகச் சட்ட மாணவர்கள் சிந்திக்க வேண்டும். யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை சட்ட பீடமாக மாற்றப் படவுள்ளமை மகிழ்ச்சிக்குரியது- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி ஜெரிமையா விஸ்வநாதன் உரை நிகழ்த்தும் போது-

சட்டத்துறைக்கு விடாமுயற்சி அவசியமானது. அதுவே அதிர்ஷ்டத்தையும் நல்ல பலனையும் தரும்.

சட்டத்துறை மாணவர்கள் துறை சார்ந்த நூல்களை அதிகளவில் வாசிக்க வேண்டும். அதன் மூலமே தமது துறைசார்ந்த தொழில் தகைமைக்கு ஏற்றவர்களகத் தம்மை மாற்றிக்கொள்ளமுடியும்.




'நீதம்' எனும் நூலினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதி பதி ஜெரிமையா விஸ்வநாதன் வெளியிட்டு வைக்க அதன் முதல் பிரதியை தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் பெற்றுக் கொள்வதனைப் படத்தில் காணலாம். (படம்:ரட்ணம்)

சட்டத்துறையில் உள்ளவர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை நூல்களைக் கொள்வனவு செய்து, தமது வீட்டில் நூலகம் அமைத்திட வேண்டும். அது அவர்களுக்கு அதிக பயனுடையதாக இருக்கும்.

நீதிபதிகளுக்கு நம்பகத் தன்மையுடையவர்களாகச் சட்டத்தரணிகள் விளங்க வேண்டும். நம்பகத் தகுதியுடைய சட்டத் தரணி என்ற எண்ணம் நீதிபதிகளின் உள்ளத்தில் உதிக்கக் கூடியவாறு அவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

சட்ட மாண வர்கள் இன்பம், துன்பம் என்பவற்றை எதிர்கொண்டு குருவைப் பணிந்து செம்மையரகத் தமது தொழிலை மேற்கொள்ளத் தயாராக வேண்டும்.

தொடர் யுத்தத்தின் மத்தியிலும் மனித உரிமைகள் மறுக்கப் பட்ட நிலையில் அதிலிருந்து மீண்டு எழுவோம். காலம் மாறும் எமக்கு நல்ல காலம் வரும் என்ற பாரதியின் எண்ணத்தில் நம்பிக்கை கொள்வோம்- என்றார்

இந்நிகழ்வில் சிரேஷ்ட சட்டத் தரணி இராஜகுலேந்திரா, யாழ் . பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமரன், சட்டத் துறைத் தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி,அரசியல் துறைப் பேராசிரியர் அ.வே.மணிவாசகர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (எ-14-86)

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் ஏதுமில்லை என்ற

# யாழ். அரசஅதிபரின் கூற்றுக்கு தமிழரசுக்கட்சி கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எவையும் இல்லை என்ற யாழ். அரசாங்க அதிபரின் கூற்றை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன் துறைக் கிளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக கண்டனத் தீர்மானம் ஒன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் நிறைவேற்றப் பட்டது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா 'உதயனு'க்குத் தெரிவித்த விவரம் வருமாறு:

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ''யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எவையும் இல்லை'' என்று கூறியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. அவர் அவ்வாறு கூறியிருந்தால் அவரது கூற்று வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்று.

வலிகாமம் வடக்கு மக்கள் கடந்த இருபது வருடங்களாக இடம்பெயர்ந்து பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவித்து வருகின்றனர். வலி.வடக்கு மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி நான் உயர் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தேன்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது.

இராணுவத்தினருடன் கலந்தாலோசித்து மக்களை மீளக்குடியமர்த்துமாறு அந்த இடைக்காலத் தீர்ப்பில் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா தலைமையில் இதற்கென குழுவொன்றும் நியமிக்கப் பட்டது. இந்தக் குழு மீள்குடியமர்வு தொடர்பாக எடுத்த தீர்மானங்கள் எவையும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் ''உயர்பாதுகாப்பு வலயங்கள் எவையும் யாழ். மாவட்டத்தில் இல்லை'' என்று கூறியிருந்தால் அதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நான் நேற்று முன்தினம் அரசாங்க அதிபரைச் சந்திக்க முயற்சித்தேன். ஆனால் சந்திக்க முடியவில்லை. அரசாங்க அதிபரின் கூற்றைக் கண்டித்து தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைக் கிளை எனது தலைமையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எமது கண்டனத்தீர்மானத்தை நான் அரசாங்க அதிபரிடம் நேரில் கையளிக்கவுள்ளேன் என மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தார். (ஒ-120)




வடமாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் வட மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் காரைநகர் பெரியமணலில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம் இது. (படம்: டர்னிகன்)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தை பலமானதாக மாற்ற உதவி செய்வேன்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம்,நவ.1

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துக்கு ஏற்படும் தடைகளை அகற்றி பலமான நிறுவனமாக இதனை மாற்ற என்னாலியன்ற முழு உதவிகளையும் செய்வேன்- இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நிறுவனம் நீண்டகாலமாகச் சரியான திசையில் செயற்படுகின்றது. இதன் ஆரம்பகால உறுப்பினர்களில் எனது தந்தையார் கே.சி.நித்தியானந்தனும் ஒருவர். சிறு வயது முதலே இந்த நிறுவனத்தில் ஒரு உறுப்பினராக நானும் இருந்திருக்கிறேன்.

எனவே இதனை எனது நிறுவனமாகக் கருத்தில் எடுத்துக் கொண்டு இந்நிறுவனத்துக்கு ஏற்படும் தடைகளை அகற்றி இதனையொரு பலமான நிறுவனமாக மாற்ற முழு உதவியையும் நிச்சயமாகச் செய்வேன்.

இந்த நிறுவனம் ஆரம்பிக்கப் பட்ட சமயத்தில் ஆயுதப் போராட்டம் பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தோம்.

இப்போது அது கலவரத்துடன் அது முடிந்தமுடிவாகிவிட்டது.

கடந்த காலங்களில் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளைத் திசை திருப்ப முயற்சிகள் நடந்தமை இனிமேல் இந்த நிறுவனம் சரியான பாதையில் பயணிக்கும்- என்றார். (எ-15)

## வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

ஊர்காவற்றுறை,நவ.1

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்தோருக்கும் இளையோருக்கும் 'சொண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வாழ்வாதார உதவிகள் நாளை செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன் போது 28 பயனாளிகளுக்கு இவ்வுதவிகள் வழங்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-325)

# வறுமை நிலையிலுள்ள 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், காலணிகள் வழங்கல்

தென்மராட்சி,நவ.1

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு அண்மையில் காலணிகளும் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களும் வழங்கப் பட்டன.

நீர்கொழும்பு ஒரியன்ஸ் லியோக் கழகத்தினர் இந்துக் கல்லூரி லியோகழகத்தின் ஊடாக இவற்றினை மாணவர்களுக்கு வழங்கினர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி லியோகழகத் தலைவர் ந.கமலப்பிரியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீர் கொழும்பு ஓரியன்ஸ் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பிளசி டஸ் பீற்றர், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸன், லியோ கழக ஆலோசகர் லயன் கே.பிரதீபன், இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-207)




## நீரிழிவுப் பரிசோதனை

தென்மராட்சி,நவ.1

கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள நீரிழிவு நோய் நிபுணர்களால் இம்மாதம் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி, கோப்பாய், சங்கானை ஆகிய லயன்ஸ் கழகங்களுடன் இணைந்து அந்தந்த இடங்களில் நீரிழிவுப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பரிசோதனை முகாம்களில் கலந்துகொள்ள விரும்பு[illegible] உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-207)

# காரைநகர் தியாகராஜா ம.விக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராசாவிடம் தொலைநகல் இயந்திரத்தை தனியார் வைத்தியசாலை உரிமையாளர் எஸ்.தனபாலசிங்கம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-டர்னிகன்)

காரைநகர்,நவ.1

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்துக்கு காரை. கலாசார மன்றத்தின் கனடாக் கிளையினர் பல்லூடக எறி கருவி ஒன்றை வழங்கி உள்ளனர்.

இந்தப் பல்லூடக எறிகருவி மூலம் மாணவர்களுக்கு பல்வேறு கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் தனியார் வைத்தியசாலை உரிமையாளரான எஸ்.தனபாலசிங்கம் பாடசாலையின் நன்மைகருதி தொலைநகல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி உள்ளார். (201-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் டெங்கு நோய்க்கு இவ்வருடம் 29 பேர் மரணம்

கொழும்பு, நவ.1

இந்த ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 2867 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதோடு அவர்களுள் 29 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஈ.ஜே.ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

மேலும் கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் 7 பேரும், மட்டக்களப்பு சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் 11 பேரும், பதியத்தலாவையில் ஒருவரும், திருகோணமலை, கிண்ணியா, கந்தளாய், தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களில் 11 பேரும் உயிரிழந்தனர் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ-22)

# திறப்பு விழா ஒத்திவைப்பு

கிளிநொச்சி,நவ.1

இன்று நடைபெறவிருந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக அதன் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (க)

# ஊவா மாகாண பொலிஸ்மா அதிபராக சுஜித் ஜயசுந்தர பதவியேற்பு

கொழும்பு,நவ.1

ஊவா மாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக சுஜித் ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாணத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக மூன்றாண்டுகள் பணிபுரிந்த சுஜித் ஜயசுந்தர, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராகப் பதவியுயர்வு பெற்று கடந்த சனிக்கிழமை முதல் தனது பதவியை ஊவா மாகாணத்தில் பொறுப்பேற்றுள்ளார்.

1985 ஆம் ஆண்டு மே மாதம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பணியில் சேர்ந்த ஜயசுந்தர கடந்த 25 வருட காலமாக பொலிஸ் துறையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளராகவும் கடமையாற்றிய அவர் கொழும்பு வடக்கு, வடமேல் மாகாணம் ஆகியவற்றின் பிரதி பொலிஸ்மா அதிபராகவும் பணிபுரிந்துள்ளார்.

கண்டி தர்மராஜா கல்லூரியின் பழைய மாணவரான சுஜித் ஜய சுந்தர ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தகப்பட்டத்தையும் பெற்றுள்ளார். (ஐ-5)

# தரம் 5 மாணவர்களுக்கு அனுமதி; வெட்டுப்புள்ளி அடுத்த வாரம்

கொழும்பு,நவ.1

இந்தமுறை இடம்பெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பிரபல பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளும் வெட்டுப் புள்ளிகள் நவம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவிக்கிறது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பிரபல பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக இத்தினங்களில் விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டு வருவதோடு அதன் பின்னர் அப்பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் அவசியப்படும் புள்ளி மட்டங்கள் தீர்மானிக்கப்படும் எனவும் கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன கொழும்பின் சிங்கள ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-22)

# நாடக விழாவும் நாட்டிய விழாவும்

கொழும்பு, நவ. 1

தேசிய நாடகவிழாவும் நாட்டிய விழாவும் இன்று தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் தினமும் மாலை 6.30 மணிக்கு ஜோன் டீ.சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த விழாவில் 30 நாட்டியங்கள் நடைபெறும். அவற்றுள் 7 நீண்ட நாட்டியங்கள், 19 குறு நாட்டியங்கள் 3 தமிழ் நாட்டியங்கள், ஒரு வரவேற்பு நாட்டியம் ஆகியன உள்ளடங்குகின்றன.

தேசிய உரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைத்திணைக்களத்தின் தேசிய நாட்டிய இணைப்புச் சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

# 15 வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு இலங்கையில் கிளைகள் ஆரம்பிக்க அழைப்பு

கொழும்பு,நவ.1

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்குமாறு வெளிநாடுகளிலுள்ள 15 வரையான பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கனவே தாம் அழைப்பு விடுத்துள்ளதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கொழும்பில் சிங்கள ஊடக மொன்றுக்குத் தெரிவித்தார்.

அதற்கமைய அவ்விதம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் சார்ந்த ஒரு சில பல்கலைக்கழகங்களாவது இந்நாட்டில் நிறுவப்படுவது தொடர்பான அடிப்படைச் செயற்பாடுகள் இடம்பெறக் கூடுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் திஸநாயக்க நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ஐ-22)

# கடலில் காப்பாற்றப்பட்ட யானை கிணற்றில் தவறிவீழ்ந்து மரணம்

கந்தளாய், வான்எல, ஜயந்திபுர பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பல்வேறு இடையூறுகளை விளைவித்து வந்த ''கரபட்டி அலியா'' எனும் ஆண் யானை கடந்த செவ்வாய்க்கிழமை அப்பிரதேசத்திலுள்ள பாதுகாப்பற்ற கிணறொன்றில் வீழ்ந்து மரணமாகியுள்ளதாக வன விலங்குத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த யானை மூன்று மாதங்களுக்கு முன்பு சாம்பூர் கடலில் சிக்கி மூழ்கவிருந்த போது வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகளும் பொதுமக்களும் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் அதைக் காப்பாற்றினர். அதன் பின் அதன் கழுத்தில் பட்டியொன்றை அணிவித்து காட்டுக்குள் கொண்டுசென்றுவிட்டனர்.

எனினும் கடந்த இரு மாதங்களாக மீண்டும் ஜயந்திபுர பிரதேசத்துக்கு அவ்வப்போது தலைகாட்டிய இந்த யானை மக்களின் வீடுகளுக்கும் பயிர்களுக்கும் சேதம் விளைவித்து வந்தது.


எனவே யானையை மீண்டும் பிடிப்பதற்கு வன விலங்குத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

சுமார் 35 வயது கொண்ட 9 அடி உயரமான இந்த யானையின் பிரேதப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு வில்கமுவ வனவிலங்குப் பிரிவின் கால்நடை'வைத்தியருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் யானைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் ஜே.ஏ.பீ. விஜயகுமார தெரிவித்தார்.

# தாய்மண் மீது அடங்காப் பற்றுக் கொண்டு இறுதிவரை போராடிய பண்டார வன்னியன்

**வன்னி இராச்சியத்தை ஆட்சிபுரிந்த தமிழர்களின் வீரம் செறிந்த வரலாற்றில் நிலைத்து நிற்கும் பண்டார வன்னியனின் 207 ஆவது நினைவு தினம் நேற்றாகும். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

ஒரு நாட்டில் ஓர் இனத்தின் வரலாற்றுப்பாதைகளைப் புரட்டினால் அதில் பல்வேறு உணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதினை எவராலும் மறுக்க முடியாது. அதுவும் இலங்கைத் தீவில் தமிழினத்தின் வரலாறுகள், துன்பங்கள், துயரங்கள் நிறைந்திருந்தாலும் வீரஞ்செறிந்த நிகழ்வுகளும் ஏராளம் நடந்தேறியுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இராவணனின் வரலாறு, அதன் பின்பு அனுராதபுரத்தில் நீதி தவறாமல் 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்த எல்லாளன் வரலாறு. யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலியனின் வரலாறு, வன்னியை ஆண்ட மாவீரன் பண்டார வன்னியன் வரலாறு என்பன உயர்ந்தவை. இவர்களின் வரலாற்றை மீட்டுப் பார்த்தால் அதில் பல புனிதத் தன்மைகள் புலப்படுகின்றன. நாம் பண்டார வன்னியனின் வரலாற்றினை அவரது நினைவு நாளில் நிலை நிறுத்திக் கொள்வோம்.




இலங்கையில் புராதன காலத்தில் காணப்பட்ட இராச்சியங்களில் அடங்காப்பற்று எனப்படும் வன்னிராச்சிய வரலாறுகள் வித்தியாசமானவை. இலங்கையில் வடபகுதியின் வடக்கே ஆனையிறவு பரவைக் கடலையும் கிழக்கே முல்லைத்தீவுக் கடலையும், தெற்கே நுவரகலாவிய மாவட்டத்தையும் மேற்கே மன்னார் கடலையும் எல்லைகளாகக் கொண்ட பிரதேசமே அடங்காப்பற்று எனப்படும் வன்னி ஆகும். இந்த வன்னிப் பிரதேசத்தில் ஆதிகாலத்தில் வேடர்களும் இராவணன் பரம்பரையைச் சேர்ந்த தமிழர்களும் வாழ்ந்ததற்கான தொல்லியல் வரலாறுகளும் வரலாற்றுச் சின்னங்களும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் வாழ்ந்த பூர்வீக குடிகள் சுதந்திரமாக இருந்தனர். புவியியல் அமைப்பு, சூழல், சமூக வாழ்க்கை முறை காரணமாக அவர்கள் யாருக்கும் அடி பணியாமல் இருந்தனர். யாழ்ப்பாண ஆட்சியினருக்கோ, சிங்கள ஆட்சியினருக்கோ அடங்காமல் இருந்த பிரதேசம் என்பதால் இப்பகுதி ''அடங்காப்பற்று'' எனப் பெயர் பெற்றது.

இவ்வாறு சிறப்புப் பெற்ற அடங்காப்பற்று எனப்படும் வன்னி இராயச்சியத்தை ஆரம்பத்தில் ஆண்ட வன்னியர்கள் பனங்காமத்தை தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்பு முல்லைத்தீவைப் பிரதான இடமாக மாற்றினர். இந்த வன்னி இராச்சியத்தை இரண்டு வகையானவர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. வன்னியர்கள் எனப்படுவோரும் மற்றும் மாப்பாணர்களும் ஆட்சி புரிந்தனர்.

இவ்வாறான சூழ்நிலைகளில் கி.பி. 1505ஆம் ஆண்டு இலங்கைக்குள் நுழைந்த போர்த்துக்கேய இனத்தவர்களால் வன்னியின் செட்டிக்குளம், மன்னார் போன்ற பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. இதன் பின்பு கி.பி. 1782ஆம் ஆண்டு ஜூலை மாதம் லெப்ரினென் நாகெல பொது மன்னிப்பளித்தபோது சின்னநாச்சி என்பவருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது. முல்லைத்தீவிற்கு திரும்பிச் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார். இவ்வாறான சூழ்நிலைகளில் பண்டாரவன்னியனின் தாயின் பெயர் சின்னநாச்சியாக இருந்திருக்கலாம். சுவாமி ஞானப்பிரகாசரின் பரம்பரைக் குறிப்பின்படி குழந்தை நாச்சனுடைய மகன் பண்டாரவன்னியன் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் பண்டாரவன்னியனின் ஆள்புலம் முல்லைத்தீவு வட்டுவாகல், முள்ளியவளை, ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களாக இருந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

[illegible] 1796ஆம் ஆண்டு இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமாகின்றது. ஆங்கிலேயர்கள் கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியங்களை இலகுவாக கைப்பற்றிக் கொண்டனர். ஆயினும் கி.பி. 1800ஆம் ஆண்டு பனங்காமத்தில் படைப்பிரிவு ஒன்று இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. பண்டாரவன்னியன் வன்னியில் கலகங்கள் செய்ததன் காரணமாக ஒல்லாந்தரினால் பதவி நீக்கம் செய்யப்பட்டு பின்னர் ஆங்கிலேயர்களின் மன்னிப்பின்பேரில் வன்னியில் ஒரு சிறு பிரிவிற்கு தலைவனாக நியமிக்கப்பட்டான். ஆனால் பண்டாரவன்னியன் ஆங்கிலேயர்களைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றப் போவதாகச் சபதம் செய்து மீண்டும் கலகங்கள் செய்ய ஆரம்பித்தான்.



பண்டாரவன்னியன் பாரிய படையெடுப்பினை மேற்கொண்டு வடபகுதி வன்னி முழுவதையும் தனது ஆட்சியின்கீழ் கொண்டுவந்ததுடன் முல்லைத்தீவையும் கைப்பற்றினான். மேலும் அவனது படையினர் கொட்டியாரத்தையும் கைப்பற்றினர். பண்டாரவன்னியன் அங்கும் சில தனது படை வீரர்களை நிலைகொள்ளச் செய்தான். ஆயினும் குறுகிய காலப்பகுதியில் ஆங்கிலேயர்கள் மீளவும் இதனைக் கைப்பறியதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலைகளில் பண்டாரவன்னியன் 1803ஆம் ஆண்டு கற்சிலை மடுவில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதனை நன்கு அறிந்த ஆங்கிலேயத் தளபதி கப்டன் டிறிபேர்க்கின் தலைமையிலான ஆங்கிலப் படைகள் கி.பி. 1803ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் மன்னாரில் இருந்து கற்சிலைமடுவுக்கு வந்து கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தன. சற்றும் எதிர்பாராத பண்டாரவன்னியனும் அவன் சார்ந்த படைகளும் இதனால் அதிர்ச்சியடைந்தன. இச்சண்டையிலே பண்டாரவன்னியன் தனது இரு கரங்களிலும் வாளேந்திக் கடுமையாகப் போரிட்டாலும் அவன் கற்சிலைமடுவில் வீரமரணடைந்தான். பண்டாரவன்னியனை போரிலே தோற்கடித்தமைக்கு கப்டன் டிறிபேர்க்கிற்கு பண்டாரக்குளம் பரிசாக வழங்கப்பட்டது. பண்டாரவன்னியன் இம்மண்ணிலே மரணித்தாலும் ஒவ்வொரு தமிழர்களது மனங்களிலும் அவன் ஓர் வீரனாக வாழ்ந்து வருகின்றான் என்பதனை எவராலும் மறுக்க முடியாது. எனவே இந்நாளில் அவரைப் போற்றி நினைவுகூருவோம்.

**எம்.எம்.ரதன்**
உப தலைவர்
வவுனியா நகரசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உதவிகோருகிறது கிளி.வைத்தியசாலைப்பேரவை

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை நோயாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வைத்தியசாலையின் சூழலைச் சுகாதாரமான முறையில் பேணவும் தொண்டு நிறுவனங்கள், கொடையாளர்கள் ஆகியோரின் உதவியை வேண்டியுள்ளது.

இது தொடர்பாக பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மீண்டும் தனது பணிகளை ஆரம்பித்து எமது பிரதேச மக்களுக்கு நிறைவான சேவையினை வழங்கி வருகின்றது. வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவையும் வைத்தியசாலைக்குத் தேவையான ஆதரவுப் பணிகளையும், நோயாளர்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைத்திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தியும் வருகின்றது.

தற்போது கிளிநொச்சியில் அதிகளவிலான மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளதாலும் பருவமழை ஆரம்பித்துள்ளதாலும், நாளாந்தம் வைத்தியசாலைக்கு வரும் வெளி நோயாளர் எண்ணிக்கையும், விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அத்துடன் பல்வேறு நோய்களுக்காக நடத்தப்படும் கிளினிக்கிலும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இந்தநோயாளர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் வைத்தியசாலை உட்புற வெளிப்புற சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் வைத்தியசாலையும், மேம்பாட்டு பேரவையும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றன. அத்துடன் விரைவில் வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட வேலை சீன அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த வேலையின் போது ஏற்படும் மாசுக்கள் சுத்திகரிப்பு வேலைகளை அதிகரிக்கவுள்ளது. எனவே சுத்திகரிப்புப் பணிகளை இலகுவாக மேற்கொள்ளவும் வைத்தியசாலை சூழலைச் சுத்தமாக வைத்திருக்கவும் சுத்திகரிப்புக்குத் தேவையான பொருள்களைக் கொடைவள்ளல்கள், பரோபகார எண்ணம் கொண்டவர்கள் மனித நேய எண்ணம் கொண்ட தொண்டு நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை வேண்டி நிற்கிறது.

மாதம் ஒன்றுக்குத் தேவையான பொருள்களின் பட்டியலும் அளவும் இங்கு தரப்படுகிறது. உதவி புரிவோர் பொருளாக வழங்கின் நேரடியாக மேம்பாட்டுப் பேரவையிடமும், பணமாக வழங்கின் மக்கள் வங்கி - கிளிநொச்சியிலுள்ள மேம்பாட்டு பேரவையின் கணக்கு இலக்கம் 165 0060092 மூலமாகவும் வழங்கி உதவும் வண்ணம் வேண்டுகின்றோம். தங்களின் உதவிக்காக வைத்திய மேம்பாட்டுப் பேரவை என்றும் நன்றியுடையதாக இருக்கும் என்றுள்ளது.

தேவையான பொருள்களின் பட்டியல் மாதம் ஒன்றுக்கு

பென்ரோச் பற்றி - 50, நடுத்தர பற்றி - 25, லைசோல் - 32, மாபிள் கிளீனர் - 86, விம் சோப் - 100, விம் பவுடர் - 100, மொப்பர் - 20, வைப்பர் - 15, சோப் - 110, காபிக் - 90, எயார்பிறஷ்னர் - 35, சேபெக்ஷல் 1 கிலோ - 25, தும்புத்தடி - 30, சம்போ போத்தல் - 15, ரொய்லற் பிறஸ் - 40, ரொய்லற் பிறஸ் (பெரிது) - 5, கிளாஸ் கிளினர் - 50, லைபோய் சோப் (பெரிது) - 50, பைநோல் - 15, கைபிறஷ் - 10, சேவிங் பிளேட் (பெட்டி) - 20, டோச் பற்றி - 40, ''டஸ்ப் பின்'' பாக் - 250, சேவிங் செட் - 5, டெற்றோல் 300 மில்லி லீற்றர் -5, றபர் சீற் (மீற்றர்) - 10, மினறல் வோட்டர் 5 லீற்றர் - 10. (க)



பச்சிலைப்பள்ளி முன்பள்ளி மாணவர்களுக்கு பற்சுகாதாரத்தைப் பேணும் பொருட்டு பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் சுகாதாரப் பொருள்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: சோபா, வாணி)

## வவுனியா மெனிக்பாமில் உள்ள மக்களை வேறு முகாம்களுக்கு இடமாற்ற நடவடிக்கை

வவுனியா, நவ.1

வவுனியா மெனிக்பாம் முகாமில் உள்ள மக்கள் கதிர்காமம், ஆனந்தகுமாரசாமி ஆகிய முகாம்களுக்கு இடமாற்றப்பட்டால் பராமரிப்பு சுலபமாக இருக்கும். அந்த மக்களுக்கும் ஆரோக்கியமாக இருக்கும்.

நிலைமையை உணர்ந்து அந்த முகாம் மக்கள் எமக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா ஆனந்தகுமாரசாமி, கதிர்காமம் ஆகிய முகாம்களில் இருந்த மக்களில் அனேகமானவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் அந்த இரண்டு முகாம்களிலும் 3 ஆயிரம் வீடுகள் வெறுமையாக உள்ளன.

மெனிக்பாம் முகாமில் ஆக அறுநூறு குடும்பங்களே உள்ளன. ஆனால் அங்குள்ள கொட்டில்கள் யாவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இந்நிலையில் கதிர்காமம், ஆனந்தகுமாரசாமி முகாம்களில் உள்ள கொட்டில்கள் நல்ல முறையில் உள்ளன.

எனவே மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மெனிக்பாமில் உள்ள மக்கள் வெளியேறி இந்த இரண்டு முகாம்களுக்கும் வந்து குடியேற வேண்டும். அவ்வாறு குடியேறினால் பராமரிப்புச் சுலபமாகவும் அவர்களுக்கு ஆரோக்கியமாகவும் இருக்கும்.

இந்நிலைமையினை உணர்ந்து அந்த மக்கள் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (க-9)

## பாலாவியில் மீள்குடியமர்வு

வண்ணை, நவ.1

வன்னி, பாலாவிப் பிரதேசத்தில் எட்டுக் குடும்பங்கள் மட்டுமே இதுவரை மீளக்குடியமர்ந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போருக்கு முன்னர் 42 குடும்பங்கள் அப்பகுதியில் குடியேறி கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தனர். குருநகர் மற்றும் வேலணைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே அப்பகுதியில் குடியேறி வாழ்ந்ததாகவும், அவர்களில் குருநகரைச் சேர்ந்த 8 குடும்பங்கள் மட்டுமே அங்கே சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாலாவியில் மீளக் குடியமர்ந்துள்ள மேற்படி குடும்பங்களுக்கு இன்னமும் அரசோ தனியார் நிறுவனங்களோ முன்வந்து நிவாரணங்கள் வழங்கவில்லை என எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கவலை தெரிவிக்கின்றனர். (க-160)

## கிரவல் புழுதியில் குளிக்கும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள்

முல்லைத்தீவு, நவ.1

மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் பயணம் செய்யும் பிரயாணிகள் கிரவல் புழுதியால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்ளுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முக்கியமான வீதியாக விளங்குவது மாங்குளம் - முல்லைத்தீவு வீதி. ஆனால் இந்த வீதி சீரான முறையில் திருத்தியமைக்கப்படாது வெறுமனே கிரவலால் மூடப்பட்டுள்ளது. இதனால் இந்த வீதியில் பயணிக்கும் பிரயாணிகள் கிரவல் புழுதியில் குளிக்க வேண்டிய அவலத்தில் உள்ளனர். இவர்களின் ஆடைகளும் கிரவல் புழுதியின் நிறத்திற்கு மாறிவிடுகின்றன. அத்துடன் வீதியின் மோசமான நிலை காரணமாக பஸ்வண்டிகளும் அடிக்கடி பழுதாகி இடைவழியில் தவம் கிடக்கின்றன.

அத்துடன் புதுக்குடியிருப்பு முதல் ஒட்டுசுட்டான் ஊடாக ஒலுமடு வரைக்கும் வீதிக்குத் தார் ஊற்றப்படாமல் உள்ளது. தினமும் ஏராளமான வாகனங்கள் இந்த வீதியில் பயணம் செய்வதால் பிரயாணிகள் மட்டுமன்றி வீதியோரத்தில் உள்ள வீடுகளும் அதில் வசிக்கும் மக்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர். (க-500)




## மூன்று மாதங்களின் பின் மூன்று உறுப்பினர்களுடன் நடைபெற்ற வவுனியா நகரசபைக் கூட்டம்

வவுனியா, நவ.1

வவுனியா நகரசபைக் கூட்டம் மூன்று மாதங்களின் பின்னர் மூன்று உறுப்பினர்களுடன் நடைபெற்றுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா நகரசபையின் கூட்டங்கள் எட்டு உறுப்பினர்களின் எதிர்ப்புக் காரணமாகக் கடந்த ஜூலை மாதத்திற்குப் பின்னர் நடைபெறவில்லை. இதனால் சபையின் செயற்பாடுகளும் தடைப்பட்டிருந்தன.

இந்த நிலையில் சபைக் கூட்டம் மூன்று உறுப்பினர்களின் ஆதரவுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்குச் சட்டத்தில் இடம் உண்டெனச் சபைத் தலைவர் தெரிவித்தார்.

கடந்த கூட்டத்தின்போது சபைத் தலைவருக்கு எதிராக அதிக உறுப்பினர்கள் செயற்பட்ட போதிலும் உப தலைவரும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் முனவரும் நடுநிலை வகித்தனர்.

இந்நிலையில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழுவின் முன்பு உறுப்பினர்கள் முன்வைத்த 29 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இதுவரை முடிவுகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இதனால் தற்போது நகரசபைக் கூட்டம் கூட்டப்படுவது முறையற்றது எனக் கூறிக் கொண்டு புளொட் அமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும், தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த மூவரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த இருவரும் நகரசபை வளாகத்தில் கூடி நின்றனர்.

எனினும் தலைவருக்குத் தாம் ஆதரவளிப்பதாக உப தலைவர், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஆகியோர் தெரிவித்ததையடுத்து உள்ளூராட்சிச் சட்டம் 255 இன் 26 ஆவது பகுதியின் முதலாவது பிரிவின் பிரகாரம் கூட்டம் நடத்தப்படலாமெனத் தலைவர் அறிவித்தார். இதைத் தொடர்ந்து மூன்று உறுப்பினர்களுடன் கூட்டம் ஆரம்பித்தது. இதில் கடந்த 03 மாத காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த அனைத்து வகையான செலவினங்களை அங்கீகரிப்பதற்கான தீர்மானத்தை உப தலைவர் முன்மொழிய முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் வழி மொழிந்தார். (க)

## சொந்த மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய மாணவர்களை உருவாக்குதல் அவசியம்

### கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர்

கிளிநொச்சி,நவ.1

சொந்த மாவட்ட மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய மனப்பாங்குடைய மாணவர்களை உருவாக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ப.ஜெயராஜா தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற றோயல் கல்வி நிலைய வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் இவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- இத்தனைபேரிழப்புகளுக்குப் பின்னரும் பெற்றோரும், மாணவர்களும் கல்விச் செயற்பாட்டில் காட்டும் ஆர்வமும், உற்சாகமும் வியப்பைத் தருகின்ற போதும் எம்மை நிலைப்படுத்த எம்மிடம் எஞ்சியுள்ள ஒரு விடயம் கல்வி என்பதால் மகிழ்ச்சியாய் உள்ளது. எமது மாவட்டத்தில் கற்று உயர்ந்தவர்கள் நிறையவே உள்ளனர். எனினும் அத்தகையவர்கள் எமது மாவட்டத்தையும், மக்களையும் நேசித்து சேவையாற்றும் மனப்பாங்கு உடையவர்களாக உருவாக்கப்படல் வேண்டும் என்பதே முக்கியமானது. எமது மாணவர்களும் இத்தகைய மனப்பாங்குடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அது மாத்திரமின்றி மாணவர்கள் இன்றைய உலகில் எதிர்கொள்ளும் சவால்களான ஆங்கில அறிவு, கணனிப் புலமை என்பவற்றைப் பெறுவதற்கு தனியார் கல்வி நிலையங்கள் தங்கள் நிறுவனங்களில் கணனிப் பிரிவை உருவாக்க முன்வர வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார்.சிறப்பு அதிதிகளாக கணக்காளர் ப.ஜெயராஜா, வைத்தியகலாநிதி சுகந்தன், மற்றும் பங்குத் தந்தை ஜேம்ஸ்நாதர், சைவக் குரு முதல்வர் இரத்தினேஸ்வரக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வுக்கு றோயல் கல்வி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.குமார் தலைமை வகித்தார்.

முள்ளியவளைக் [illegible] மரணித்த ஆசிரியர் சசிராஜ நினைவாக அரங்கம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. (க-301)

## யாழ்.பஸ்சேவை சீராக இயங்காததால் சிரமங்களை அனுபவிக்கும் மீள்குடியேறிய மக்கள்

முல்லைத்தீவு, நவ.1

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்கள் குடியேறிய சில பகுதிகளுக்கான பஸ்சேவை ஒழுங்காக நடைபெறாமையால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கற்சிலைமடு, பேராறு, கெருடமடு, மன்னாகண்டல் ஆகிய பகுதிகளுக்கான பஸ் சேவையே ஒழுங்காக இடம்பெறுவதில்லையென இப்பகுதி மக்கள் குறைகூறுகின்றனர்.

முக்கியமாகக் காலை 6.30 மணிக்குப் புறப்படும் யாழ்ப்பாணத்திற்கான பஸ்சேவை ஒழுங்காகவும் உரிய நேரத்திலும் இடம்பெறுவதில்லையென இந்த மக்கள் முறையிடுகின்றனர். இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களில் அநேகமானோர் அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று வருபவர்கள். இதனால் இந்தப் பஸ்சேவை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

காலை 6.30 மணிக்கு இங்கிருந்து புறப்படும் பஸ்வண்டியை எதிர்பார்த்து மக்கள் 5 மணிக்கே ஆயத்தமாகி பொருள்களுடன் காத்து நிற்கின்றனர். ஆனால் 7.30 மணி வரை காத்து நின்றும் பஸ் வராததால் வேறு வாகனங்களுக்கு 200, 300 ரூபா செலவழித்து ஒட்டுசுட்டானுக்குச் செல்ல வேண்டிய அவல நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். அத்துடன் ஒரே பஸ் வண்டியில் ஏறிச் செல்ல வேண்டியவர்கள் மூன்று நான்கு இடங்களில் ஏறி இறங்க வேண்டியுள்ளது. இதனால் இவர்களின் நேரமும் வீணாகின்றது.

ஆகவே இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு காலையில் கற்சிலைமடு ஊடாக பேராறு, மன்னாகண்டல் வரை சென்று திரும்பி யாழ்ப்பாணம் செல்வதை இந்த பஸ்வண்டி தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபருக்கு மக்கள் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவில் நூல் நிலைய கட்டடப்பணி பூர்த்தி

தென்மராட்சி,நவ.01

சாவகச்சேரி நகரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட நுணாவில் பொதுநூல் நிலைய மேல்மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது. இக்கட்டடம் நவம்பர் 5ஆம் திகதி வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-207)


யா/விடத்தற்பளை
காமலாசனி வித்தியாலய
சமூகத்தின் பாராட்டு வாழ்த்து



செல்வன்
சிவஞானலிங்கம்
யாதவன்

2010, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளையும், மாவட்டநிலை 11 இனையும் பெற்று எமது பாடசாலைக்குப் புகழ் சேர்த்த சி.யாதவனையும், 75 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப்பெற்ற ஏனைய மாணவர்களாகிய,

சொ.மதுஷன்-130 ந.நிதுர்ஜா-99
த.கஜானன்-128 ந.விதுர்ஜா-95
செ.திவ்வியா-117 க.நிதர்சன்-95
சி.சிவலக்சியா-115 அ.சிவதர்சினி-90
பா.தர்சிகா-110 மு.பிரிஷானி-78

ஆகியோரைப் பாராட்டுவதுடன், இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியை திருமதி க.நவதீசன் மற்றும் இவ்வெற்றிக்கு உறுதுணையாகவிருந்த அனைவரையும் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.



பாராட்டி வாழ்த்துகிறோம்



இராசதுரை-செல்வமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி சாஜிதா
(யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமையையும் பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தை வகித்தமையையும் பாராட்டி மகிழ்வதோடு இம்மாணவியின் பெறுபேற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து நெறிப்படுத்திய கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் அன்பழகன் கல்வி நிலைய ஆசிரியர்கள் அல்லும் பகலும் அயராது வழிப்படுத்திய அப்பா, அம்மா அனைவருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவர் மேன்மேலும் கல் வியில் உயர்ந்து பல பட்டங் களைப் பெற்று பார்போற்ற வாழ எல்லாம் வல்ல இறைவனின் நல்லருளினை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மூர்த்தி சித்தப்பா, சித்தி,
தேவி அத்தை, குட்டி மாமா,
ராசன் சித்தப்பா.

வரணி இயற்றாலை,
வரணி.






உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2169 திகதி 30-10-2010

ஆங்கில எழுத்திற்கும் A

வெற்றி எண்கள் 01 08 16 68

போனஸ் இல: 29

ஜக்பொட் பரிசு ரூ. 20,033,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 189813 | 20/- | 3,796,260/- |
| 2 இல | 13566 | 100/- | 1,356,600/- |
| 3 இல | 273 | 1,000/- | 273,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7438 | 40/- | 297,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 532 | 1,000/- | 532,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,033,950/- | - |
| 1 இல + போனஸ் இல | 9030 | 100/- | 903,000/- |
| 2 இல + போனஸ் இல | 421 | 500/- | 210,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 340 | 200/- | 68,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,031,380/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 221466 | | 8,631,380/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 302477942-8-28 |
| இரத்தினபுரி | 302479294-5-32 |
| குருநாகல் | 302473007-1-14 |
| நுவரெலியா | 302476359-0-38 |
| மட்டக்களப்பு | 302495178-6-34 |
| குருநாகல் | 302473371-3-21 |
| கண்டி | 302481880-9-23 |
| காலி | 302488488-4-45 |
| அம்பாந்தோட்டை | 302475104-3-16 |
| புத்தளம் | 302490013-6-31 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 20,551,675/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 03 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.




அபிவிருத்தி லொத்தர் சபை


# இந்த நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளே யாழ்.நூலகச் சம்பவம் இதனையே உறுதிசெய்துள்ளது

### சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.01

யாழ்.பொது நூலகத்தில் கடந்தவாரம் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் மேற்கொண்ட அடாவடித்தனத்தின் இலங்கை அரசினால் இரண்டாந்தரப் பிரஜைகளாகத் தமிழ் மக்கள் நடத்தப்படுவது மீளவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேசிய நல்லிணக்கத்தை இந்த அரசால் எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்-எனக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஊடகமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேட்டியின்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என அரசாங்கம் சொல்லி வருகிறது. ஆனால், அதற்கான எந்த முயற்சியும் அரசினால் மேற்கொள்ளப்படவில்லை.

தென்பகுதி மக்களை வட பகுதிக்கு அனுப்பி சிங்கள மக்கள் அதிகாரமுள்ளவர்கள் என்பதனை தமிழ்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதனை நிரூபிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் வெளிப்பாடாகவே கடந்த வாரம் யாழ்.பொதுநூலகத்தில் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் அடாவடித்தனமாக நடந்து கொண்டனர். ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றுவதாகக் கூறி தென்னிலங்கைப் பயணிகள் சிலர் நடந்துகொண்ட இந்த அடாவடித்தனம் குறித்து விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

யாழ்.நகரிலுள்ள விடுதிகள் மற்றும் தங்குமிடங்களில் தங்கிவிட்டு, தாம் இராணுவத்தினரின் உறவுகள் எனக்கூறி தங்குமிடத்துக்கான கட்டணத்தையும் சிங்கள மக்கள் செலுத்த மறுத்துவிடுகின்றனர். அத்துடன் பாடசாலைகள் அரச கட்டடங்களிலும் தென்பகுதி மக்கள் தங்கிச் செல்கின்றனர். இதன் காரணமாக அந்தக் கட் டடங்கள் அசுத்தமாகும் நிலை ஏற்பட்டுள்ளது-என்றார். (எ-14)



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்களை சிரேஷ்ட மாணவத் தலைவியினால் கைலாகு கொடுத்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:கோப்பாய் செய்தியாளர்)

# பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டவர்களில் தினமும் 40 பேர் மரணமாகின்றனர் எனத் தகவல்

கொழும்பு, நவ.01

பாரிசவாத நோய் காரணமாக இலங்கையில் தினமொன்றில் 40 பேர் வரையில் மரணத்தைத் தழுவிக் கொள்வதாக உடற செயலிழப்பைத் தடுப்பது தொடர்பான தேசிய ஒன்றியத்தின் தலைவரான மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவிக்கிறார். பாரிசவாத நோய்க்கு உள்ளாவதால் ஆண்டொன்றில் மரணத்தைத் தழுவிக் கொள்ளும் இலங்கையரது எண்ணிக்கை 20 ஆயிரம் வரையிலானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தினமும் பாரிசவாத நோய்த் தாக்கத்துக்கு உள்ளான நோயாளர்கள் 55 பேர் வரையில் இனங்காணப்படுவதாகவும், அவர்களுள் ஒவ்வொரு ஆறு நோயாளர்களுள்ளும் ஒருவருக்குப் பாரிசவாதம் அல்லது உடல் செயலிழக்கும் அபாய நிலை தென்படுவதாகவும் கடந்த 26 ஆம் திகதி கொழும்பு - சுகாதாரக் கல்விப் பிரிவில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் வைத்து அவர் தெரிவித்துள்ளார்.

முதியோருக்கு மட்டுமே பாரிசவாதம் ஏற்படுகிறது என்பது தவறான கருத்தே எனவும் வயது வேறுபாடின்றி அந்த நோய் ஏற்படுவதற்கு இடமுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நோய் தொடர்பாக அவர் மேலும் விளக்கமளிக்கையில் ஒருவரது கையொன்றில், காலில் அல்லது முகத்தில் ஏற்படும் விறைப்புத் தன்மை, திடீரென ஏற்படும் மயக்கம், கதைப்பதற்குச் சிரமப்படுதல், ஒரு கண்ணில் ஏற்படும் பார்வைக் குறைபாடுகள், உடல் சமநிலையற்றுப் போதல் என்பவை பாரிசவாத நோயின் ஆரம்ப அறிகுறிகள் எனவும் அத்தகைய சந்தர்ப்பங்களில் உடனடியாகவே நோயாளர்களை மருத்துவமனையில் அனுமதிப்பது புத்திசாலித்தனமானது எனவும் தெரிவித்தார்.

மேலும், மதுபானங்கள், போதைப்பொருள் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளல், சீனி, உப்பு மற்றும் எண்ணெய்த் தன்மையான உணவுவகைகளைத் தவிர்த்துக் கொள்ளல், தினமும் உடற் பயிற்சிகளை மேற்கொள்ளல், பழவகைகள் மற்றும் மரக்கறி உணவுகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஒருவர் பாரிசவாத நோய்த் தாக்கத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியுமெனவும் மருத் துவ நிபுணர் திருமதி குணரத்ன தெரிவித்துள்ளார். (ஐ - 22)

## விபத்தில் காயம்

தென்மராட்சி,நவ.01

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கச்சாயில் இடம்பெற்றது. இதன்போது இதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் (வயது-50) மற்றும் அவரது மகனான சிவகுமார் அஜநிலவன் (வயது-இரண்டரை) ஆகியோர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (எ-207)

## பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

வலி.வடக்கு,நவ.01

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் நிலவுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை சார்ந்த பதவிகளை நிரப்புவதற்காக பரீட்சைத் திணைக்கள ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது சேவையில் உள்ளவர்களும் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சித்தி அடைந்தவர்களும் இவ்வெற்றிடங்களுக்கு இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பரீட்சைத் திணைக்களத்தில் பௌதிகவியல், இணைந்த கணிதம், ஆங்கிலமொழி, தமிழ்மொழி, தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வெற்றிடங்களுக்கான நியமனங்கள் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-86)

## நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,நவ.01

சரசாலை வடக்கு நித்திலா மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டட நிர்மாணத்துக்கு யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி 50 ஆயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்துள்ளார். (எ-207)


அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

திருமதி
ஆறுமுகம்
சரஸ்வதி



பிறப்பு
15*02*1943

இறப்பு
03*10*2010

கடந்த 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குல விளக்கு திருமதி ஆறுமுகம் சரஸ்வதி அவர்களின் அந்தி யேட்டிக் கிரியைகள் 02.11.2010 செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் வியவில் புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வு மு.பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்திலும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கருங்காலி, சண்முகரத்தினம் சிவமலர் குடும்பம்
காரைநகர். (105346) அ.த.பேரம்பலம் குடும்பம்



இதய அஞ்சலி

எமது பிரதேச செயலக ஜே/227 தெல்லிப்பழை கிழக்கு
கிராம அலுவலர் இரத்தினம் இந்திரஜித்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி கனகநாயகிஅம்மா இரத்தினம்
அவர்களின் பிரிவால் துயருறும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம், பிரதேச செயலரும்,
தெல்லிப்பழை. ஏனைய சக உத்தியோகத்தர்களும்.
(105398)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் விற்பனை மையம்; போகம்பரைச் சிறைச்சாலைக்குள்!

## பொலிஸ் விசாரணையில் திடுக்கிடும் தகவல்

கொழும்பு,நவ.1

கண்டி போகம்பரைச் சிறைச்சாலை பெரிய அளவில் போதைப் பொருள் வர்த்தகத்திலும் மேலும் பல குற்றச் செயல்களிலும் கொடிகட்டிப் பறப்பதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

போகம்பரை சிறைச்சாலைக் காவலர்கள் சிறைச்சாலைக்குள் சுதந்திரமாகப் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது அம்பலமாகியுள்ளது.

இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த சிறைக் காவலர் ஒருவர் கணிசமான ஹெரோயினுடன் சிறைச்சாலைக்குள்ளேயே கண்டிப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 3 இலட்ச ரூபா பெறுமதியான ஹெரோயின், ஐந்து கையடக்கத் தொலைபேசிகள், பத்து சிம்காட்டுகள், ஒரு தொகை கஞ்சா பக்கற்றுக்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

இவர் கண்டி நகரின் முன்னணிப் போதைப் பொருள் வியாபாரிகளுக்கும் போகம்பரைச் சிறைச்சாலைக்கும் வர்த்தக இணைப்பாளராக இருந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

சிறைக்கைதிகளுக்கு ஹெரோயின் பைக்கற் ஒன்று 150 ரூபாவுக்கும் வெளியாருக்கு 600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் சில காவலர்கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் இவர்கள் சிறைச்சாலைக்குள் உள்ள பயங்கரக் குற்றவாளிகளுடன் இணைந்து போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுக்கு துணை போவதாகவும் தெரியவந்துள்ளது.

மரண அச்சுறுத்தல்விடுத்தல், கப்பம் கோரல் போன்ற பல்வேறு குற்றச்செயல்கள்போகம்பரைச் சிறைக்குள் தங்கு தடையின்றி நடைபெறுகின்றன.

இத்தகைய குற்றச் செயல்களை ஒடுக்க சிறைச்சாலை ஆணையாளரின் உதவியுடன் பொலிஸார் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கண்டி பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-5)

## நீதிபதி நியமனம்

தென்மராட்சி,நவ.1

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றின் மேலதிக நீதிபதியாக வவுனியா மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி என்.எம்.அப்துல்லா ஹஜ் யாத்திரைக்காக மக்காவுக்குச் சென்றுள்ளார். இதன் காரணமாக நீதிபதி மா.கணேசராசா எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார். (எ-207)

# தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைய மலையக மக்கள் முன்னணி விருப்பம்

கொழும்பு,நவ.1

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைந்து கொள்வதற்கு மலையக மக்கள் முன்னணி விருப்பம் தெரிவித்துள்ளது.

பத்துத் தமிழ்க்கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் இணைந்து தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அமைப்பில் இணைந்து கொள்வதற்கு மலையக மக்கள் முன்னணியும் விருப்பம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் இராதா கிருஷ்ணன் இதுதொடர்பாக தகவல் வெளியிடுகையில்; இந்தியாவில் இருந்து நாடு திரும்பியதும் சிவாஜிலிங்கம் ஊடாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்த வேண்டுகோள் கடிதத்தை அனுப்பியுள்ளோம்.

தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தில் இணைந்து கொள்வதற்கு முன்னர் அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டியுள்ளது. அதற்கான பதிலையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றார்.

அதேவேளை, மலையக மக்கள் முன்னணியையும் தமிழ்க் கட்சிகளின் அரங்கக் கூட்டங்களில் பங்குபற்ற அனுமதிப்பது தொடர்பாக ஏனைய கட்சிகளிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகத் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் செயலாளர் சிவாஜிலிங்கம்,தெரிவித்தார்.

எனினும், தமிழ்க்கட்சிகளின் அரங்கம் நேற்று நடத்தவிருந்த கூட்டத்தை பிற்போட்டுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி தலைமையகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (எ)



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குடாநாட்டுப் பாடசாலைகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடி வருகிறார்.

இந்த வகையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து கல்லூரிச் சமூகத்துடன் கலந்துரை யாடுவதைப் படத்தில் காணலாம்.

# இராணுவத்தினரின் நிர்வாக சேவையையே வன்னி மக்கள் பெரிதும் விரும்புகின்றனராம்!

## நல்லிணக்க ஆணைக்குழு தலைவரின் கண்டுபிடிப்பு இது

வவுனியா,நவ.1

வவுனியா மற்றும் வன்னி மக்கள் அங்கு இராணுவத்தினர் மேற்கொள்ளும் சேவையை விரும்புகின்றனர். சிவில் நிர்வாகத்தை அந்தளவு விரும்பவில்லை என்று கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவரும் முன்னாள் சட்டமா அதிபருமான சி.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

ஆனால் யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வன்னியில் இராணுவப் பிரசன்னம் படிப்படியாகக் குறைவடைய வேண்டும் என்பதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் வவுனியா மற்றும் வன்னி மக்கள் அங்கு இராணுவத்தினர் மேற்கொள்ளும் சேவையை விரும்புகின்றனர். சிவில் நிர்வாகத்தை அந்தளவு விரும்பவில்லை- என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு பேராயர் டுலிப் டி.சிக்கேரா கலந்து கொண்டு சாட்சியமளித்து முடிந்ததும் அவர் எழுப்பிய கேள்விக்கு பதில் கருத்து வெளியிட்ட ஆணைக் குழுவின் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணை அமர்வு கொழும்பில் அதன் தலைவர் சி.ஆர்.டி. சில்வா தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

அதன்போது சாட்சியமளித்த டுலிப் டி. சிக்கேரா, யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வன்னியில் இராணுவப் பிரசன்னம் படிப்படியாக குறைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா தொடர்ந்து கூறியதாவது-

நீங்கள் கூறியது போன்று வன்னியில் இராணுவப் பிரசன்னம் படிப்படியாக குறைக்கப்பட வேண்டும் என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் இராணுவத்தினர் பாரிய புனர்நிர்மாண பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வீடுகளை அமைக்கின்றனர். குளங்களை நிர்மாணிக்கின்றனர். அவற்றை புனர்நிர்மாணம் செய்கின்றனர். அது போன்ற பல திட்டங்களை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் வவுனியா மற்றும் வன்னிப் பகுதி மக்கள் இராணுவத்தினர் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களை விரும்புகின்றனர். அப்பகுதி மக்களுடன் நாங்கள் உரையாடியபோது அவர்கள் இதனை தெவித்தனர்.

இராணுவத்தினர் மேற் கொள்ளும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். அந்த மக்கள் அங்கு சிவில் நிர்வாகம் வர வேண்டும்என்று விரும்பவில்லை.

நாங்கள் வெளி மாவட்டங்களில் அமர்வுகளை நடத்துவதற்காக செல்லும்போது திடீரென வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்திகள் போன்ற இடங்களில் நின்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவோம். பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களைக் கோருவோம். என்றார்.



குருநகர் சென்.றோக்ஸ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு யாழ்.எயிட் தன்னார்வத் தொண்டு நிறுவனம் காலணிகள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை அண்மையில் வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி செ.நாச்சியார் மாணவன் ஒருவனுக்கு காலணிகள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

# வடக்கு-கிழக்கில் படையினர் பிரசன்னம்; குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

## ஆணைக்குழு முன் பேராயர் வலியுறுத்து

கொழும்பு,நவ.1

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரின் பிரசன்னத்தைக் குறைப்பதுடன் அப்பகுதிகளில் அரச அனுசரணையுடன் வெளி மாவட்டத்தினரைக் குடியேற்றும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

இச்செயல்களே கடந்தகால நெருக்கடிகளுக்குக் காரணம் அதை மீண்டும் ஏற்படுத்த முனையக் கூடாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்புப் பேராயர் டுலிப் டி.சிக்கேரா.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையிலேயே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

பொருளாதார அபிவிருத்தி மட்டும் போதுமானதாக இல்லை. மாறாக மனிதர்கள் என்ற அடிப்படையில் அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

முக்கியமாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டும். பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படலாம்.

யுத்தத்துக்குப் பின்னரான நிலையில் நாம் தற்போது இருக்கின்றோம். அனைத்து விடயங்களுக்கும் இராணுவத்தீர்வு பொருத்தமானது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் வன்னியில் குறிப்பிட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் இராணுவப் பிரசன்னத்தை நீக்கி முழுமையான சிவில் நிர்வாகத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

கடந்த செப்ரெம்பர் மாதம் நான் வன்னிக்குச் சென்றபோது தமிழ் மக்கள் அதிகமாக உள்ள பகுதியில் சிங்கள மொழியில் இராணுவ முகாம் பெயர்ப்பலகைகள்.

பொலிஸ்துறைக்கு தமிழ் மொழி மூலமான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும். அப்போதுதான் மக்கள் தங்கள் மொழிகளில் கடமைகளைச் செய்ய முடியும். அதன் மூலமே அவர்களுக்கொரு நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.

நீண்டகாலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி குற்றமற்றவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியம். அத்துடன் புனர்வாழ்வு புனரமைப்புக்களையும் துரிதப்படுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் போது அப்பிரதேச மக்களின் அபிப்பிராயங்களைக் கருத்திற் கொள்ளவேண்டும். அரசசார்பற்ற அமைப்புக்கள் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும்.

தென்னிந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

வன்னியிலும் குடாநாட்டிலும் இடம்பெற்று வரும் கடத்தல்களில் ஆயுதக் குழுக்களுக்குத் தொடர்பிருப்பதாக அறியப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதன் மூலம் இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுடன் யுத்த காலத்தில் இடம் பெற்ற கடத்தல்கள் தொடர்பிலும் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கு அவர்களின் உறவினர்களுக்கு உரிமையுண்டு.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரச அனுசரணையுடன் வெளி மாவட்ட மக்கள் குடியேற்றப்படுதல் நிறுத்தப்படல் வேண்டும்.

இராணுவ வீரர்கள் தமது குடும்பத்தினருடன் அங்கு குடியேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது என்றார். அப்போது குறுக்கிட்ட ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி.சில்வா வடக்கில் இராணுவ வீரர்கள் தமது குடும்பங்களுடன் குடியேற்றப்படுவதாக வெளியான தகவல்கள் தவறானவை என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். மனித உரிமைகள் மொழிவிடயங்கள் என்பன பேணப்பட வேண்டும்.

அத்துடன் அவசரகாலச் சட்ட விதிகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள் என்பன மீள் பரிசீலனைசெய்யப்படவேண்டும்.

இவையே சமூகங்கள் வழமைக்குத் திரும்புவதற்கு இடையூறாக அமையலாம்.

சுயாதீனமான தமிழ்க் குரல்கள் இந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க முன்வர வேண்டும். இதற்கான அழைப்புக்கள் விடுக்கப்படுவது அவசியமாகும்.

இதில் முக்கியமாக சமூகப் பிரதிநிதிகள், கல்விமான்கள், நிபுணர்கள் உள்ளிட்டோரை அழைக்கலாம். என்றார். (ஐ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா




**மேஷம்:**
உங்களுக்குக் கிடைக்காத ஒன்று மற்றவர்களுக்கு கிடைத்ததை நினைத்துப் பொறாமைப்படுவீர்கள். கடனாக வாங்கிய பணம் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உறவினர் ஒருவரை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.



**இடபம்:**
பிள்ளைகளின் பொறுப்பான செயற்பாடுகளை நினைத்து பெருமைப்படுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு.



**மிதுனம்:**
நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். வழக்கத்திற்கு மாறாக அதிக நேரம் தூங்கலாம்.



**கடகம்:**
நினைத்த காரியங்கள் நினைத்தது போல நடக்கும் நாள். பழைய கடன் மிகுதி ஒன்றை அடைப்பீர்கள். புதியவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று விறுவிறுப்பாக முடிந்து விடலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்



**சிங்கம்:**
எந்த விடயத்திற்காகவும் வீண் பிடிவாதம் செய்யாமல் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பல நாள்களாக உங்களுடன் இருந்த ஒருவரைப் பிரியலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.



**கன்னி:**
மாமன், மைத்துனர்கள் சிலரின் உதவியால் பெருமை அடைவீர்கள். அவசரம் இல்லாமல் உல்லாசமாக சில வேலைகளைச் செய்வீர்கள். பழைய நண்பர்கள் சிலர் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். கடந்த காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள்.



**துலாம்:**
உறவினர்கள் மத்தியில் உருவான பிரச்சினைகளை தீர்த்து வைப்பீர்கள். மற்றவர்கள் தவறு என நினைக்கும் ஒன்றை நீங்கள் சரியென நினைத்து செய்வீர்கள். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள். பிள்ளைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் வழியில் உதவி கிடைக்கும்.



**விருச்சிகம்:**
குடும்ப உறுப்பினர்கள் சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். உங்களிடம் நண்பர் ஒருவர் அவசர உதவி கேட்கலாம். சில வேலைகளை வேகமாகத் தொடங்கி விட்டுப், பின்னர் பாதியில் விட்டு விடலாம். உறவினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். கனவுகளால் குழப்பம் உண்டாகும்.



**தனுசு:**
தொடங்கிய காரியங்கள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். விலைஉயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். ஓய்வெடுக்க நினைத்தாலும், முடியாத அளவுக்குத் தொந்தரவு ஏற்படலாம்.



**மகரம்:**
குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து முக்கிய காரியம் ஒன்றைச் செய்வீர்கள். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். சந்தர்ப்ப சூழ்நிலையைப் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். நீங்கள் ஆசைப்பட்ட ஒன்றை மற்றவர்கள் கொடுக்கலாம்.



**கும்பம்:**
உங்களின் சுய தேவைகளுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. நடக்குமோ நடக்காதோ என நினைத்த வேலை ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். பெற்றோர் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலருக்குச் செய்த உதவியை நினைத்துப் பெருமை அடைவீர்கள்.



**மீனம்:** உங்களின் முயற்சிகளுக்குச் சிலர் துணையாக இருக்கலாம். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். குடும்ப உறுப்பினர்கள் சிலரிடம் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ளலாம். கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். பக்தி நாட்டம் கூடும்.

# ஜி.சி.ஈ உயர்தரத்தில் கற்கும் வறிய மாணவர்கள் ஜனாதிபதி புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு, நவ.1

க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்களை வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முதல் தடவையில் சித்தி அடைந்த வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் 5 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட குடும்ப வருமானத்தைக் கொண்டிருப்பதுடன் 2012 ஆம் ஆண்டு நடைபெறும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுபவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் அதிபர்கள் கையளிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை www. Presidents fund. gov.lk என்ற இணையத்தில் பெற முடியும்.

(201-86)



கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாட்டுக்கென ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான போட்டோக் கொப்பி இயந்திரத்தை கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி ஆ.இராசரத்தினம் குடும்பத் தினர் வழங்கியுள்ளனர். திருமதி ஆ.இராசரத்தினத்தின் மகனான குணரத்தினராஜா, வனஜநாயகி ஆகியோர் இணைந்து பாடசாலை அதிபர் திருமதி சா.வாகீசனிடம் போட்டோக் கொப்பி இயந்திரத்தை கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: கோப்பாய்ச் செய்தியாளர்)*

# பெண்களின் முதுமை



ஒருநாள் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அவ்வேளையில் பஸ்ஸில் சனக் கூட்டம் அதிகமாக இருந்தது. ஒரு பெண் சிரமத்துடன் பஸ்ஸின் மேலே கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

நடத்துநர் இதனைக் கவனித்துவிட்டு ''அந்த அம்மாவுக்கு உட்காா்வதற்கு யாராவது ஓர் இடம் கொடுங்கள்'' என்று கூறினார்.

ஒருவர் எழுந்து இடம் கொடுத்தார். அந்த அம்மா அவ்விடத்தில் அமர்ந்திருந்தார். இதன் பின்னர் '' இப்போது அந்த அம்மாவின் முகம் எப்படி இருக்கும்?'' என நீங்கள் நினைப்பீர்கள்?

நன்றி உணர்வுடன் நடத்துநரையும் இடம்கொடுத்தவரையும் பார்த்துக் கொள்வார். இவ்வாறுதானே நீங்கள் நினைப்பீர்கள்.

ஆனால் அப்படி இல்லை! கோபமாக முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஓர் இடத்திலே பஸ் நின்றது. அந்த அம்மாவும் இறங்கினார் நானும் இறங்கினேன்.

''ஏன் கோபமாக இருந்தீர்கள்!'' என நான் கேட்டேன்.

அதற்கு '' என்னைப் பார்த்து நடத்துநர் அம்மா என்று சொல்லிவிட்டான்'' அதுதான் எனது கோபம். ''இப்பொழுது நீங்களே சொல்லுங்கள் எனக்கு எவ்வளவு வயதிருக்கும்'' என்று கேட்டார்.

மனதில் நினைத்ததை விட 20 வயதை குறைத்து '' என்ன ஒரு 20 அல்லது 21 வயதிருக்கும்'' என்று நான் கூறினேன்.

'' நீங்கள் தான் மேதாவி'' என்று சொல்லி விட்டு அந்த அம்மா மிகவும் சந்தோஷமாகப் போய்விட்டார்.

எனவே முதுமையை யாரும் ஆசைப்பட்டுக் கூப்பிடுவதில்லை. ஆனால் அதுதான் நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது.

எனவே முதுமை விவரம் தெரியாமலே பெண்களிடம் வெகு விரைவாகவே வந்துவிடுகிறது. ஆண்களிடம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெண்களுக்கு முதுமை விரைவாக வந்துவிடும்.

இது ஒரு பொதுவான அபிப்பிராயம்.

இதைத் தெரிந்துகொள்ள அமெரிக்காவில் 'யேல்' பல்கலைக்கழகத்தில் ஓர் ஆராய்ச்சி நடந்தது.

'' மனித உடம்பில் செல்கள் தொடர்ச்சியாக இறந்து கொண்டே இருக்கும். இதனைத்தான் செல்களில் இனப்பெருக்கம்'' என்று சொல்வார்கள்.

ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் ஆண், பெண் எனப் புதிய செல்கள் உண்டாவது குறைந்துவிடும். இச்சமயத்தில் உடம்புத் தசைகள் சுருங்க ஆரம்பிக்கும். அதனால்தான் வயதான தோற்றம் உண்டாகும்.

இந்த செல்கள் ஆண்களை விடப் பெண்களுக்கு விரைவாகவே குறைய ஆரம்பித்துவிடும்.

இது தொடர்பாக ஒரு பத்திரிகை நிருபர் ஒரு சினிமா நடிகையை பேட்டி காணப்போனார். அந்த அம்மா 30 வருட காலமாகத் திரைப்படங்களில் நடித்து வருகின்றவர். கேக்கக்கூடாத ஒரு கேள்வியை நிருபர் அவரிடம் கேட்டுவிட்டார்.

அதாவது ''உங்க வயது என்ன ?'' இதுதான் அந்தக் கேள்வி.

அந்த அம்மாவும் அதைப் பெரிதுபடுத்தாமல் ''எதிர்வரும் ஜூன் மாதம் வந்தால் 20 ஆவது வயது முடிந்து 21 வயது ஆரம்பம்!'' எனக் கூறினார்.

அந்த நிருபர் தன் தலையில் தானே குட்டிக் கொண்டார்.

''நான் ஏதாவது தப்பாகச் சொல்லிவிட்டேனா?'' என அந்த நடிகை கேட்டார்.

''உங்களின் பதில் சரிதான். ஆனால் என் கேள்விதான் பிழையானது. இந்தக் கேள்வியை 20 வருடத்திற்கு முன் உங்களிடம் கேட்டிருக்க வேண்டும். நான்தான் தாமதமாகக் கேட்டுவிட்டேன். அதுதான் குட்டினேன்!'' என்று மறுபடியும் குட்டினார்.

**கோ.சுவாமிநாதன்.**

# அவசியமற்ற அக்கறைகள்

ஓர் ஊரில் நீண்ட தாடியுடன் துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரை அவ்வூரிலுள்ள பல்வேறு மக்களும் வணங்கிச் சென்றனர். அப்போது ஒரே ஒரு பையன் '' சுவாமி ஒரு சந்தேகம். நீங்கள் தூங்கும் போது தாடி இருபக்கமும் பிளந்து கிடக்குமா? இல்லாவிட்டால் நிமிர்ந்து மேல் நோக்கி நிற்குமா? அல்லது முகத்தை மூடிக் கிடக்குமா?'' எனக் கேட்டான்.

அதற்கு மறுநாள் பதில் சொல்வதாக வாக்களித்தார் சுவாமி. சுவாமிக்கு யோசனையால் தூங்க முடியவில்லை. அந்தச் சிறுவனும் தூங்கவில்லை.

இரவு தூங்காததால் பகல் அவன் தூங்கி விட்டான். இதனால் துறவியிடம் கேட்ட கேள்விக்குப் பதில் கேட்க அவனால் வரமுடியாமல் போய்விட்டது.

எதற்கு இந்த அவசியமற்ற அக்கறைகள்.

ஒரு காலத்தில் புத்த நூல்களைத் தேடித் தேடிப் படித்த ஜீவிகுடோ என்பவர் குருவிடம் வந்தார்.

குருவே! ''கடந்த ஐம்பது ஆண்டுகளாக நான் புத்த தத்துவங்களைப் படிக்கிறேன்.



ஆனால் தம் வேதத்தில் கல்லும் மரமும் ஞானம் பெற முடியும் என்று எழுதப்பட்டுள்ளது. அதுதான் எனக்கு விளங்கவில்லை'' என்றார்.

''நிஜமாகச் சொல்லுங்கள். ஞானம் பெற முடியுமா? முடியாதா? என்று வாழ்வில் ஒருமுறை கூட நீங்கள் யோசிக்கவே இல்லையா..? கல்லையும் மரத்தையும் பற்றி அறிய விரும்பும் நீங்கள் ஞானம் பெற முடியுமா? முடியாதா? என்று நினைத்துப் பார்க்க வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?'' என்று கேட்டார் குடோ.

'' அட.. ஆச்சரியமாக இருக்கிறது. இதைப் பற்றி யோசனை எனக்கு வரவே இல்லையே... என் முத்தி பற்றி நான் நினைத்ததே இல்லையே!'' என்றார் பெரியவர்.

இப்படி ஒரு தேடல் அவசியமா? வெளிப்புறத்தில் குப்பைகளைப் பொறுக்குவது நமது வேலை அல்ல. கடலில் மூழ்கி முத்தெடுக்க நாம் முனையவேண்டும்.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது கெட்ட முகத்தை மாற்ற முயற்சிக்கிறது இலங்கை இராணுவம்

**அமெரிக்காவில் இருந்து வெளியாகும் உலகப் புகழ்பெற்ற 'ரைம்' சஞ்சிகையில் அதன் செய்தியாளர் அமந்தா பெரேரா (AMANTHA PERERA) எழுதிய கட்டுரை இது. கெட்டுப்போன தனது பெயரை நல்லபடி மாற்றுவதற்கு இலங்கை இராணுவம் முயற்சிப்பது பற்றி அவர் இதில் அலசி உள்ளார்.**



**அழியாத வடுக்கள்:** போரின் இறுதி நாட்களில் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காலங் காலமாக இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான நினைவுகள் தமிழர் மனங்களிலிருந்து இலகுவில் அழியாது.

விடுதலைப் புலிகளுடனான போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் இராணுவ உயர் மட்ட அதிகாரிகளுக்கு வழமைக்கு மாறான கோரிக்கை ஒன்று அடிக்கடி கிடைத்துக் கொண்டிருந்தது. தொலைக்காட்சியின் 'ரியாலிட்டி' நிகழ்ச்சிகளில் தாங்கள் பங்கெடுக்கவேண்டும் என்று சிப்பாய்கள் கோரினர்.

அந்த நேரத்தில் சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. அதனால் சிப்பாய்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்றார் தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹலுகல்ல. இனி அத்தகைய நிராகரிப்பு இருக்காது.

போர் முடிவுக்கு வந்து 20 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் தரைப் படை, விமானப்படை மற்றும் வான் படையினைச் சேர்ந்தவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தோன்ற உள்ளார்கள். 'றணவிரு றியல் ஸ்ரார்' (Ranaviru Real Star - War Hero Real Star) என்ற அந்த நிகழ்ச்சி 15 நிமிடங்கள் ஒளிபரப்பப்படவுள்ளது.

இந்த மாதம் 6ஆம் திகதி முதல் நிகழ்ச்சி ஒளிபரப்பாக உள்ளது. நிகழ்வில் முப்படைகளையும் சேர்ந்தவர்கள் போர்க்களத்திற்கு வெளியே தங்களது திறமையினை வெளிப்படுத்துவார்கள்.

இதுவரைக்கும் இலங்கையின் முப்படையினரும் ஆடல், பாடல்கள் பற்றி நினைத்தே பார்த்திருக்க மாட்டார்கள். இரத்தக்களரியான போர் தொடர்பான செய்திகளுக்காகவே ஊடகங்களில் பிரதான இடத்தை முப்படைகளும் இதுவரை பெற்று வந்தன.

தரை, கடல், வான் படையினர் தங்களது கடமைகளுக்கு அப்பால் இதுபோல ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளது இதுவே முதல்முறை.

பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த, 70 ஆயிரம் உயிர்களைக் காவுகொண்ட இலங்கையின் உள்நாட்டுப் போரில் பங்கெடுத்திருந்த ஆயுதப்படையினர் மூர்க்க குணம் கொண்டவர்களாகவும் இலகுவில் தனிமனித உணர்வுகளுக்கு அடிபணியாதவர்களாகவுமே இருந்து வந்திருக்கிறார்கள்.

தற்போது நாட்டில் அமைதி திரும்பி இருக்கும் நிலையில் படையினர் தங்கள் அடையாளத்தை மாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள்.

''குறிப்பட்ட ஒருவர் எப்போதுமே ஆயுதங்களுடன் இருக்குமிடத்து அவர் தொடர்பில் பொதுமக்கள் குறிப்பட்டதொரு கருத்தையே கொண்டிருப்பார்கள். படையினரைப் பற்றி மக்கள் அறிந்திராத, தெரிந்திராத பக்கங்கள் பலவுள்ளன. போர் இடம்பெற்ற காலப்பகுதியில் நாங்கள் காப்பரண்களுக்கு சுற்றுப்பயணம் செய்யும் போது அவர்கள் கவிதைகள் எழுதியிருந்ததையும் சித்திரங்கள் வரைந்திருந்ததையும் அவதானித்தோம்'' என்கிறார் ஹலுகல்ல.

மக்கள் மத்தியில் படையினர் தொடர்பாகவுள்ள பார்வையினை மாற்றும் வகையிலேயே அரசாங்கம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுப்பதாகத் தெரிகிறது.

''ஆயுதங்களின் பின்னால் ஒழிந்திருக்கும் மனிதத்தினைக் காட்டுவதற்கு நாங்கள் விரும்புகிறோம்'' என இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய கூறியிருந்தார்.

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அனைத்துலக மட்டத்தில் கெட்டுப் போய்க் கிடக்கும் தமது பெயரை மேம்படுத்துவதற்காகப் படைத்தரப்பு எடுத்துவரும் பல முயற்சிகளில் இதுவும் ஒன்று.

இந்த ஆண்டு முற்பகுதியில் இலங்கைத் தீவில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்தது. அச்சமயத்தில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை இனங்கண்டு அழிக்கும் பணியில் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். வடக்கில் தற்போது மீள்குடியேற்றம் இடம்பெற்று வரும் பகுதிகளில் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளைச் செப்பனிடும் பணிகளிலும் படையினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

போர் இடம்பெற்ற வேளையில் கெட்டுப் போய்விட்ட படையினர் தொடர்பான பார்வையினை மாற்றும் வகையில், உடல் உறுப்புகளை இழந்த மக்களுக்குச் செயற்கை உறுப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சக்கர நாற்காலிகளை வழங்குதல், பொது மருத்துவமனை வளாகங்களைத் துப்புரவு செய்தல், பொது மக்களுக்காக அவர்களது விவசாய நிலங்களைத் தயார்செய்தல் ஏன் இந்துக் கோவில்களைத் திருத்துதல் போன்ற பல பணிகளில் படையினர் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள்.

**போர் இடம்பெற்ற வேளையில் கெட்டுப் போய்விட்ட படையினரின் பெயரை மாற்றும் முயற்சியாக, உடல் உறுப்புகளை இழந்த மக்களுக்குச் செயற்கை உறுப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சக்கர நாற்காலிகளை வழங்குதல், பொது மருத்துவமனை வளாகங்களைத் துப்புரவு செய்தல், பொது மக்களுக்காக அவர்களது விவசாய நிலங்களைத் தயார்செய்தல் ஏன் இந்துக் கோவில்களைத் திருத்துதல் போன்ற பல பணிகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.**

பெரும்பான்மையினச் சிங்கள இனத்தவர்களே இலங்கையின் முப்படைகளிலும் இருக்கிறார்கள். தெற்கில் அவர்கள் மிகப் பிரபலமாக இருக்கிறார்கள். ஆனால் வடக்கில் அவர்களுக்குக் காத்திரமான எதிர்ப்புக் காணப்படுகிறது. வடக்கில் சிறுபான்மையினத் தமிழர்களே அதிகம் வாழ்கிறார்கள். அவர்களுக்காகவே விடுதலைப் புலிகள் பிரிவினை கோரிப் போரிட்டார்கள்.

போர் முடிவுக்கு வந்து ஆண்டொன்று கடந்துவிட்ட போதும் வன்னியில் ஆயிரக்கணக்கான படையினர் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளனர். பல பத்தாண்டுகளாக விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கிய பகுதி அது.

மூர்க்கமாகத் தொடர்ந்த இறுதிப் போரினைத் தொடர்ந்து 300,000 தமிழர்கள் வன்னியில் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுவிட்டாலும் 26,000 பேர் தொடர்ந்தும் இந்த முகாம்களில் வாடுகிறார்கள்.

தங்களது சொந்த ஊர்களில் படிப்படியாக மீள்குடியேறிவரும் தமிழ் மக்கள் கடந்த காலத் துன்பங்களை மறந்து தமது வாழ்வினை மீளவும் கட்டியெழுப்பத் துடிக்கிறார்கள். இந்த மக்கள் மத்தியிலேயே படையினர் தொடர்பாக உள்ள பார்வையினை மாற்ற இப்போது அரச தரப்பில் கடும் முனைப்புக்கள் எடுக்கப்படுகின்றன.

கந்தையா ராஜகிருஷ்ணன் என்பவர் முப்பதாண்டுகளுக்கும் மேலாக வன்னியில் வசித்து வருகிறார். *(பாதுகாப்புக் கருதி அவரது சொந்தப் பெயர் இங்கு மாற்றப்பட்டிருக்கிறது.)* விடுதலைப் புலிகள், சிறிலங்கா அரச படையினர் ஏன் இந்திய அமைதிப் படையினர் என அனைவரையுமே இவர் நன்கறிவார்.

''தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி அமைதியுடன் வாழும் நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதையிட்டு எவரும் வருந்துவதாக எனக்குத் தெரியவில்லை'' கல்வித்திணைக்கள ஊழியரான இவர் கூறுகிறார். அவருக்கு வயது 60.

''ஆனால், இப்போதிலிருந்து நாங்கள் எப்படி வாழப் போகிறோம் என்பதிலேயே எல்லாமும் தங்கி இருக்கிறது'' என்கிறார் அவர்.

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமான மற்றும் அபிவிருத்திப் பணிகளின் ஊடாகத் தமிழ் மக்களின் மனங்களில் இடம்பிடிக்கும் நோக்கத்தில் இராணுவம் வெற்றி பெறுவதற்கான அறிகுறிகளே தெரிகின்றன.

''எங்களது ஆய்வுகளின் பிரகாரம், வடக்கு வாழ் மக்களிடத்தே படையினர் தொடர்பில் பலவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. மக்கள் தங்களது வீடுகளைத் திருத்துவதற்கும், பொருள்களைக் கொண்டு செல்லுவதற்கும் துணைபுரிவதன் ஊடாக படையினர் மக்களின் மனங்களில் இடம்பிடிக்க முனைகிறார்கள்'' என லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் முரண்பாட்டுத் தவிர்ப்பு என்ற அமைப்பின் பணிப்பாளர் கிறிஸ் சப்மன் கூறுகிறார்.

ஆனால், வன்னிப் பகுதியில் படையினரின் அளவுக்கதிகமான பிரசன்னம் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு போரை நினைவுபடுத்துவதாகவே அமைகிறது. 300,000 பொதுமக்களை இடம்பெயர வைத்து 7,000 உயிர்களைக் காவுகொண்டது இந்த இறுதிப் போர்.

''தமிழர்கள் மனங்களில் சிறு நம்பிக்கை துளிர்விட்டிருப்பது உறுதியாகத் தெரிகிறது. இருப்பினும் போரின் இறுதி நாள்களில் படையினரால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காலங் காலமாக இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான நினைவுகள் தமிழர்கள் மனங்களிலிருந்து இலகுவில் அழியாது'' - என்கிறார் சப்மன்.

போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு மேற்குலக நாடுகள் மத்தியில் சிறிலங்கா தொடர்ந்தும் முகம்கொடுத்து வருகிறது.

போரின் இறுதி நாள்களில் இடம்பெற்ற மீறல்களுக்கான ஆதாரங்கள் தங்களிடமிருப்பதாகவும் சாட்சியங்களைப் பாதுகாக்கக்கூடிய தரப்பினர் யாராவது இருந்தால் அவர்களிடத்தே அந்த ஆதாரங்களைக் கையளிப்பதற்குத் தயார் எனவும் 'சிறிலங்காவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள்' (23ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் வழிபாடும்



Late
Dr.C.Rajendram

30*08*1924
01*11*2009

"நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்
கொண்டேன்"
1தீமோ 4:7

காலஞ்சென்ற Dr.C.இராஜேந்திரம் அவர்களின் வாழ்வுக்கும் சாட்சிக்கும் நன்றி செலுத்தும் வழிபாடு 05.11.2010 சனிக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு கோப்பாய் பரி.மரியாள் தேவாலயத்தில் நடைபெறும். இந்த வழிபாட்டில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"பெதனி",
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

அன்புடன் என்றும் நினைவுகூரும்:
**மனைவி, பிள்ளைகள்.**
(105391)

## பளைப் பிரதேச வைத்தியசாலை நிரந்தர வைத்தியர் நியமனம்

தென்மராட்சி, நவ.1

பளைப் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டதைய டுத்து கடந்த புதன்கிழமை தொடக்கம் முழுநேரம் இயங்குகின்றது.

டாக்டர் மைதிலி பளைப் பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளார். (204-207)

## காலணிகள் வழங்கல்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனம் காலணிகளை வழங்கவுள்ளது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கோட்டக் கல்விப் பணிமனையில் வைத்துக் காலணிகளை மாணவர்களுக்கு வழங்கவுள்ளன. (எ-38)

## மின்சாரம் தாக்கி இளம்பெண் காயம்

தென்மராட்சி, நவ.1

தொலைக்காட்சிப் பெட்டிக்கு மின் இணைப்புக் கொடுத்த யுவதி ஒருவர் மின்சாரம் தாக்கி எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை வரணியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.தர்சிகா (வயது16) என்பவரே கையில் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-207)

## மாணவியைக் கடித்த குரங்கு

தென்மராட்சி, நவ.1

பாடசாலை சென்ற ஐந்து வயது மாணவியைக் குரங்கொன்று கடித்துக் காயப்படுத்திய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இயக்கச்சியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த தவராசா தரணிகா (வயது 5) என்னும் மாணவியே குரங்கினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-202)

## பண்ணைகளைப் பதிவு செய்யவும்

சுன்னாகம், நவ.1

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கோழிப் பண்ணைகளைப் பதிவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

ஊர்க் கோழிகள், முட்டைக் கோழிகள், இறைச்சிக் கோழிகள் ஆகியவற்றை 10 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வளர்ப்பவர்கள் கால்நடை வைத்திய நிலையத்தில் பதிவு செய்ய வேண்டுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை-

செயற்கை முறைச் சினைப்படுத்தப்பட்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் பிறந்த பசுக்கன்றுகளையும் மேற்படி நிலையத்தில் பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-38)


## கட்டட வாடகைக்கான கேள்விக்கூறு கோரல்

கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதியின் 3ஆம் மாடி வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. 3150 சதுரஅடி விஸ்தீரணம் கொண்டதும் அறைகள், இணைந்த குளியலறை, மலசலகூடம், மின்சாரம், நீர்விநியோக வசதிகள் கொண்ட பாரிய அலுவலகம் நடத்தக் கூடியதான தளஅமைப்பையும் கொண்டது.

கட்டடத்தைப் பார்வையிட்டுச் சபை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தையும் விவரங்களையும் பெற்றுக் கூறுவிலையை 20.11.2010 இற்கு முன்னதாக "யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்குச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறது.

செயலாளர்
யாழ்.மா.கூ.சபை.
T.P.: 0212222324
E-Mail- jaffnadcc@gmail.com
(சி/572261)

## விற்பனைப் பிரதிநிதிகள், வாகன ஓட்டுநர்கள், கூலித் தொழிலாளர்கள் தேவை

யானைச் சோடாவினை (Elephant House Soft Drinks) வாகனத்தில் சென்று விற்பனை செய்யக் கூடிய விற்பனைப் பிரதிநிதிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் தேவை. தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

காலம்:- 03.11.2010
நேரம்:- மு.ப.10 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை.

முகவரி: **பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
368/B முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
T.P.021-2225595
(105388)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
01 * 09 * 1930

மறைவு
02 * 10 * 2010



## அமரர் சின்னத்தம்பி வேலாயுதம்

(இளைப்பாறிய பதவிநிலை உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்)

கடந்த (02.10.2010) அன்று இறைபதம் எய்திய சின்னத்தம்பி வேலாயுதம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.11.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'லக்குமி பவனம்',
கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.
(105162)
**குடும்பத்தினர்.**

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1238 சிகப்பு

சிங்கம் 03 20 26 49 29-10-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 8,987,700/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 235,764 | 20/- | 4,715,280/- |
| 2 இலக்கங்கள் | 21,689 | 40/- | 867,560/- |
| 1 இல. + லக்கினம் | 21,414 | 60/- | 1,284,840/- |
| 2 இல. + லக்கினம் | 2,006 | 200/- | 401,200/- |
| 3 இலக்கங்கள் | 575 | 1000/- | 575,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 8,987,700/- | 8,987,700/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 17,731,580/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 632 | | 614,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 282,133 | | 18,346,080/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 2,000,000/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் 10 21 24 37

ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 629 | 500/- | 314,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 632 | | 614,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-

கவனிக்கவும் : அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரதான சீட்டிழுப்பின் பின்னர் இடம்பெறும் இரண்டாவது சீட்டிழுப்பில் 4 வெற்றி இலக்கங்களும் லக்கினமும் முதலாவது சீட்டிழுப்பின் 4 வெற்றி இலக்கங்கள் மற்றும் லக்கினத்துடன் பொருந்தி பரிசை பெற்றுக்கொள்ள முடியாது.

# யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம்

COPHARM கோபாம்

மருந்து அரைக்கும் ஆலை அமைப்பதும் அதற்குரிய இயந்திரம் பெற்றுக்கொள்வதும் சம்பந்தமான கேள்விப் பத்திரம்

எமது சங்கத் தலைமைக் காரியாலயம் அமைந்திருக்கும் காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் மருந்து அரைக்கும் ஆலை அமைப்பதற்கான பொருள்கள் வழங்கல் சேவைகளுக்கான மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளது. இதற்கான மேலதிக விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதற்கேற்ப தங்களின் கேள்விகளை யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவை கூட்டுறவுச் சங்கம், தலைவர் என்று முகவரியிட்டு 10.11.2010 இற்கு முன்னர் வழங்கி உதவும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

**விபரங்கள்**

01. A -2x12" கிறைண்டர் (இந்தியன்) (அரைக்கும் இயந்திரம்)
 B -07" கமர் (வெட்டும் இயந்திரத்தொகுதி)
 C -12-H.P இந்தியன் எஞ்சின் (மின் உற்பத்தியாக்கும் இயந்திரம்)
02. மேற்படி இயந்திரங்களைப் பொருத்துதல்
03. அரைக்கும் இயந்திரப் பயிற்சி
04. இயந்திரங்களில் ஏற்படும் கோளாறுகளைச் சீர் செய்யும் ஒருவருட கால உத்தரவாதம்.
05. தெரிவு செய்யப்படும் கேள்விதாரியுடன் முறையான எழுத்து ஒப்பந்தம் செய்யப்படும். ஒப்பந்தம் செய்து ஒரு மாதத்திற்குள் வேலைகளை முழுமையாக முடித்து ஒப்படைக்க வேண்டும். கொடுப்பனவுகள் முடிவு செய்யப்படும் வேலைக்கேற்ப பகுதி பகுதியாகக் காசோலையாக வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
0213211613.

தங்கள் கூட்டுறவுச் சேவையிலுள்ள
**தலைவர்.**
(105312)

# மஹபஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

29.10.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2311

வெற்றி எழுத்து: M
வெற்றி எண்கள்: 3 1 8 0 1 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M 3 1 8 0 1 0 | ரூபா.14,254,131/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 3 1 8 0 1 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 1 8 0 1 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | 8 0 1 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 132 |
| 4 பரிசுகள் | 0 1 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1323 |
| 5 பரிசுகள் | 1 0 | ரூபா. 100/= | பரிசுகள் 13271 |
| 6 பரிசுகள் | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 131936 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 3 1 8 0 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | 3 1 8 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 133 |
| 9 பரிசுகள் | 3 1 8 | ரூபா. 100/= | பரிசுகள் 1358 |
| 10 பரிசுகள் | 3 1 | ரூபா. 50/= | பரிசுகள் 13180 |
| 11 பரிசுகள் | M | ரூபா. 20/= | பரிசுகள் 52795 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 13,942,520.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு உன் னிச்சைப் பகுதிக்கு கடந்த சனிக்கிழமை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் இன நல்லிணக்கத்துக்கான பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் விஜயம் செய்து போரால் அழிவடைந்த இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் வாழ்வாதாரத் திட்டங்கள் பலவற்றை ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உரை நிகழ்த்துவதையும் பயனாளி ஒருவருக்கு கால்நடைஒன்றை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: ஜப்பர்கான்)*

# பிரதமர் டி.எம்.ஜயரத்ன 4 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம்

மட்டக்களப்பு, நவ.1

பிரதமரும் புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமான ரி.எம்.ஜயரத்ன எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்து அனைத்து ஆலயங்களையும் சேர்ந்த பிரதி நிதிகளைச் சந்திக்கவுள்ளார்.

அன்றைய தினம் 10 மணிக்கு மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த இசை நடன கற்கைகள் நிறுவக மண்டபத்தில் இம்மாவட்ட இந்து ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் பிரதமர் விசேட உரை நிகழ்த்துவார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், அரச உயர் அதிகாரிகள் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வர். பிரதமர் அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூஜையிலும் கலந்து கொள்வார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு மட்டு. மாவட்ட இந்து ஆலயங்கள், நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் மேற்குறித்த கூட்டத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அழைப்புக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. அத்தோடு இக்கூட்டத்திற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது.

அண்மையில் பிரதமர் தொடர்ச்சியாகப் பல்வேறு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து சமய நிறுவனங்களைச் சார்ந்த பிரமுகர்களைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# உளநலப் பிரச்சினைகளின் தீர்வுக்கு வீதி நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு

## சுகாதார சேவைகள் பணிமனை நடவடிக்கை

மட்டக்களப்பு, நவ.1

உளநலம் தொடர்பான பிரச்சினைகள், அவற்றிற்கான பரிகாரங்கள் ஆகியவற்றை வீதி நாடகங்கள் மூலம் உணர்த்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினரால் இவ்வீதி நாடகங்கள் மட்டக்களப்பு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் முன்னாலும் செங்கலடி நகரிலும் இவ்வீதி நாடகங்கள் நடத்தப்பட்டன. வாகனேரி உட்படப் பல்வேறு பகுதிகளிலும் இவ்வீதி நாடகங்கள் நடத்தப்படும் என நுண்கலைப் பீடத்தினர் தெரிவித்தனர்.

மக்கள் மத்தியில் உள்ள உளநலம் தொடர் பான சிக்கல்களை இனங்காணுதல், அவர்கள் மூலமாகவே அவற்றிற்குத் தீர்வு காணுதல், உள நலம் தொடர்பான பிரச்சினைகளை இனங்காணுதல், இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் ஆகிய பல நோக்கங்களின் அடிப்படையிலேயே இந்த வீதி நாடகங்கள் நடத்தப்படுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ளி)

# கிழக்கில் கடலரிப்பைத் தடுக்க சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை

ஆலையடிவேம்பு, நவ.1

கிழக்கில் துரிதமாக அதிகரித்து வரும் கடலரிப்பைத் தடுப்பதற்கான வேலைத் திட்டமொன்றை சுற்றாடல் அதிகாரசபை மேற்கொண்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியும், தொழில்நுட்ப உதவிகளும் கிடைத்துள்ளன.




ஆழிப்பேரலை அனர்த்தங்களுக்குப் பின்னர் அம்பாறை மாவட்டத்திலேயே கடலரிப்பு மிக வேகமாக இடம்பெற்று வருகிறது. கல்முனைக் கடற்கரையோரங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்கு பாறாங்கற்கள் போடப்படுகின்றன.

கிழக்கு கரையோரப் பகுதிகளில் தென்னையும், பனையும் நடுகை செய்யப்படுகின்றன. முன்பு இருந்த தென்னைகளும், பனைகளும் ஆழிப்பேரலையின் போது முற்றாக அழிந்துள்ளன.

மர நடுகை வேலைத்திட்டத்தை கரையோரப் பகுதி மக்களின் ஒத்துழைப்புடனும் கரையோர உள்ளூராட்சிச் சபைகளின் அனுசரணையுடனும் சுற்றாடல் அதிகாரசபை மேற்கொண்டுள்ளது.

கரையோரப் பகுதியில் ஆழிப்பேரலையால் மீன்பிடித் தொழிலைக் கைவிட்டவர்களை மீண்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சும் சுற்றாடல் அதிகாரசபையும் முன்வந்துள்ளன.

இவற்றால் கூட்டாக மீன்பிடி வள்ளங்களை நிறுத்தி வைப்பதற்கு இறங்கு துறைகளும், மீனவர்கள் ஓய்வு எடுப்பதற்கு மண்டபங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் கலங்கரை விளக்கங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடலரிப்பைத்தடுக்கும்வேலைத் திட்டத்தின் கீழ் கரையோரங்களில் கடற்கரை மணல் அகழ்வுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கரையோரங்களில் அழிந்து போன மூலிகைக்கன்றுகளுக்கு ஈடாக ஆயுர்வேத திணைக்களத்தால் மர நடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ளி)

# மாத்தளை மாவட்ட வைத்தியசாலையை மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும்

மாத்தளை, நவ.1

மாத்தளை வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வந்து அதனைத் தரமுயர்த்த வேண்டும் என மாத்தளை மாநகரசபை, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அப்போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாக இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தனர்.

தம்புள்ள, கலேவல, லக்கல, வில்கமுவ, ரத்தோட்டை, யட்டவத்த, பக்கமுன, ஹபரண, அலவத்துகொட, வத்தேகம மற் றும் மினிப்பே ஆகிய பிரதேசங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

நாளொன்றுக்கு சுமார் 1,500 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, இவ் வைத் தியசாலை மத்திய அரசால் பொறுப் பேற்கப்பட்டு தரமுயர்த்தப்பட வேண்டும் - என மாநகரசபை உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ளி)

# தீபாவளியை முன்னிட்டு ஹட்டனில் விசேட பாதுகாப்பு

கொழும்பு,நவ.1

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் நகருக்கு வரும் மக்களின் நலன்கருதி விசேட பொலிஸ் பாதுகாப்புசேவை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

பொலிஸார் சீருடையிலும், சிவில் உடையிலும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீபாவளிப் பண்டிகை காலங்களில் ஹட்டன் நகருக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். எனினும், இக்காலங்களில் திருடர்களின் நடமாட்டமும் அதிகரிக்கும் என்ற காரணத்தினால் பொது மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும் என ஹட்டன் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் நகரில் வியாபார நடவடிக்கைகள் களை கட்டியுள்ளன. (ளி)

# கமநெகும திட்டத்தின் கீழ் அம்பகமுவவில் 137 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

நுவரெலியா, நவ.1

அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் கமநெகும திட்டத் தின் கீழ் சுமார் 137 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் பி.ஆர்.புஸ்பகுமார தெரிவித்தார்.

மேற்படி திட்டங்களுக்கென அரசு 36,64,920 ரூபாவை ஒதுக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதேச செயலாளர் மேலும் கூறியவை வருமாறு:-

மேற்படி திட்டங்களில் 119 திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. மேலும் பல வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வட்டவளை மௌன்ட்ஜீன் தோட்டத்தில் குடிதண்ணீர்த்திட்டம் ஒன்றை அமைப்பதற்காக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கியுள்ளார்.

டிக்கோயா இன்ஜென்டி தோட்டத்தில் புதிய கொங்கிரீட் பாதை அமைப்பதற்காக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் 1,50,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

மேலும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரீரங்கா நோர்வூட் வெஞ்சர் தோட்டத்தின் குடிதண்ணீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை, ஆக்ரோயா, கோலாதெனிய, சென்கிளிவ் கொலனி ஆகிய பகுதிகளிலும் சீரான பாதை வசதிகள் இல்லை. பாதை வசதிகள் இல்லாத காரணத்தால் பஸ் சேவைகளும் இடம்பெறுவதில்லை. எனவே, இந்தப் பாதைகளையும் செப்பனிடுவதற்கு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும் - இவ்வாறு பிரதேச செயலாளர் புஸ்பகுமார தெரிவித்தார். (ளி)




# விளக்கமறியல்

கொழும்பு, நவ.1

மாத்தளை வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நோயாளியைப் பார்வையிடச் சென்ற பெண்ணொருவரை வல்லுறவுக்குட்படுத்த முயன்ற ஆண் தாதி ஒருவரை மாத்தளை பொலிஸ் நிலைய மகளிர் பிரிவினர் கைது செய்தனர்,

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மாத்தளை நீதிவான் சத்துரிக்கா டி சில்வா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவரை வரும் நவம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (ளி)

# நாவலப்பிட்டியில் கஞ்சா வியாபாரி அவரது சொகுசு வீட்டில் கைதானார்

நாவலப்பிட்டி,நவ.1

நாவலப்பிட்டியில் பெரியளவில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கோடீஸ்வரன் ஒருவர் நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது அவரது அதி சொகுசு வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி நகர வாசியான இவர் கம்பளை, கண்டி, நாவலப்பிட்டி, அட்டன், கினிகத்தேனை உட்படப் பல்வேறு பகுதிகளுக்கும் கஞ்சா விநியோகம் செய்து வந்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஏற்கனவே இவரது முகவர்களாகச் செயற்பட்டு வந்த பலர் வைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் பின்னரே மூல கர்த்தாவான இந்தக் கோடீஸ்வரரின் அந்தரங்கம் வெளியானது.

சம்பவதினம் தனது அதி சொகுசு காரில் கஞ்சாப் பொதியை ஏற்றிக் கொண்டு தனது நான்கு மாடி சொகுசு வீட்டுக்கு வந்த போது மறைந்திருந்த பொலிஸ்குழு இவரைக்கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளது.

தனமல்வில, எம்பிலிப்பிட்டிய போன்ற பிரதேசங்களில் வாங்கும் கஞ்சாவை நாவலப்பிட்டிக்குக் கொண்டுவர பொலிஸ் அதிகாரிகளும் இராணுவச் சிப்பாய்களும் இவருக்கு உதவி வந்தனர். இவ்வாறு அண்மையில் இரண்டு கிலோ கஞ்சாவுடன் நாவலப் பிட்டியில் பிடிபட்ட இராணுவ சிப்பாயிடம் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பின்னரே இந்தக் கோடீஸ்வரரை அணுக முடிந்ததென நாவலப்பிட்டி பொலிஸ் பொறுப்பதிகாரி உதய விக்கிரம சேகர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சமயம் இவர் மொத்தமாக 76 பவுண் நகைகளை அணிந்திருந்தாராம். மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் கிழக்கு சிவன் முன்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் முன்பள்ளித் தலைவர் சிவநடராசா, பெற்றோர் சங்கத் தலைவர் சுரேஸ், விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி ஆலோசகர் திருமதி வாலாம்பிகை ஆகியோர் மற்றும் ஆசிரியர்கள் மாலைசூட்டி கௌரவிக்கப்பட்டு முன்பள்ளிச் சிறார்கள் சகிதம் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.


ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 69
திகதி - 30.10.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து D | அதிர்ஷ்ட இலக்கம் 09 | வெற்றி இலக்கம் 0 6 5 4 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D 09 0 6 5 4 6 | ரூ. 20,923,881.00 | - |
| 1 பரிசு | 09 0 6 5 4 6 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 0 6 5 4 6 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 6 5 4 6 | ரூ. 10,000.00 | 28 |
| 4 பரிசு | 5 4 6 | ரூ. 1,000.00 | 256 |
| 5 பரிசு | 4 6 | ரூ. 50.00 | 2586 |
| 6 பரிசு | 6 | ரூ. 20.00 | 24902 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 0 6 5 4 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 0 6 5 | ரூ. 100.00 | 256 |
| 9 பரிசு | 0 6 | ரூ. 50.00 | 2598 |
| 10 பரிசு | D | ரூ. 20.00 | 10176 |
| 11 பரிசு | D 09 | ரூ. 100.00 | 1148 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,961,160.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 21,310,390.00


# தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்கு அரசதரப்பு எம்.பிக்கள் நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, நவ.1

தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, முருகேசு சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோர் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் 17 வேலைத் திட்டங்களுக்கு 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சாவகச்சேரி மகளிர் அபிவிருத்திச் சங்கத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய ஒரு லட்சம் ரூபாவும், கைதடி முதியோர் இல்ல கட்டட புனரமைப்புக்கு 40 ஆயிரம் ரூபாவும், மந்துவில் இரத்தினம் சனசமூக நிலைய கட்டடத் திருத்தத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி- கச்சாய் வீதி உதயசூரியன் சனசமூக நிலையம், கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு தலா 30 ஆயிரம் ரூபாவும், கொடிகாமம் தவசிகுளம் தெற்கு முன்பள்ளிக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலைக் கட்டடத் திருத்தம், உபகரணங்கள் கொள்வனவு ஆகியவற்றுக்கு 50 ஆயிரம் ரூபாவும், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம், கொடிகாமம், பளை அபிவிருத்திச் சங்க முன்பள்ளி ஆகியவற்றுக்கு தளபாடம் கொள்வனவு செய்ய தலா 50 ஆயிரம் ரூபாவும், கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையம், நுணாவில் தெற்கு சர்வசாதன சனசமூக நிலையம், நாவற்குழி சான்றோர் சனசமூக நிலயம் ஆகியவற்றுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய தலா 30ஆயிரம் ரூபாவும், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் மட்டுவில் சந்திரபுரம் நெசவு நிலைய புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும் மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை விளையாட்டு மைதான அபிவிருத்தி வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 30 ஆயிரம் ரூபாவும் மட்டுவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 40 ஆயிரம் ரூபாவும், மறவன்புலோ ஐங்கரன் சனசமூக நிலைய திருத்த வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த - 207)

## இரு பெண்களுக்கு கைமுறிந்தது

தென்மராட்சி, நவ.1

இருவேறு விபத்துச் சம்பவங்களில் சிக்கி கை முறிந்த நிலையில் இரண்டு பெண்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மிருசுவில் கெற்பேலியைச் சேர்ந்த தெய்வேந்திரம் சரஸ்வதி (வயது 49) என்பவரின் கை மீது மரத்திலிருந்து தேங்காய் வீழ்ந்ததாலும்-

மீசாலை அல்லாரையைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி அகிலேஸ்வரி (வயது 50) என்பவர் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்ததாலும் -

இவர்களின் கைகள் முறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் தெ. சரஸ்வதி என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (எ - 207)

## 'கற்றாக்' பாதிப்புக்குள்ளானோர் பெயர்களைப் பதிவுசெய்யவும்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், கொழும்பு ஹெந்தல கண்வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு விரைவில் வரவுள்ளனர். இதன்போது விழிவெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்டவர்களுக்கு இலவச கண் சத்திர சிகிச்சைகள் இந்த நிபுணர் குழுவால் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே 'கற்றாக்' பாதிப்புக்கு உள்ளானவர்கள் உடனடியாக சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள 'விமலாஸ்' வர்த்தக நிறுவனத்திலோ அல்லது 0777178069 இலக்க தொலைபேசியுடனோ தொடர்பு கொண்டு பெயர்களைப்பதிவு செய்யுமாறு லயன்ஸ் கழகத்தலைவர் லயன் தி.முருகதாஸன் அறிவித்துள்ளார். (எ-207)

## அபராதம்

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய மீசாலை வடக்கைச் சேர்ந்த நபருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கினைக் கடந்த வியாழக் கிழமை விசாரித்த சாவகச்சேரி நீதி மன்ற மேலதிக நீதிவான் மா. கணேசராசா குறித்த நபருக்கு 14 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் 3 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (எ-207)


உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 573
திகதி 2010/10/30

சுப்பர் இலக்கம் 23 | வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 14 18 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 32,508,609.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 331 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 653 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 16,037 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 9,262 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 231,781 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 37,071 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 11,216,220.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 32,620,864.80

தேசிய லொத்தர் சபை



ௐ

வட்டக்கச்சி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி துணை

# முதலாம் ஆண்டு நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

எமது கண் கண்ட தெய்வம்



அன்னை மடியில்: 02.11.1948

அரனடியில்: 12.11.2009

திதி: ஏகாதசி

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரம் (பிறப்பிடம்)

இல.304, மாயவனூர், வட்டக்கச்சி (வசிப்பிடம்)

எங்கள் அன்புத் தெய்வம்

## திருமதி அழகேஸ்வரி (கிளி) வேலாயுதம் (தம்பு)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (02.11.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.304, மாயவனூர், வட்டக்கச்சி.

சி.வேலாயுதம் (தம்பு- கணவர்)
குடும்பத்தினர்.



# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



## திரு. நடராசா தாமோதரன்

ஆசிரியர் பணியில் 36 வருடங்களை நிறைவு செய்து விஞ்ஞான ஆசிரியராக, உப அதிபராகக் கடமையாற்றிய எமது பாடசாலையின் உப அதிபர் திரு.நடராசா தாமோதரன் 30.10.2010 இல் மணி விழாவைக் கொண்டாடி தனது 60 ஆவது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் தொடர்ந்து உடல் ஆரோக்கியத்துடன் கல்விப் பணியும் சமூகப்பணியும் ஆற்றி பல்லாண்டுகாலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்த விசுவாசிகள் துயிலும் யாழ். புனித மரியாள் சேமக்காலை



நிரந்தரமற்ற இவ்வுலகில் நிரந்தரமானது என்றும் மரணம் ஒன்றுதான். ஆட்சிபுரிவோர், ஆளப்படுவோர், உயர்ந்தவன், தாழ்ந்தவன், செல்வந்தன், ஏழை, படித்தவன், பாமரன் என்ற எந்த நிலையினர்க்கும் மரணம் விதிவிலக்கல்ல, ஆவி அகன்றதும் மனித உடல் பூதவுடல் என்று பெயர் பெறுகிறது. அந்த உயிரற்ற உடலை அவரவர் சமய முறைகளுக்கேற்ப எரித்தும் புதைத்தும் விடுகிறோம். இறுதிச்சடங்குகளை நிறைவேற்றும் 'சமரசம் உலாவும் இடமாக' மயானங்கள் அமைந்துள்ளன.

இன்றைய யாழ். நகர வலம் பகுதியில் யாழ்.பிரதேசத்தில் வாழும் கத்தோலிக்கர்களின் சேமக்காலைகளில் தொன்மைவாய்ந்ததும், பெரியதுமான யாழ்.புனித மரியாள் சேமக்காலையின் வரலாற்றையும் நடைமுறைச்செயற்பாடுகளையும் நோக்குவோம். கொச்சேஞ்சி மாதா சேமக்காலை எனவும் இதனை அழைப்பதுண்டு.

கத்தோலிக்கத் திருச்சபையானது நவம்பர் மாதத்தில் இறந்தோரை நினைவு கூர்ந்து அவர்களுக்காக செபிக்கும் மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அத்தோடு நவம்பர் 2ஆம் திகதியை இறந்த அனைத்து விசுவாசிகளின் தினமாகவும் காலங் காலமாக அனுசரித்து கல்லறைத் தோட்டங்களில் திருப்பலி வழிபாடுகளை அன்றைய தினம் விசேடவிதமாக நடத்தி வருகின்றது.

'இயேசு சாவை வென்று உயிர்த்தெழுந்தார்' எனவே அவரது சாயலான மனிதன் அவரது வருகையின் போது உயிர்பெறுவான் (1கொரி15:23) என்னும் விசுவாச சத்தியத்திற்கு அமையவும், 'புனிதர் நிலை' உயர்த்தலுக்கு கல்லறைச் சாட்சியத் தரவுகளும் நோக்கப்படுதலுக்கமையவும் இறந்தவர்களின் உடல்களை கத்தோலிக்கர்கள் கல்லறைகளில் புதைக்கும் மரபு பின்பற்றப்படுகின்றது.




இந்த வகையில் யாழ்.பிரதேச கத்தோலிக்கர்களின் பூமதானத்திற்கென (அடக்கம்) யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலை உருவாக்கப்பட்டது. யாழ். சென்.பற்றிஸ் வீதியில் பத்திரிசியார் கல்லூரிக்கு அண்மித்ததாக இந்த நல்லடக்கமயானம் உள்ளது.

யாழ்.அப்போஸ்தலிக்க மறைமாவட்டத்தின் முதலாவது ஆயர் வண.ஓறாசியோ வெற்றக்கினி ஆண்டகையின் ஆளுகைக்காலமான 1850 ஆம் ஆண்டு இதற்குரிய நிலப்பகுதி பெறப்பட்டது. சேமக்காலைக்குரிய வகையில் சீரமைக்கப்பட்ட பின் 1874 இல் ஆயர் மேதகு கிறீஸ் தோப்பர் பொன்ஜின் (O.M.I) ஆண்டகையின் காலத்தில் உடல்களை அடக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கல்லறைத்தோட்டத்தின் வழிபாட்டுக்கும் பாதுகாப்புக்கும் ஒரு ஆலயம் தேவை என்பதை உணர்ந்த ஆயர் மேதகு கென்றீயூலைன் (O.M.I) ஆண்டகை 1894 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி தற்போதைய சிற்றாலயத்துக்கான அடிக்கல்லை நாட்டினார்.

கட்டுமானப் பணிகள் சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் அனிஅலோசியஸ் கார்டினர் மற்றும் அவர்களது பிள்ளைகள் சிறில், மங்களம் ஆகியோரின் பங்களிப்புடன் 1895 இல் நிறைவு பெற்றன. அப்போது இதற்கு 3 ஆயிரம் ரூபா மட்டுமே செலவாகியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ''விடுதலை மாதா'' என்னும் திருச்சொரூபம் கத்தோலிக்க பெருமக்களின் உதவியுடன் நிறுவப்பட்டது.ஆயர் யூலைன் ஆண்டகை ஆலயத்தை மந்திரித்து திறந்து வைத்தார். யாழ்.மறைமாவட்டத்தின் குரு முதல்வராக இருந்த அருட் திரு மவுறோயிற் அடிகளார் மறுநாள் முதலாவது திருப்பலியை நிறைவேற்றினார். இச்சான்றுகள் சுவாமி ஞான பிரகாசரின் 25 வருட கத்தோலிக்க வளர்ச்சி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

யாழ்.மரியன்னை பேராலயத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் மரியாள் சேமக்காலை யில் அன்றிலிருந்து இன்று வரை யாழ். மறைக்கோட்ட கத்தோலிக்கர்களின் பல்லாயிரக் கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.

குருநகர், யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம், பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலை, நல்லூர், திருநெல்வேலி, சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வு, நாவாந்துறை போன்ற பகுதிகளில் உள்ள மக்களின் அந்திமகால சடங்குகளுக்கு இம்மயானம் பயன்படுத்தப்படுகின்றது. அண்மைக் காலங்களில் நாவாந்துறை பகுதிக்கென இங்கு தனியான புதைப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்பவனுக்கு மரணம் வாழ்வின் முடிவல்ல. அது நித்திய வாழ்வின் ஆரம்பம் என்னும் மறுவாழ்வுக்குரிய ஆன்மாவைத் தாங்கிய உடல்களின் புதைகுழிகள் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. குருமாருக்கென ஒரு பகுதியும், கன்னியர்களுக்கென வேறு பகுதியும் ஒதுக்கப்பட்டு ஒரே வடிவிலான கல்லறைகள் ஒழுங்காக நிறுவி பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இறந்தவிசுவாசிகளுக்கென பொதுக் கல்லறைகளும், உரிமம்வழங்கப்பட்ட கல்லறைகளும் இருக்கின்றன. 'ஆடி அடங்கும் வாழ்கையடா ஆறடி நிலமே சொந்தமடா' என்றவாறு உரிய பணம் செலுத்தி உரிமம் பெற்றுக்கொண்ட கல்லறைகளில் குடும்ப அங்கத்தவர்களை பரம்பரையாகவும் புதைக்க முடியும்.

இடநெருக்கடி காரணமாக தற்போது உரிமக்கல்லறைகள் வழங்கப்படுவதில்லை. பெயர் பொறிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்கு நினைவுகூரக் கூடிய முறையில் கல்லறைகள் கொடுக்கப்படுகின்றன.

மண்டைதீவுக் கடற்பகுதியில் வைத்து 'தூயஒளி' வடக்கில் 1986 ஆம் ஆண்டு வெட்டிக்கொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் சடலங்கள் ஒரே பகுதியில் நிரையாக அடக்கம் செய்யப்பட்ட சோக நிகழ்வும் இங்கே இடம்பெற்றது. அப்போதைய ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அனைவருக்கும் சவப்பெட்டி மற்றும் வசதிகளை செய்து கொடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. புனித யாகப்பர் ஆலய குண்டு வீச்சில் பலியானோரின் துயர இறுதி நிகழ்வுகளும் நடந்தேறியுள்ள முக்கிய பதிவுகளில் ஒன்றாகும்.

தற்போது குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பகுதியும் சேமக்காலைக்கு உரியதே. தற்கொலை செய்வோர் மற்றும் ஒருதார திருமண சட்ட முறைமையினின்று விலகி சட்டபூர்வமற்ற மணவாழ்வுகளில் ஈடுபடுவோர் மற்றும் அநாதைகளின் உடல்களை அடக்கம் பண்ணும் புறச்சவக் காலையாகப் பயன்படுத்தப்பட்டது.

கத்தோலிக்க மறுசீரமைப்பு சட்டதீர்மானங்களின் படி பல தசாப்தங் களுக்கு முன் அனைத்து விசுவாசிகளின் உடல்களும் ஒரே சேமக்காலையில் உள்வாங்கப்பட்டன. இதனையடுத்து அப்பகுதி பொது அமைப்புக்கள், இளைஞர்களின் கோரிக்கைக்கு அமைய ஆயர் இல்லத்தால் விளையாட் டுத் தேவைக்கென கையளிக் கப்பட்டது.

தற்போது சுற்றுப்புற மதில்கள் உயர்த்திக் கட்டப்பட்டு வாயில் வளைவும் அமைக்கப்பட்டு குருக்கள், கன்னியரின் சிதைவுற்ற கல்ல றை கள் புனரமைக்கப்பட்டு பெயர் மற்றும் விவரங் கள் அடங்கியகற்களும் பதிக்கப்பட்டுள்ளன.

இடப்பற்றாக்குறைஇங்கு தோன்றியுள்ள நிலையில் நூறாண்டுகளை நெருங்கும் காலங் கடந்த உரிமை கோரப்படாத சிதைந்த கல்லறை கள் பல காணப்படுகின்றன. தற்போது இவற்றை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளதாக கருத்துக் கூறப்படுகிறது.

வருடந்தோறும் நவம்பர் 2 ஆம் திகதி இறந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக சிற்றாலயத்தில் மாலைத்திருப்பலி நிறைவேற்றப்பட்டு செபிக்கப் படுகின்றது.முன்னதாக கத்தோலிக்க அமைப்புக்கள் இளையோர் ஒன்றியங்கள், மற்றும் உரித்துடையோரால் கல்லறைகளும், வளாகப்பகுதிகளும் சுத்தம் செய்யப்படும். வர்ணங்கள் பூசி அழகு படுத்தப்படும்.

கல்லறைத் திருநாளன்று உறவினர்கள் மெழுகுவர்த்திகள் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி, அந்த ஒளி வெள்ளத்தினிடையே பாச உறவுகளை நினைவு கூர்ந்து கண்ணீர் காணிக்கைகள் செலுத்துவர். மக்கள் வெள்ளம் சேமக்காலையை நிறைத்திருக்கும்.

**எஸ்.யேசுதாஸ்**

அழுகையும், விம்மல்களும் ஏக்கப் பெருமூச்சுக்களும் தொடர்ந்து கேட்டும் நாட்டின் அசாதாரண நிலைகளால் உடல்கள் அற்று கல்லறைகள் இன்றி காணாமல் போன உறவுகள் ஏராளம். இவர்களை யெல்லாம் நினைத்து கதறும் பெற்றோர், சகோதரர், மனைவி, உறவினர்களின் உள்ளக்குமுறல்கள் நெஞ்சை உருக்கும் காட்சிகளாகும்.

மறைப்பணியாளர்கள், புத்திஜீவிகள், ஆசிரியர்கள், வழிகாட்டிகள், தொழில்சார் சேவையாளர்கள், குடும்ப அங்கத்தவர்கள் என பலதரப்பட்டவர்களும் சங்கமிக்கும் கல்லறைத் தோட்டங்கள் ஒவ்வொருவரின் சேவைகளையும், வாழ்வின் நெறிகளையும்பறைசாற்றும்நினை விடங்கள் மட்டுமல்ல, மரணத்தையும் நினைவுபடுத்தும்காலக்கடிகாரங்களாகும்.

வாழ்வோராகிய நாமும் இறுதி நாளில் அடங்கப்போகும் மயானங்களை சுத்தமாக வைத்திருக்க முயற்சிப்போம். அது போலவே உள்ளங்களையும் தூயதாக்கி இறைவழி நடப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

## க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
திரு.வி.பரணிதரன்,
மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்,
பதுளை.
தொ.பே.இல: 072-5562646

G.C.E.(O/L) வலம்-4 வெளியீடு-1 பதுளை

## விஞ்ஞானம் - I

நேரம்: 1 மணித்தியாலம்

01. இலத்திரனை கண்டுபிடித்தவர்.
1) சட்விக். 2) J.J.தொம்சன். 3) இரதபோட். 4) தாற்றன்.

02. உந்தம், உந்தமாற்று வீதம் என்பவற்றின் அளவுகள் முறையே.
1) $kgms, kgms^{-1}$ 2) $kgms^{-1}, kgm$ 3). $kgms^{-1}, kmgs^{-2}$ 4) $kgms^{-2}, kmgs^{-1}$

03. குழிக்குடலிகளுக்கு உதாரணம். 13
1) மண்புழு. 2) நண்டு. 3) ஐதரா. 4) நத்தை.

04. அலுமினியத்தின் நியம குறியீடு $^{27}Al$ ஆகும். $Al^{31}$ அயனில் உள்ள இலத்திரன்கள், நியூத்திரன்கள் என்பவற்றின் எண்ணிக்கைகள் முறையே.
1) 13, 14 2) 13, 27 3) 10, 13 4) 10, 14

05. விஞ்ஞான முறையின் முதலாவது படிமுறை.
1) எதிர்வுகூறல். 2) அவதானம்.
3) முடிவுகூறல். 4) கருதுகோள் உருவாக்கல்.

06. 20kg திணிவுடைய பொருள் $3ms^{-1}$ வேகத்தில் இயங்குகின்றது. இப்பொருளின் இயக்கப்பாட்டு சக்தி,
1) 60J 2) 180J 3) 66.6J 4) 90J

07. தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
1) கலங்களில் கடத்தல் செயற்பாட்டை அகமுதலுருச் சிறுவலை, கொல்கியுடல் என்பன மேற்கொள்கின்றன்.
2) இலைகளில் கீழ்புற மேற்றோலில் மட்டுமே இலைவாய்கள் உள்ளன.
3) ஒளித்தொகுப்பு தாக்கத்திற்கு எதிரான இரசாயன செயன்முறைகள் இழைமணியில் நிகழ்கின்றன.
4) சைகஸ் தாவரம் பூக்களை உருவாக்காதபோதும் வித்துக்களை உருவாக்கும்.

08. மூலகம் X ஆனது இரண்டாம் கூட்டத்தை சேர்ந்ததாகும். மூலகம் X இன் பொசுபேற்றின் சூத்திரம்,
1) XPO 2) $X_2PO_4$ 3) $X_3(PO_4)_2$ 4) $X(PO_4)_3$

09. நிலமட்டத்தில் இருந்து () வேகத்தில் நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்படும் பந்து 2 செக்கனில் அடையும் உயரம்,
1) 140m 2) 120m 3) 100m 4) 80m

10. வல்லுருக்கலவிழையத்தின் இயல்பு அல்லாதது?
1) வன்மையற்றது. 2) கலத்திடைவெளி அற்றது.
3) இறந்த கலங்களலானது. 4) இலிக்னின் படிவு கொண்டது.

11. உயர் உருகுநிலை, உயர் கொதிநிலை கொண்ட மூலகம்.
1) சோடியம். 2) ஐதரசன். 3) காபன். 4) ஒட்சிசன்.

12. A- ஏமறைற்று B- மக்னைற்று C- போக்சைற்று D- கானலைற்று
மேலுள்ள உலோகத்தாதுக்களில் இரும்பு பிரித்தெடுப்புக்கு பயன்படுவது.
1) A, Bமட்டும். 2) A, C மட்டும். 3) B மட்டும். 4) C, D மட்டும்.

13. எல்லை உராய்வு விசையில் செல்வாக்கு செலுத்தாத காரணி,
1) தொடுகை மேற்பரப்பின் தன்மை. 2) தொடுகையுறும் பரப்பு.
3) செவ்வன் மறுதாக்கம். 4) உராய்வு குணகம்.

14. கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக்கம் அண்ணளவாக,
1) 76mmHg 2) 760cmHg 3) 76cmHg 4) 760mmHg

15. நிலத்தாவரங்களில் எச்செயன்முறை மூலம் நீர், கனியுப்புக்கள் உயரமான பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றது?
1) பிரசாரணம். 2) உயிர்ப்பான கொண்டுசெல்லல்.
3) திணிவுப்பாய்ச்சல். 4) பரவல்.

16. திரவ அமுக்கம் தங்கியிராத காரணி,
1) கனவளவு. 2) ஆழம்.
3) அடர்த்தி. 4) புவியீர்ப்பு ஆர்முடுகல்.

17. A- கல்சியம் அயன், B- இரும்பு அயன், C- விற்றமின் A, D- விற்றமின் மேலுள்ளவற்றில் குருதி உறைதலுக்கு அவசியமான காரணிகள்,
1) A,B மட்டும். 2) B,C மட்டும். 3) A,D மட்டும். 4) A,C,D மட்டும்.

18. எரியும்போது மஞ்சள், வெள்ளை நிற சுவாலைகளை தரும் உலோகங்கள் முறையே,
1) Mg, K 2) K, Na 3) Na, Mg 4) T, Mg


19. 400K வெப்பநிலை $^0F$ இல்,
1) $1230^0F$ 2) $300^0F$ 3) $196.60^0F$ 4) $260.6^{00}F$

20. உட்சுவாசப் பொறிமுறையின்போது நடைபெறாதது,
1) பிரிமென்றகட்டு வளைவு குறைதல். 2) விலாஎன்விடை தசைகள் தளர்தல்.
3) நெஞ்சறை கனவளவு அதிகரித்தல். 4) நெஞ்சறை அமுக்கம் குறைதல்.

21. மெழுகுவர்த்தி ஒளிரும்போது காபனீரொட்சைட்டு, நீராவி, வெப்பம் என்பன வெளிவிடப்படும். காபனீரொட்சைட்டு, நீராவி என்பவற்றை இனங்கான ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் முறையே,
1) $C_2(OH)_2$, $CuSO_4$ 2) $C_2CO_3$, $CuSO_4.H_2O$
3) $C_2(OH)_2$, $CuSO_4$, $H_2O$ 4) $CaC_2$, $CuSO_4$

22. காட்டுத்தீ ஏற்பட்டவேளை காட்டின் ஒருபகுதி வெட்டி அகற்றப்பட்டு தீ கட்டுப்படுத்தப் பட்டது. இங்கு நீக்கப்பட்ட தகனத்திற்குத் தேவையான காரணி,
1) எரிபொருள். 2) தகனத்துணையி. 3) எரிபற்றுநிலை. 4) யாவும் சரி.

23. ஒரு முனை மூடப்பட்ட குழாயினுள் இரசம் காணப்படுவதை படம் காட்டுகின்றது. திறந்த முனை மேல்நோக்கி இருக்கும் போது வளி நிரலின் உயரம் h ஆகும். இக்குழாயை கிடையாக வைத்தால்,
1) h இன் உயரம் கூடும்.
2) h இன் உயரம் மாறாது.
3) h இன் உயரம் குறையும்.
4) கூறமுடியாது.




24. தோலின் தொழில் அல்லாதது,
1) நிர்ப்பீடனம் வழங்கள் 2) கழிவகற்றல்
3) அமைனகற்றல் 4) விற்றமின் D தொகுப்பு

25. 330Hz அதிர்வெண் கொண்ட இசைக்கவை அதிரும்போது ஏற்படும் அலையின் அசைவு காலம்,
1) 330s 2) 1/330s 3) 330×330s 4) 1/330s

26. முனைவுத்தன்மையற்ற பதார்த்தம்,
1) நீர் 2) மண்ணெண்ணெய்
3) கொண்டிசு 4) சீனி


27. கரைதிறனை அதிகரிக்கும் நடவடிக்கை அல்லாதது,
1) வெப்பமேற்றல். 2) அமுக்கத்தை அதிகரித்தல்.
3) கரையம்/ கரைப்பானை மாற்றுதல். 4) கலக்குதல்.

28. அனுசேப செயற்பாட்டுடன் தொடர்புடைய ஓமோன்,
1) GH 2) தைரோட்சின் 3) அதிரினலின் 4) ஈஸ்ட்ரஜன்

29. உடல்நலமுள்ள ஒருவரின் சதையியின் இலங்ககான் சிறுதீவுகளின் β தமது சுரப்பை சுரப்பது,
1) குருதியில் குளுக்கோசு அதிகரிக்கும்போது.
2) சிறுநீரில் குளுக்கோசு செறிவு கூடும்போது.
3) குருதியில் குளுக்கோசு மட்டம் குறையும்போது.
4) நீரிழிவு நோய் ஏற்படும்போது.


30. அமிலம், மூலம், உப்பு என்பன முறையே
1) HCl, $MgCl_2$, $Na_2SO_4$ 2) $HNO_3$, $Ca(OH)_2$, NaCl
3) $H_2SO_4$, $CaCl_2$, $Mg(OH)_2$ 4) $NH_4Cl_2$, $Na_2SO_4$, NaCl

31. அருகில் உள்ள சுற்றில் ஒளிரக்கூடிய LED அல்லது LED க்கள்,
1) A, B மட்டும்.
2) A,B,C எல்லாம்.
3) A மட்டும்.
4) C மட்டும்.




32. கம்பி ஒன்றின் தடைதிறன் தங்கியுள்ள காரணிகளை மட்டும் கொண்ட கூட்டம்,
1) திணிவு, நீளம், மின்னோட்டம். 2) கனவளவு, நீளம், அடர்த்தி.
3) நீளம், குறுக்குமுகபரப்பு, அடர்த்தி. 4) திணிவு, நீளம், நேரம்.

33. கம்பியினுள் காந்தத்தின் வடமுனையை செலுத்தியபோது (G) கல்வனோமானியில் திரும்பல் ஏற்பட்டது. கல்வனோமானியின் திரும்பலை அதிகரிக்கச் செய்ய,
1) கம்பிச்சுருளின் எண்ணிக்கையை குறைத்தல்.
2) வலிமையற்ற காந்தத்தை பயன்படுத்தல்.
3) காந்தத்தை விரைவாக அசைத்தல்.
4) மேற்கூறிய யாவும் பொறுத்தமன்று.




34. டெங்கு நோய் காரணி, நோய் காவி என்பன முறையே,
1) ஈடிஸ், ஆபோவைரசு. 2) ஆபோவைரசு, ஈடிஸ்.
3) கியூலெக்ஸ், பியஸ்மோடியம். 4) கியூலெக்ஸ், ஈடிஸ்.

35. ஒலி அலையின் இயல்பு அல்லாதது,
1) வளியை விட வெற்றிடத்தில் மிக விரைவாக செல்லும்.
2) பொறிமுறை அலையாகும்.
3) துணிக்கைகள் அதிர்வதன் மூலம் உருவாகும்.
4) மனிதனால் கேட்க முடியாத ஒலிகளும் உள்ளன.

36. சூழலில் சிக்கல் தன்மை அதிகரிக்கும் ஒழுங்கு,
1) தனியன் → சாகியம் → குடித்தொகை → சூழற்தொகுதி → உயிர்கோளம்.
2) தனியன் → குடித்தொகை → சாகியம் → உயிர்கோளம் → சூழற்தொகுதி.
3) குடித்தொகை → தனியன் → சாகியம் → உயிர்கோளம் → சூழற்தொகுதி.
4) தனியன் → குடித்தொகை → சாகியம் → சூழற்தொகுதி → உயிர்கோளம்.

37. புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு. இவ்வுணவுச்சங்கிலியில் உள்ள இணைப்புக்களின் எண்ணிக்கை, முதலாம் படி நுகரி என்பன முறையே,
1) 3, வெட்டுக்கிளி 2) 3, புல்
3) 4, வெட்டுக்கிளி 4) 4, புல்

38. பார உலோகங்களால் அதிகம் பாதிக்கப்படுவது,
1) உற்பத்தியாக்கிகள் 2) முதல் நுகரிகள்
3) துணைநுகரிகள் 4) புடைநுகரிகள்

39. சூழல் மாசடைதலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்,
1) காடழிப்பு 2) கைத்தொழில்மயமாக்கல்.
3) எரிபொருள் தகனம். 4) மேற்கூறிய யாவும் சரியானது.


40. ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கத்திற்கு உதாரணம் பின்வருவனவற்றில் எது?
1) $Mg + 2HCl \rightarrow MgCl_2 + H_2$ 2) $CaCO_3 \rightarrow CaO + CO_2$
3) $N_2 + 3H_2 \rightarrow 2NH_3$ 4) $CuSO_4 + BaCl_2 \rightarrow BaSO_4 + CuCl_2$


## விஞ்ஞானம் - II

3 மணித்தியாலங்கள்

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. A. வெள்ளொளிக்கதிர் ஒன்று அரியத்தில் பட்டு முறிவடைந்து திருசியத்தை உருவாக்கும் தோற்றப்பாடு தரப்பட்டுள்ளது.
1) X, Y என்பவற்றிற்குப் பொருத்தமான நிறங்களைக் கூறுக.
2) X, Y என்பவற்றில் அதிக விலகலைக் காட்டும் நிறம் எது?
3) திருசியம் எனப்படுவது யாது?
4) திருசியத்தைக் காண்பிக்கும் இயற்கைத் தோற்றப்பாடு ஒன்றைத் தருக.
5) பின்வரும் வரிப்படங்களில் ஒளிக்கதிரின் பாதையைப் பூரணப்படுத்துக.



B. சூரிய ஒளி மட்டும் இல்லை எனில், அங்கிகள் யாவும் உணவின்றி இறக்க நேரிடும் என மாலன் கூறுகின்றான்.
1) இக்கூற்று உணர்த்தும் உயிர்ச்செயன்முறை யாது?
2) நீர் கூறிய உயிர்ச் செயன்முறைக்கு அவசியமான காரணிகள் எவை?
3) இவ் உயிர்ச்செயன்முறையில் பங்கேற்கும் சூரிய ஒளியின் இரு நிறங்களையும் கூறுக.

C. பின்வரும் சமன்பாடு கலச்சுவாசத்தை விளக்குவதாகும்.
$$C_6H_{12}O_6 + O_2 \rightarrow CO_2 + H_2O$$
1) இச்சமன்பாட்டைப் பூரணப்படுத்துக.
2) ஒரு மூல் $C_6H_{12}O_6$ இன் திணிவைக் காண்க.
3) ஒரு மூல் குளுக்கோசு சுவாசத்திற்குப் பயன்படும்போது பெறப்படும் $CO_2$ இன் திணிவைக் காண்க.


02. வெற்றுக்கண்ணினால் அவதானிக்க முடியாத அங்கிகள் நுண்ணங்கிகள் ஆகும்.
1) நுண்ணங்கிகளின் வகைகள் மூன்றினைத் தருக.
2) பக்டீரியாக்களின் சிறப்பியல்புகள் இரண்டைத் தருக.
3) அவரையினத் தாவரங்களின் வேர்முடிச்சுக்களில் வாழும் பக்டீரிய இனம் ஒன்றைக் குறிப்பிடுக. நீர் கூறும் பக்டீரியா இனம் மூலம் சீரமைக்கப்படும் இயற்கை வட்டத்தைக் கூறுக.
4) தனிக்கல ஒட்டுண்ணிக்கு 3 உதாரணங்கள் தருக.
5) காளான்கள் எவ்வகையான நுண்ணங்கிகள்?
6) வைரசுக்களுக்கு உயிர் இல்லை என்பதற்கான காரணங்கள் இரண்டு தருக.
7) பின்வரும் நோய்களை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளின் பெயர்களைத் தருக.
1. பன்றிக்காய்ச்சல். 2. டெங்கு.

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

03. A, B, C ஆகிய சோதனைக் குழாய்களில் சம கனவளவு கொதிநீர், ஐதான HCl, செறிந்த HCl என்பன எடுக்கப்பட்டுள்ளன. மூன்று சோதனைக் குழாய்களினுள்ளும் சம திணிவுடைய Mg துண்டுகள் இடப்பட்டன.




1) தாக்கவீதம் எனப்படுவது யாது?
2) தாக்கவீதத்தில் செல்வாக்குச செலுத்தும் எக் காரணியை நிரோதிக்க இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது?
3) நீர் கூறிய காரணி தவிர்ந்த தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் மேலும் இரு காரணிகளைத் தருக.
4) ஐதான HCl உடன் Mg காட்டும் தாக்கத்தை சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடு மூலம் காட்டுக.
5) குளிர்நீரில் தாக்கமடையக்கூடிய உலோகங்கள் இரண்டு தருக.
6) குழாய் B இல் Mg துண்டினை இட்டு சிறிது நேரத்தில் அக்குழாயினை வெப்பமேற்றினால் ஏற்படும் மாற்றங்கள் 2 தருக.

04. இலத்திரனியல் தொழில்நுட்பம் மனித செயற்பாடுகளை இலகுவாக்கினாலும், அதனால் பல சூழற் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.
1) இலத்திரனியல் சாதனங்கள் இரண்டு தருக.
2) தர்க்கப்படலைகளால் ஆக்கப்பட்ட வலைவேலைப்பாடு ஒன்று தரப்பட்டுள்ளது.





1. K, L, M ஆகிய படலைகளின் பெயர்களைத் தருக.
2. தரப்பட்டுள்ள உண்மை அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| A | B | C | D |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | |
| 1 | 1 | 0 | |
| 1 | 0 | 1 | |
| 1 | 0 | 0 | |
| 0 | 1 | 1 | |
| 0 | 1 | 0 | |
| 0 | 0 | 1 | |
| 0 | 0 | 0 | |

3. இப்படலைகளை அதிகளவில் கொண்ட இலத்திரனியல் துணைச்சாதனம் ஒன்றைத் தருக.

3) பின்வரும் குறியீடுகள் குறிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் துணைச்சாதனங்களின் பெயர்களைத் தருக.





## கட்டுரை வினாக்கள்

(உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றில் இருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்க)

### உயிரியல்

05. மனித உடலானது பல அங்கங்களையும் தொகுதிகளையும் கொண்டு சிக்கல் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்வங்கங்கள், தொகுதிகள் என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புற்று ஒத்திசைவுடன் இயங்குகின்றன. அங்கங்கள், தொகுதிகளை ஒருங்கிணைப்பதில் நரம்புத்தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி என்பன ஈடுபடுகின்றன.
1) நரம்புத்தொகுதியின் கட்டமைப்பு அலகு எது?
2) நரம்புத்தொகுதியின் இரு பெரும் பிரதான பிரிவுகளும் எவை?
3) மனித மூளையைப் பாதுகாக்கும் மூன்று மூளைச்சருமங்களும் எவை?
4) மூளைச்சரும நோய் எவ்வாறு ஏற்படுகிறது?
5) மூளையத்தின் தொழில்கள் இரண்டு தருக.
6) தெறிவில் எனப்படுவது யாது?
7) பரிவு நரம்புத்தொகுதி மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் 3 தருக.
8) இயக்கு நரம்புக்கலத்தில் மயலின் கவசம் காணப்படும். மயலின் கவசத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணி ஒன்றைக் கூறுக.
9) மாலனின் கையில் தீ சுட்டது. உடனடியாக அவன் கையை இழுத்தான். இங்கு தூண்டல், துலங்கல், வாங்கி, விளைவுகாட்டி என்பவற்றைக் கூறுக.
10) நரம்புகளின் ஊடாக நிகழும் கணத்தாக்கத்தின் வேகம் குறைவதற்கான காரணங்கள் 3 தருக.
11) மனித உடலின் pH பெறுமானம் மாறாது பேணவேண்டியதன் அவசியம் யாது?

06. a)




1) A இலிருந்து J வரையான பகுதிகளைப் பெயரிடுக.
2) குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் இதயத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தொழில் என்ன?
3) சுற்றோட்டத் தொகுதியின் மூலம் நிறைவேற்றப்படும்தொழில் என்ன?
4) சுற்றோட்டத் தொகுதியின் மூன்று பிரதான பகுதிகளும்எவை?
5) நாடி, நாளம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்று தருக.
6) மாரடைப்பு ஏற்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக. இந் நோயைத் தடுக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைத் தருக.
7) J, H என்பவற்றில் காணப்படும் குருதிகளுக்கிடையிலான வேறுபாடுகள் 2 தருக.


b) 1) குருதி மூலம் கடத்தப்படும் பதார்த்தங்கள் எவை?
2) குருதியின் பிரதான கூறுகளைத் தருக.
3) பிறபொருள் எதிரியாகத் தொழிற்படும் குருதியின் திண்மக் கலவகையைத் தருக. அதன் இரு பிரதான கலங்களையும் தருக.
4) குருதிப்புரதங்கள் இரண்டு தருக.
5) குருதிப்புற்றுநோய் ஏற்படும் விதத்தை விளக்குக.

### இரசாயனவியல்

07. a) புவிமேற்பரப்பில் பட்டுத்தெறித்து வெளியேறவேண்டிய ஒரு வகை சூரியக் கதிர்கள் வளிமண்டலத்தில் சில வாயுக்களின் கலவையில் உருவாக்கப்பட்ட மூடுபடையினால் மீண்டும் மீண்டும் புவியின் மேற்பரப்புக்கே அனுப்பப்படுகின்றன. இதனால் புவியில் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது.
1) மேற்படி தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
2) புவியை வெப்பமடையச்செய்யும் சூரியக்கதிரின் பெயரைத் தருக.
3) மேலே பந்தியில் கூறப்பட்ட மூடுபடையை உருவாக்கும் வாயுக்கள் 3 தருக.
4) மேற்படி நிகழ்வால் ஏற்படும் விளைவுகள் 2 தருக.

b) வல்கனைசுப்படுத்தப்பட்ட இறப்பரை எரிப்பது சூழலுக்குத் தீங்காகும்.
1) வல்கனைசுப்படுத்தல் எனப்படுவது யாது?
2) வல்கனைசுப்படுத்திய இறப்பரை எரிப்பதால் புவியில் ஏற்படும் நிலையைக் கூறுக.
3) மேற்படி நிலையை ஏற்படுத்தும் மனித செயற்பாடுகள் 2 தருக.
4) ஓசோன் வாயுவின் சூத்திரத்தைத் தருக.
5) ஓசோன்படை பாதிப்படைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் 2 தருக.


08. $CuCl_2$ கரைசலினை மின்பகுப்பதற்காக மேற்படி ஒழுங்கமைப்பு தயார்செய்யப்பட்டது. X, Y என்பன காபன் மின்வாய்கள் ஆகும்.




1) மின்குமிழ் பயன்படுத்தப்பட்டது ஏன்?
2) அனோட், கதோட் என்பவற்றைக் குறிப்பிடுக.
3) மின்பகுபொருளில் காணப்படும் அயன்களைத் தருக.
4) அனோட், கதோட் என்பவற்றில் நிகழும் தாக்கங்களுக்கான அயன் சமன்பாடுகளைத் தருக.
5) அனோட்டில் ஏற்படும் அவதானம் என்ன? இவ் அவதானத்தைவிரைவாகப் பெற மேற்படி ஒழுங்கமைப்பில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தலாம்?
6) அனோட்டுக்கு அண்மையில் ஈரமான நீல, சிவப்பு பாசிச்சாயத்தாள்களைப் பிடிக்கும்போது நிகழும் மாற்றம் என்ன?
7) மின்முலாமிடல் என்றால் என்ன?
8) மின்முலாமிடல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
9) அனோட்டு, கதோட்டு என்பவற்றால் கருதப்படுவது யாது?

### பௌதிகவியல்

09. a)





200g திணிவுடைய பந்து நியூட்டன் தராசில் கட்டித் தொங்கவிடப்பட்டு வளியில் நிறுக்கப்பட்டது. பின்னர் பந்து நீர் நிரப்பப்பட்ட பாத்திரம் A இல் வைத்து நிறுக்கப்பட்டது. பின்னர் பந்தை நீரினுள் இட்டபோது அது நீரின் அடிக்குச் சென்றது.
1) பந்தின் நிறை யாது?
2) பந்தை நீரினுள் இடும்போது ஏற்படும் அவதானங்கள் 2 தருக.
3) பந்தை நீரினுள் வைத்து நிறுக்கும்போது தராசின் வாசிப்புக்கு யாது நிகழும்?
4) மேற்படி 3 இல் கூறிய அவதானத்திற்கு என்ன காரணம்?
5) பந்தின் கனவளவு $50cm^3$ எனில், நீர் மேலே 4 இல் கூறிய காரணத்தின் பருமன் யாது?

b) அருகில் நீரமானி ஒன்றின் படம் தரப்பட்டுள்ளது.



1) இங்கு மிகக்குறைந்த பெறுமானம் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியைக் கூறுக. அதற்கான காரணம் என்ன?
2) சாதாரண நீரமானி மூலம் இரசத்தின் அடர்த்தியை அளவிட முடியாது. காரணம் என்ன?
3) இறப்பர்ப்பாலின் அடர்த்தியை அளக்கும் உபகரணம் யாது?
4) நீரில் இடும்போது நீரமானியின் வாசிப்பு எவ்வளவாக இருக்கும்?
5) நீரில் சிறிதளவு சீனியை இட்டு கரைக்கும்போது மேலே 4 இல் கூறிய விடைக்கு யாது நிகழும்?

10. A, B, C, D, E, F ஆகிய குண்டுகள் வெவ்வேறு நீளம்கொண்ட நூல்கள் மூலம் XY கயிற்றின் மீது வெவ்வேறு இடங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன.




1) குண்டு A ஐ சற்று இழுத்துவிட்டு சிறிது நேரத்தில் ஏற்படும் மாற்றம் என்ன? அதற்கான காரணத்தைத் தருக.
2) குண்டு D ஐத் தன்னிச்சையாக அசையவைக்க எந்தக் குண்டை இழுத்துவிடவேண்டும்?
3) அணியில் சென்ற இராணுவ வீரர்கள் பாலத்தின் மீது சாதாரண மாக நடந்துசென்றனர். அவர்கள் பாலத்தின் மீது அணிநடையைத் தவிர்த்ததன் காரணத்தை விஞ்ஞான ரீதியாக விளக்குக.
4) ஊசல்குண்டு C ஆனது நிமிடத்தில் 120 அலைவுகளை நிகழ்த்தியது. இவ்வூசலின் மீடிறன் என்ன? அலைவுகாலம் என்ன?
5) விமானம் ஒன்று வெடித்துச் சிதறுவதை அவதானித்த தரையில் ஒருவருக்கு விமானத்தின் வெடியோசை 2 செக்கன்களில் கேட்டது. விமானம் தரையில் இருந்து எவ்வளவு உயரத்தில் வெடித்திருக்கும்?
6) 512Hz மீடிறன் கொண்ட இசைக்கவை ஒலிக்கும்போது ஏற்படும் அலையின் அலைநீளம் யாது? இங்கு பிறப்பிக்கப்பட்ட அலையின் இயல்புகள் இரண்டு தருக.


(முற்றும்)

## கணிதம் I (பகுதி B) விடைகள் (22.10.2010)

01 1) 1-800 பங்குகள், 2-ரூபா 8,000 3-1,120, 4-9.3%
2) 1-ரூபா 1,230, 2- ரூபா 13,230

02. 1) சரிவகம். 2) 7m 3) 96m
4) $341m^2$ 5) ரூ. 17,050

03. 1) 1.
2-10
3-35
4-6
2) 1-5/8, 2-3/8




04. 1) 1,500 ரூபா. 2) 270 ரூபா.
3) 1-ரூபா 6,000, 2-ரூபா 480

05. 1) 1-சரியாக வரையப்பட்ட வலையுரு வரையம்.
2-சரியாக வரையப்பட்ட மீடிறன் பல்கோணி
2) 1-60 2-19, 3-75, 4-56 3) இடை = 39 (முற்றும்)

கணித பாட வினாத்தாள் நாளைய தினம் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் நடைபெறும் தேசிய விளையாட்டு நிகழ்விலிருந்து...

## வலைப்பந்தாட்ட வீராங்கனை போட்டியில் மயங்கி வீழ்ந்தார்

கண்டி, நவ. 01

வடமாகாண வலைப்பந்தாட்ட வீராங்கனை ஒருவர் மைதானத்தில் மயங்கி வீழ்ந்தமையால் கண்டி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வடமாகாண வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றுள்ள வீராங்கனையான சோ.கௌரி என்பவரே மைதானத்தில் மயங்கி வீழ்ந்தவராவார்.

நேற்று முன்தினம் கண்டி போகம்பரை மைதானத்தில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் இரண்டாவது சுற்றில் விளையாடிக் கொண்டிருக்கும் போது இடிபட்டதைத் தொடர்ந்தே இவர் மயக்க முற்றதாகக் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து மைதானத்தில் முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்ட நிலையிலும் அவர் சுய நினைவைப் பெறாமையால் உடனடியாக அவர் கண்டி வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ - 86)

## வலைப்பந்தாட்டக் காலிறுதியில் வடமாகாண அணி போராடித் தோல்வி

கண்டி,நவ.1

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் 36 வது தேசிய விளையாட்டுப் போட்டியில் இடம் பெற்ற வலைப்பந்தாட்டக் காலிறுதி ஆட்டத்தில் வடமாகாண அணி நீண்ட போராட்டத்தின் பின்னர் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் மத்திய மாகாண அணியும் வடமாகாண அணியும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்ற அணி சளைத்தது இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் வீராங்கனைகள் மோதிக் கொண்டார்கள்.

முதல் பாதி ஆட்ட இடைவேளையின் போது 31:25 புள்ளிகள் என்ற அடிப்படையில் மத்திய மாகாண அணி முன்னணியில் காணப்பட்டது.

எனினும் ஆட்டத்தின் போது வடமாகாண அணிகள் தடுப்பு வீராங்கனை எதிரணியினருடன் மோதுண்டு மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து வடமாகாண அணியின் வேகத்தில் ஏற்பட்ட மந்தநிலை எதிரணியினரின் வெற்றிக்கான வாய்ப்பை அதிகரித்தது.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் பாதி ஆட்டத்தில் மத்திய மாகாண அணி 29:21 புள்ளிகள் என்ற நிலையில் முன்னணியில் காணப்பட்ட போது ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதனால் ஆட்ட நிறைவில் மத்திய மாகாண அணி 60:46 புள்ளிகள் என்ற அடிப்படையில் வடமாகாண அணியை வெற்றி கொண்டு அரையிறுதி ஆட்டத்தில் விளையாட தகுதி பெற்றுள்ளது. (எ-86)

## இறுதிநாள் இன்று

கண்டி, நவ.1

கடந்த மூன்று நாள்களாகக் கண்டி போகம்பரை விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட 36 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் இன்றாகும்.

விளையாட்டு அமைச்சர் சீ.பி. ரத்நாயக்கா தலைமையில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் சமல்ராஜபக்ஷ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கான கேடயங்கள், வெற்றிக் கிண்ணங்கள் என்பன வழங்கப்படுவதுடன் கலாசார நிகழ்வுகளும் இறுதி நாளின் போதுஇடம்பெறவுள்ளன. (எ-86)

## காலிறுதியில் கரப்பந்தாட்ட பெண்கள் அணி தோல்வி

கண்டி, நவ.1

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட 36 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை வெல்பவர்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட வடமாகணக் கரப்பந்தாட்டப் பெண்கள் அணி இரண்டாம் சுற்றின் காலிறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்துள்ளது.

கண்டி போகம்பரை விளையாட்டு மைதானத்தில் நடை பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சப்பிரகமுவ மாகாண அணியும் வடமாகாண அணியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களில் சப்பிரகமுவ மாகாண அணி வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

முதல் சுற்றில் எந்த அணி வெற்றி பெறும் எனத் தெரியாதளவுக்கு இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்ட போதிலும் சப்பிரகமுவ மாகாண அணி 27:25 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை பெற்றிருந்தது.

தொடர்ந்து அடுத்த இரண்டு நேர் சுற்றுக்களையும் சப்பிரகமுவ மாகாண அணி 25:19, 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் வடமாகாண அணியை வீழ்த்தி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் உறுதி செய்தது. (எ-86)

## வடமாகாணத்துக்கு முதலாவது பதக்கம்

கண்டி,நவ.1

கண்டி போகம்பரையில் நடைபெற்று வரும் 36 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வடமாகாணத்துக்கு முதலாவது பதக்கம் கிடைக்கப் பெற்றுள்ளது.

கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற பெண்களுக்கான தட்டு ஏறிதல் நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் அனுசியா மூன்றாவது இடத்தினை தனதாக்கி வெண்கலப் பதக்கத்தினை பெற்றுள்ளார். இதன் மூலம் இம்முறை தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு வடமாகாணத்துக்கு முதலாவது பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார். (எ-23)

## இறுதிப் போட்டிக்குத் தகுதி

கண்டி, நவ.1

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் 36 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியின் இறுதிப் போட்டிக்கு வடமாகாண விளையாட்டு வீராங்கனைகள் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கண்டி போகம்பரை விளையாட்டு மைதானத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற 100 மீற்றர் தடைதாண்டல் தெரிவுப் போட்டியில் வடமாகாண வீராங்கனைகளான கீர்த்திகா, மயூரி ஆகியோரே வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (எ-86)



## சென்.ஜோண்ஸ் கல்லூரி அணிகள் கோட்டமட்டப் போட்டியில்

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள யாழ்.கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 14, 16, 19 பிரிவுகளைச் சேர்ந்த அணிகள் முதன்முறையாக பங்கு கொள்ளவுள்ளன. இதுவரை காலமும் இந்த அணிகள் சிநேக பூர்வ உதைபந்தாட்டாப்போட்டிகளிலேயே பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-23)

## வலிகாமம் வலய 18 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம்

வலி.வடக்கு,நவ.1

வலிகாமம் கல்வி வலயக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளை இந்த மாதத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நான்கு கோட்டங்களில் இருந்தும் தலா முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் இதில் மோதவுள்ளன. எனவே மொத்தமாக 12 அணிகள் வலயமட்ட சுற்றுப் போட்டியில் லீக்முறையில் மோதவுள்ளன. 12 அணிகளையும் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெறும் இப்போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

"ஏ" பிரிவு

வட்டுக்கோட்டை மத்திய கல் லூரி,இணுவில்மத்தியகல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

"பி" பிரிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி.

"சி" பிரிவு

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி.

"டி" பிரிவு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, இளவாலை புனிதஹென்றியரசர்கல்லூரி. (எ-86)

## சிநேக பூர்வப் போட்டி

தென்மராட்சி, நவ.01

நீர்கொழும்பு ஒரியன்ஸ் லியோ கழகத்தினருக்கும் சாவகச்சேரி லியோ கழகத்தினருக்குமான சினேக பூர்வ 'ரி - 20' கிரிக்கெட் போட்டி அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் போட்டியில் நீர்கொழும்பு ஒரியன்ஸ் லியோ கழக அணி வெற்றிபெற்றது. (எ- 207)

## இறுதிப்போட்டிக்குத் தகுதி

வலி.வடக்கு,நவ.1

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட்சுற்றுப் போட்டி இறுதிப்போட்டியில் விளையாட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

இறுதிப்போட்டி 40 ஓவராக அடுத்தவாரம் நடைபெறவுள்ளது. (த-86)

## கிரிக்கெட் கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,நவ.1

கிரிக்கெட் தொடர்பான புதிய விதி முறைகள் பற்றிய கருத்தமர்வு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் குழாமின் மத்தியஸ்தர் அசோக டீ சில்வா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வில் இலங்கைக் கிரிக்கெட் மத்தியஸ்தர் சபையால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.



பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி உள்ளூர் அணிகளுக்கு இடையே 19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது .இதில்முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்கோக் கோலா அணியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்துவீச்சில் கலக்கினார் ரண்டீவ்; இலங்கை அணி அசத்தல் வெற்றி!



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 'இருபது-20' போட்டியில், ரண்டீவ் பந்துவீச்சில் கலக்க, இலங்கை அணி அசத்தல் வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிவருகிறது.

அதன்படி, 'இருபது - 20' போட்டி ஒன்று நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி ஆட்டத்தை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியாக அமைந்தது.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய வோர்னர் 2 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து கிளார்க் (16), வோட்சன் (4), ஹஸி (7), வைட் (8) ஆகியோரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து சென்றனர்.

எனினும், பின்னர் இணைந்த ஹெடின் (35) - ஸ்மித் (34) ஜோடி சிறப்பாக விளையாடி அணியை ஓரளவு வலுவாக்கிச் சென்றது.

இவர்களைத் தொடர்ந்து வந்த ஹஸ்ரிங் 15 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஆஸ்திரேலிய அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களைச் சேர்த்தது.

மைக்கேய் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில், ரண்டீவ் 3 விக்கெட்டுகளையும், பெரேரா 2 விக்கெட்டுகளையும், பெர்னாண்டோ, மலிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், 134 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணிக்கு, மஹேல ஜெயவர்த்தன (24) - டில்ஷான் (41) ஜோடி சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. பின்னர் வந்த சந்திமால் (2) ஏமாற்றினாலும், அவரைத் தொடர்ந்து வந்த அணித்தலைவர் சங்கக்காரவும் (44), பெரேராவும் (17) கடைசிவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்று இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இறுதியில் இலங்கை அணி, 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 7 விக்கெட்டுகளால் அசத்தல் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக பந்துவீச்சில் கலக்கிய ரண்டீவ் தெரிவுசெய்யப்பட்டார்.



## பஞ்சாப் அணியும் உயர் நீதிமன்றில் முறையீடு செய்யும்

ஐ.பி.எல். போட்டியிலிருந்து தமது அணி நீக்கப்பட்டதை எதிர்த்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நிர்வாகமும் வழக்குத் தொடரவுள்ளது.

ஏற்கனவே ராஜஸ்தான் அணியின் நீக்கத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரி அந்த அணி நிர்வாகம் சார்பாக மும்பை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த மனு மீதான விசாரணை தீபாவளி விடுமுறைக்குப் பின்னர் நடைபெறும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஐ.பி.எல். தொடரிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட மற்றொரு அணியான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நிர்வாகமும், தமது நீக்கத்தை எதிர்த்து மும்பை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளது.

இது குறித்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ஹிந்தி நடிகை பிரித்தி ஜிந்தா கூறிகையில்,

''எங்கள் அணி நீக்கப்பட்டமையானது நியாயமற்ற நடவடிக்கையாகும். இதனை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம்'' - என்றார்.

### கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் சந்தர்ப்பங்களில்

## டுவிட்டரைப் பயன்படுத்த இந்திய வீரர்களுக்குத் தடை

இந்திய வீரர்கள் 'டுவிட்டர்' இணையதளத்தைப் பயன்படுத்துவதற்கு இந்திய கிரிக்கெட் சபை தடை விதிக்க முடிவுசெய்துள்ளது.

டுவிட்டர் இணையம் மூலம் கிரிக்கெட்டில் பல மோசமான முடிவுகள் ஏற்பட்டுள்ளன.

ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி வெளியிட்ட செய்தியால், அவரது பதவியே பறிபோனது. இங்கிலாந்தின் பீற்றர்சன் தேர்வாளர்கள் குறித்து கூறிய தகவலால் அபராதம் கட்டினார்.

தற்போது, இந்த வரிசையில் இந்தியாவின் யுவராஜ் மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் சர்ச்சையில் சிக்கியுள்ளனர்.

சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தம்மைத் தேர்வு செய்யாதமை குறித்து, தேர்வாளர்களைக் கண்டித்து 'டுவிட்டரில் செய்தி வெளியிட்டார் யுவராஜ். இதுதவிர, இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கோவா ஒருநாள் போட்டி குறித்து யுவராஜ் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,

''நேற்றிரவு மீண்டும் பெய்த மழையால், 'இருபது-20' போட்டி நடக்கும் அல்லது நடக்காமலும் போகலாம். எப்படியும் மதியம் ஒரு மணிக்கு முன்பாக போட்டி ஆரம்பமாக வாய்ப்பில்லை'' என்று வெளியிட்டார்.

இதேபோல, ரோஹித் சர்மா வெளியிட்ட செய்திதான் அதிக பரபரப்பை ஏற்படுத்தியதாம். அதாவது, ஆட்ட நடுவரான கிறிஸ் பிராட், மைதானத்தைச் சோதனை செய்தபின், முடிவை முறைப்படி அறிவிப்பதற்கு 10 நிமிடங்கள் முன்பாகவே ரோஹித் சர்மா வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில், ''கோவா போட்டி ரத்து செய்யப் பட்டது'' எனத் தெரிவித்தார்.

இந்தச் செய்திகள் இந்தியக் கிரிக்கெட் சபைக்குக் கடும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து கிரிக்கெட் சபை உறுப்பினர் ஒருவர் கூறுகையில், ''போட்டி நடக்கும் நாள்களில் 'டுவிட்டரை'ப் பயன்படுத்த வேண்டாம் என வீரர்களிடம் கேட்டுக் கொள்வோம். இது நியூஸிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து நடைமுறைக்கு வரும்'' - என்றார்.

## வெஸ்னியாக்கி - கிளியஸ்டர் இறுதிப் போட்டிக்குத் தகுதி

'டோகா' சர்வதேச மகளிர் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு டென்மார்க்கின் வெஸ்னியாக்கி, பெல்ஜியம் வீராங்கனையான கிளியஸ்டர்ஸ் ஆகியோர் தகுதி பெற்றனர்.

முன்னணி வீராங்கனைகள் எட்டுப் பேர் பங்கேற்கும் 'டோகா' டென்னிஸ் தொடரில், நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதியாட்டம் ஒன்றில்,

தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் டென்மார்க் வீராங்கனையான கரோலின் வெஸ்னியாக்கி, இரண்டாமிடத்தில் இருக்கும் ரஷ்ய வீராங்கனையான ஜூவொனரோவாவை 7-5, 6-0 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியாட்டத்தில், மூன்றாம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் கிம்கிளியஸ்டர்ஸ், ஐந்தாம் நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை 7-6, 6-1 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## பிராட்மேனுடனான சந்திப்பை எண்ணி சச்சின் மகிழ்ச்சி!



லண்டன்,நவ. 01

''டான்பிராட்மேனை அவரது 90ஆவது பிறந்த நாளில் நான் சந்தித்தது மிகவும் சிறப்பானதாகும். அதனால், நான் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.''

- இவ்வாறு சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர், இங்கிலாந்துப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உண்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் நான் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவரான குரோனேவின் பந்து வீச்சில்தான் அதிக முறை ஆட்டமிழந்திருக்கிறேன். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக விளையாடும்போது டொனால்டு, பொல்லாக் ஆகியோரை விட குரோனேவின் பந்து வீச்சில்தான் அதிக தடவைகள் ஆட்டமிழந்துள்ளேன். அவரது பந்து வீச்சை எதிர்கொள்ள முடியவில்லை என்பதல்ல. ஆனால், அவர் பந்து வீச்சில் எப்படியோ பிடியெடுப்பு மூலம் ஆட்டமிழந்துவிடுவேன்.

ஒருமுறை டர்பன் மைதானத்தில் நான் டொனால்டு, பொல்லாக் பந்துகளில் அடித்து ஆடிக் கொண்டிருந்தேன். அப்போது குரோனே பந்து வீசினார். அவரது முதல் பந்தைத் தடுத்து ஆடினேன். ஆனால், அது பிடியெடுப்பாக மாறியது. அவரது பந்துவீச்சை என்ன செய்வது என்பது [illegible] இருந்தது.

வேகப்பந்து வீச்சாளர்களில் நான் பார்த்த வரையில் மெக்ராத் சிறந்தவர். சுழற்பந்து வீச்சில் வோர்ண் தனிச்சிறப்பு வாய்ந்தவர்.

டான்பிராட்மேனை அவரது 90ஆவது பிறந்த நாளில் நான் சந்தித்தது மிகவும் சிறப்பானதாகும். அப்போது நாம் இருவரும் பேசுகையில்,

தற்போது நீங்கள் விளையாடினால் உங்களது ஓட்ட சராசரி எவ்வளவு இருக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர், ஏறக்குறைய சராசரி 70 ஆக இருக்கும் என்றார். உங்களது ஓட்ட சராசரி முன்பு 99 அல்லவா, தற்போது 70 என்கிறீர்களே ஏன் என்று நான் கேட்டேன். அதற்குப் பதிலளித்த பிராட்மேன், தற்போது எனக்கு 90 வயது. இந்த வயதில் 70 ஓட்ட சராசரி என்பது மோசமில்லையே என்றார்.

ஒரு துடுப்பாட்ட வீரராக அடுத்த நிலையை எட்டுவது எப்படி என்பது குறித்து யோசித்து வருகிறேன். எப்படி மேலும் போட்டித் திறனை வளர்த்து கொள்வது, தொடர்ந்து சீரான திறனை வெளிப்படுத்துவது, இன்னும் சிறப்பாக விளையாடுவது போன்ற விடயங்கள் குறித்து சிந்தித்து வருகிறேன்.

ஹைடன், லாங்கர், கில்கிறிஸ்ட், மெக்ராத், வோர்ண் ஆகியோரின் ஓய்வு, ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் இழப்பாகும். அந்த அணியில் தற்போதும் உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் இருக்கிறார்கள்தான். இருப்பினும், துடுப்பாட்டத்தில் ரிக்கி பொண்டிங்கையே நம்பியிருக்கிறார்கள். ரிக்கி பொண்டிங்கின் விக்கெட்டை வீழ்த்தினால் அந்த அணியின் துடுப்பாட்டத்தில் வெற்றிடத்தை உருவாக்கிவிட முடியும்.

ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி வெற்றி பெற நல்ல வாய்ப்பு இருக்கிறது என நான் கருதுகிறேன். இந்தப் போட்டியில் மோர்கான், ஸ்வான் ஆகியோர் முக்கிய பங்கு வகிப்பார்கள். இதுதவிர ஸ்டிராஸ், கொலிங்வுட், பீற்றர்சன் போன்ற சிறந்த வீரர்களும் இங்கிலாந்து அணியில் உள்ளனர்.

ஆசியக் கண்டத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டி மிகப்பெரியதாக அமையும். அனைவரும் இந்தப் போட்டியை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

- இவ்வாறு டெண்டுல்கர் கூறியுள்ளார். (சி)

### சச்சினின் துடுப்பு மட்டை 100 லட்சம் ரூபா!

பிரபல விளையாட்டு வீரர்கள் பயன்படுத்திய பொருள்களை ஏலம் விடும் நிகழ்ச்சியை, தொண்டு நிறுவனம் ஒன்று நலநிதிக்காக மும்பையில் நடத்தியது.

இதில், கடந்த ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சச்சின் 163 ஓட்டங்களைக் குவிக்க உதவிய அவரது துடுப்பு மட்டை, அதிக பட்சமாக சுமார் 100 லட்ச ரூபாய்க்கு ஏலம் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவப் படைக்கு ஆள் சேர்ப்பதை இனி மட்டுப்படுத்த தளபதி நடவடிக்கை

கொழும்பு, நவ. 1

சிறிலங்கா இராணுவம் புதிய படையினரை ஆள் சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தகவல் வெளியிடுகையில்,

தற்போது இராணுவத்தில் 2 இலட்சத்து 25 ஆயிரம் படையினர் உள்ளனர்.

இது சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புக்கு போதுமானது. இதில் 150,000 படையினர் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் சேர்க்கப்பட்டவர்களாவர்.

இராணுவம் இனிமேல் ஓய்வுபெறும் மற்றும் படையில் இருந்து நீக்கப்படும் அதிகாரிகளின் வெற்றிடங்களை நிரப்பவே ஆள்சேர்ப்பு செய்யும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐ.நா அமைதிப்படைக்கு மேலதிக படையினரை அனுப்பும் வாய்ப்புக்காக சிறிலங்கா இராணுவம் காத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 20சத வீத மான நிதி பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

காவல்துறையினர் உள்ளிட்ட சுமார் 5 இலட்சம் பாதுகாப்புப் படையினரின் சம்பளத்துக் காகவே அரசாங்கம் அதிகளவு நிதியை செலவிடும் நிலையில் உள்ளது.

இராணுவ பலத்தை அரசாங்கம் அதிகரித்து வருவதாக வெளியான குற்றச்சாட்டுகளை சிறிலங்கா இராணுவ உயர்அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இராணுவத்தில் ஆள்சேர்ப்பு மட்டுப் படுத்தப்பட்டு தற்போதுள்ள படையினரை அபிவிருத்தி பணிகளில் கண்டிப்பாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இயல்பு நிலை மீளத் திரும்பியிருப்பதால், பொது இடங்களில் இராணுவத்தின் செயற்பாடுகள் குறைக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் உத்தரவிட்டுள்ளார்.

சோதனைச் சாவடிகளைக் கூட அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இராணுவத்தில் 1980களின் நடுப்பகுதி மற்றும் 1990களின் ஆரம்பத்தில் அதிகளவிலான படையினர் இணைத்துக் கொள்ளப் பட்டனர்.

சிலவேளைகளில் ஒரே தடவையில் 20,000 படையினர் சேர்க்கப்பட்டனர். இவர்கள் தற்போது ஓய்வுபெறும் வயதை அடைந்து கொண்டிருக்கின்றனர்.

இராணுவத்தில் 22வருட சேவையை நிறைவு செய்து கொண்டவர்கள் ஓய்வு பெறுவது வழக்கமாகும்.

இவர்கள் ஓய்வுபெறும் போது பெரும் வெற்றிடம் ஏற்படும். ஆனால் அந்தப் பாரிய வெற்றிடத்தை ஒரேயடியாக நிரப்பப் போவதில்லை.

ஏனென்றால் இராணுவத்தின் தற்போதைய ஆளணி எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்றும் அந்த உயரதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஓ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் செல்லையா நவநீதநாதன்

மலர்வு 12★12★1945

உதிர்வு 02★10★2010

அன்பாலும் பண்பாலும் அனைவரையும்
கவர்ந்திட்ட பண்பு நிறைந்த தலைவா!
பாசத்தின் ஊற்றே!
துன்பத்தை உனக்குள்ளே புதைத்து வைத்து
இன்பத்தை எமக்குள்ளே விதைத்து வைத்தாய்
எல்லோரும் இன்புற்று இருக்கச் சொல்லி
அழியாது நெஞ்சத்துள் அமரனானாய்!
இகத்தினிலே நாம் வாழும் காலமெல்லாம்
உன் முகத்தொளியே முழு நிலவாய் இருக்குமையா

ஓடக்கரை வீதி, சங்கானை.

உம் நினைவால் வாடும்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### வைத்திலிங்கம் சின்னம்மா

வடக்கு மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் அம்பனை வசிப்பிடமாகவும் தற்போது கிராம்புவில் மேற்கு, கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சின்னம்மா நேற்று (31.10.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், கனகசிங்கம், நவரத்தினம், அன்னமலர், செல்லக்கண்டு, இந்துமதி (பரிசாரகர், அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயும் அன்னபாக்கியம், கற்பகதேவி, ஆறுமுகம், காலஞ்சென்ற தவகுலசிங்கம் மற்றும் விஜயதாஸ் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராம்புவில் மேற்கு, கல்வயல், சாவகச்சேரி. (105419) தகவல் : குடும்பத்தினர்.

### விஸ்வநாத ஐயர் சுப்பிரமணிய ஐயர்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த விஸ்வநாத ஐயர் சுப்பிரமணிய ஐயர் நேற்றுமுன்தினம் (30.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும் பிறேமாவதி, பாலசவுந்தரி, சந்திரம்பாள், சிறிகரசர்மா (ஜேர்மனி), ஜீவஜோதி, ஜெகதாம்பாள் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2010) திங்கட்கிழமை அவரது மகளின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

03 ஆம் கட்டை, வாசிகசாலை வீதி, கல்வியங்காடு. (சி:572297) தகவல்: மக்கள், மருமக்கள்.

# இலங்கையிலும் 'ஈபெல்' கோபுரம்

கொழும்பு, நவ. 1

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ள 'ஈபெல்' கோபுரம் போன்ற ஒரு கோபுரத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 350 மீற்றர் உயரமான தொலைக்காட்சி கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இது ஈபெல் கோபுரத்தைப் போன்று சுற் றுப்புறத்தில் மைதானம், பூங்காவைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் எந்த இடத்தில் இதை அமைப்பது என்ற தீர்மானம் எடுக்கப்படவோ நிலம் ஒதுக்கீடு செய்யப்படவோ இல்லை.

பெரும்பாலும் இது மேல் மாகாணத்திலேயே அமைக்கப்படும்.

இந்தக் கோபுரத்தை அனைத்து தொலைக்காட்சிகளும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் பின்னர் ஏனைய தொலைக்காட்சிக் கோபுரங்களை அகற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. (ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி சுகிரா பாலராஜன்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2010இல் 164 புள்ளிகளைப் பெற்ற யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி சுகிரா பாலராஜனை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில். சி.கைலைபங்கிரிவாசன் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி ரங்கநாதன் தம்பதியரின் புதல்வி பிரியங்கா (யா/யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை) 2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகள் பெற்றமையையிட்டு அவரைப்பாராட்டுவதோடு அவரை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மம்மா, பெரியப்பாகுடும்பம், மாமாமார் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி பாலசந்திரன் தம்பதியரின் புதல்வன் பா.யதீசன் (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) 2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவரை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி:572293)

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அம்மம்மா, அண்ணாமார், அக்காமார், மாமன்மார், அத்தைமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்.

27, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## சேவை நலன் பாராட்டு

திரு. கணபதி காசிநாதன்



(களனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, காங்கேசன்துறை)

28 வருடங்கள் இலங்கை வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தராக சேவை புரிந்த எமது அன்புக்குரிய நண்பர் அவர்கள் இன்று தனது அறுபதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் அவரை, எல்லாம்வல்ல கற்பக விநாயகன் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: Dr. V.கணேசவேல், செ.தங்கராஜா, செ.தவேந்திரநாதன் (கணபதி கஸஞ்சியர்)

உரும்பிராய். (105412)

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



இலங்கை வங்கி காங்கேசன் துறைக்கிளையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடைமையாற்றி இன்று (01.11.2010) திங்கட்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும்

திரு. க.காசிநாதன்

அவர்களைப் பிறந்தநாள் தினத்தில் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள், இலங்கை வங்கி, காங்கேசன்துறைக்கிளை. (105413)

# வீடு வாடகைக்குண்டு



187, ஆடியபாதம் வீதியில் 5பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. NGO விரும்பத்தக்கது.

தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம், இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தன் கொட்ட முகத்தை..** (13ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற தலைப்பில், நெருக்கடிகளுக்கான அனைத்துலகக் குழு வெளியிட்ட அறிக்கை யில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குறித்த இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்த சிறிலங்கா அரசு இதுபோன்ற விசாரணைகள் தேசிய ரீதியிலான கட்டமைப்புக்களால் மேற்கொள்ளவேண்டுமே அன்றி இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்குச் அனைத்துலக அளவிலான கட்டமைப்புக்கள் எதுவும் தேவையற்றது எனக் கூறி வருகிறது.

சிறிலங்கா அமைத்திருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்னால் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் தங்களது சாட்சியங் களை வழங்கலாம் என அண்மையில் லண்டன் சென்றிருந்த சிறிலங்காவினது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார். அங்குள்ள மூலோபாயக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், ''சுதந்திரமான, பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச தரத்திற்கு அமைய சிறிலங்காவின் ஆணைக்குழு இல்லை'' எனக்கூறி மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் நெருக்கடிகளுக்கான அனைத்துலகக் குழு தெரிவித்துவிட்டன. அவை இலங்கை அர சுக்குக் கூட்டாக எழுதிய கடிதத்தில் சிறிலங்காவினது அழைப்பை நிராகரித்திருந்தன.

இதுவிடயம் தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைத்திருக்கும் வல்லுநர்கள் குழு கடந்த வாரம் பொதுமக்களிட மிருந்து சாட்சியங்களையும் கருத்துக்களையும் கோரியிருக்கிறது.

ஆனால், அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழு தன்னிடமிருக்கும் சாட்சியங்களை ஐ.நா. வல்லுநர்கள் குழுவிடம் சமர்ப்பக்கும் வாய்ப்புக்கள் இம்முறை அரிதாகவே இருக்கின்றன என அதன் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

''போரின் இறுதி நாட்களில் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரச படைகளும் புரிந்த போர்க்குற்றங்கள் எனக் கருதப்படும் சம்பவங்களின் ஆதாரங்களாக நாங்கள் அடுக்கியிருக்கும் 'சிறிலங்காவில் போர்க் குற்றம்' என்ற தலைப்பிலமைந்த எங்களது ஆய்வறிக்கை மற்றும் சிறிலங்கா தொடர்பாக நாங்கள் ஏற்கனவே வெளியிட்ட அறிக்கைகளை நாங்கள் ஐ.நா. வல்லுநர்கள் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்'' என அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழுவின் சிறிலங்கா தொடர்பான திட்டப் பொறுப்பாளர் அலன் கீனன் கூறுகிறார்.

அதேநேரம் போரின் இறுதி நாள்களில் இலங்கை அரச படையினர் புரிந்த இனக்கொலையின் சாட்சியங்கள் எனத் தெரிவித்து கடந்த வாரம் சில ஒளிப்படங்களை வெளியாகின. புலம்பெயர் வாழ் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தம் உலகத் தமிழர் பேரவை குறிப்பட்ட படங்களை வெளியிட்டிருந்தது.

இலங்கை அரசின் மீது சேறுபூசும் புலி ஆதரவுச் சத்திகளின் இன்னொரு முனைப்பே இது எனக்கூறி சிறிலங்கா அரசு வழமை போலவே இந்தப் ஒளிப்படங்களையும் நிராகரித்திருக்கிறது.

எது எவ்வாறிருப்பனும் இலங்கை அரச படையினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் எவையும், முப்படையினருக்குமான தனித்துவமான தொலைக்காட்சி நிகழ்சியாகிய 'ரணவிரு றியல் ஸ்ரார்' என்ற நிகழ்வினை பெரிதாகப் பாதித்திருப்பதாகத் தெரியவில்லை.

குறித்த இந்த நிகழ்சி தொடர்பான கட்டுரைகள் உள்ளூர் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளில் தொடர்ந்தும் வெளிவருகின்றன. அதேநேரம் நிகழ்வினது விளம்பரக் காட்சிகள் தொலைக்காட்சிகளில் அடிக்கடி காண்பிக்கப்படுகின்றன. ஆயுதப் படையினருக்கெனத் தனித்துவமாக நடத்தப்படும் ஒரேயோரு நிகழ்வு என விளம்பரப்படுத்தப்படுகிறது.

காட்டின் நடுவேயுள்ள அரங்காக உலங்குவானூர்தி ஒன்று மாற்றப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்வில் வெற்றியீட்டும் படைவீரர் 89,000 டொலர் பெறுமதியான பரிசினைத் தனதாக்குவார்.

*நன்றி: புதினப்பலகை*

## அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 1

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுனிசெவ் வேலைத் திட்டம் தொடர்பான செயற்றிறன் அரங்க நிகழ்வு ஒன்றை நாளையும் மறுதினமும் நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள யூரோவில் நிறுவன கேட் போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

இதில் யுனிசெவ் அமைப்பு ஊன முற்றோர் தொடர்பாக செய்கின்ற வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு பிரதானமாக நடைபெறவுள்ளது.

(ஒ-121)



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீட 18ஆம் அணி மாணவர்களினால் தயாரிக்கப்படும் மழலைகள்மொழி என்னும் குறுந்திரைப்படத்திற்கான பாடல்களின் இறுவட்டு வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் குறும் திரைப்படத்தின் இயக்குநர் குபேரனிடம் இருந்து விவசாய பீடாதிபதி திருமதி சி.சிவசந்திரன் இறுவட்டின் முதல் பிரதியை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். *(படம்:நேசன்)*


## வீட்டுப் பணிப் பெண் தேவை

கொக்குவில் பகுதியில் அமைந்த வீடு ஒன்றிற்கு, தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய சகல வேலைகளும் தெரிந்த வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்பு: 0776062350 (105414)



கண்ணாடிக் குவளைகள் குறைந்த செலவில்

டயிடஸ் ஸ்டோஸ்

புறக்கோட்டை லிபட்டி பிளாசா

2439422

## தவறிவிட்டது

குருநகரைச் சேர்ந்த பிலிப்புராசா றெக்ஸ் என்பவருடைய தே. அ.அட்டை இல. (792613625V), சாரதி அனுமதி அட்டை ஆகியன 28.10.2010 வியாழக்கிழமை நாவாந்துறையில் இருந்து குருநகருக்கு வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் குருநகர் யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையிடம் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

Blank DVD, Game DVD, Films DVD'S

என்பன மொத்தமாக உடனடி விற்பனைக்கு உண்டு

தொடர்பு.: 0214907016 (105400)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், U.K. பிரஜாவுரிமையுடைய 35 வயதுடைய Doctor (விவாகரத்து பெற்ற) மணமகனுக்கு ஆங்கில அறிவும், அந்தஸ்தும், அழகிய, நற்பண்புகள் கொண்ட மணமகளை பெற்றோர் தேடுகின்றார்கள்.

தொடர்பு: 0112 580405 (105411)

## வாடகைக்கு வீடு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிக்கு யாழ். நகரப் பகுதியில் / அதனை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே.இல.: 0773608826 (105410)

## தவறிவிட்டது

கொடிகாமத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் Sam Sung touch Model கையடக்கதொலைபேசி 29.10.2010 (வெள்ளிக்கிழமை) காலை 8 மணியளவில் தனியார் சிற்றூர்தி வாகனத்தில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களிற்கு அறியத்தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.: 0773913063, 0771614742. (105409)

## பராமரிப்பாளர் தேவை

சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு பராமரிப்பாளர் ஒருவர் தேவை.

செயலாளர்,
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்

என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

தொ.பே: 0775355437. (இ - 572294)

## வேலையாள்கள் தேவை

பிரதான வீதி, நெல்லியடியில் இயங்க இருக்கும் தனியார் பார்மஸி நிறுவனத்திற்கு அனுபவமுள்ள பார்மஸிஸ்ற் (அனுமதிப் பத்திரம் உள்ளவர்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும் (ஆண், பெண் இருபாலாரும்)

தொ.பே.: 0212264582, 0778435995. (10531...)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 13 ★ 06 ★ 1931 | 03 ★ 10 ★ 2010 |



### அமரர் கந்தையா குலசிங்கம்

எங்கள் இல்லத்தலைவர் அமரர் கந்தையா குலசிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட, நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் தந்த மற்றும் பல வழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

நாளை (02.11.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

15, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

Dr. கு. சுரேஷ்குமாரும், குடும்பத்தினரும்
(105415)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 ✦ 04 ✦ 1936 | 11 ✦ 11 ✦ 2009 |



திதி தசமி - 01.11.2010

### திருமதி பொன்மலர் தருமலிங்கம்

அன்பாக எம்மை அரவணைத்த அம்மாவே
உள்ளத்தால் உயர்ந்தவளாக,
வாழ்விற்கு வழிகாட்டியாக
திகழ்ந்த எம் தாயே
உங்கள் ஆத்மா சாந்திபெற
வேண்டுகிறோம் இறைவனிடம்.

ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (105417) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இளையகுட்டி சிவகுரு

*(இளைப்பாறிய உத்தியோகத்தர், தபால் தரம் பிரிக்கும் பிரிவு)*

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சிவகுரு நேற்று (31.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல் :
சி. பத்மநாதன் (மைத்துனர்)



### பொன்னுத்துரை பாலசுப்ரமணியம் (பாலா)

*(லக்ஸ்மி நகைக்கடை, லக்ஸ்மி புத்தகக் கடை)*

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், 16/11, சீனியர்லேன், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசுப்ரமணியம் நேற்று (31.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - முத்தாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரதீபன் (ஜேர்மனி), பிரவீணா, பிரசாந் (எவரெஸ்ற் ஸ்ரூடியோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி (கனடா), விமலாதேவி, தங்கவேல் (கனடா), தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானேஸ்வரி (கொழும்பு), சிவதாசன் (கனடா), காலஞ்சென்ற கணேசநாதன், சத்தியபாமா (கொழும்பு), சிவநேசன் (ஜேர்மனி), சிவகுமாரன் (ஜேர்மனி), சிவபாலன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/11, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778092762, 0775099596,
021 490 7277

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களுக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு

## பிரேரணைக்கு அனைவரும் முழு ஆதரவு

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். மாநகரப்பகுதியை அபிவிருத்தி செய்ய வருடாந்த நிதியிலிருந்து ஒவ்வொரு உறுப் பினருக்கும் தலா 5 லட்சம் ரூபா ஒதுக்கப்படுவேண்டும்.

இவ்வாறு சபையில் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார் யாழ். மாநகர சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிப்பதாவது:-

இலங்கையிலுள்ள ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தமது பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியாக வருடமொன்றுக்கு தலா 50 இலட்சம் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகிறது.

ஆனால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கோ, மாநகரசபை உறுப்பினர்களுக்கோ இதுபோன்ற சட்டப்படியான நிதி ஒதுக்கீட்டுமுறை இல்லை.

எனவே மாநகரசபை உறுப்பினர்களாகிய நாம் மாகாண உள்ளூராட்சி மன்ற சட்டதிட்டங்களுக்கு அப்பால் முதல்வரோடு இணைந்து எமக்குள்ளே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டு முறையை ஏற்படுத்தலாம்.

இதன்படி மாநகரத்தில் முதல் பிரஜையாவும், உறுப்பினர்களின் தலைவராகவும் முதல்வர் விளங்குவதால் அவருக்கு 10 இலட்சம் ரூபாவும் ஏனைய 22 பேருக்கும் வருடமொன்றுக்கு தலா 5 இலட்சம் எனப் பங்கிட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளலாம்.

இதன் மூலம் மாநகரசபை உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் வேலைத்திட்டங்களை உள்ளூராட்சி உப விதிகளுக்கு கட்டுப்பட்டதாக உரிய முன்மொழிவுகளை உரிய முறையில் முன்கூட்டியே நிதிக்குழு, மராமத்துக்குழு, சுகாதாரக்குழு போன்றவற்றுக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று மாதாந்தக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பே செயல்வடிவம் பெறவேண்டும் - என்றார்.

இப்பிரேரணையை முதல்வரும் உறுப்பினர்களும் வரவேற்று ஏகமனதாக ஏற்றுக்கொள்ள இவ்வாய்மூல முன்மொழிவை மாநகரசபை உறுப்பினரான சு.ம.மங்களநேசன் ஆமோதித்தார்.

இதன் பிரகாரம் இந்த ஆண்டிலிருந்தே உறுப்பினர்கள் அணை வரும் தலா 5 லட்சத்துக்குள் உள்ள தங் கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து வேலைத் திட்டங்களைச் செய்து வரு கின்றனர்.

(ஒ-16)

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற அமர்வின் போது சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு - செலவுத்திட்ட விவாதத்துக்கு முன்னர் திருத்தச்சட்டமூலம் மீதான விவாதத்தை நடத்தி நிறைவேற்ற அரசு தீர்மானித் திருந்த போதும் சிறுபான்மைக் கட்சிகளு டன் பேச்சு நடத்தி ஒரு முடிவுக்கு வர அரசு தீர்மானித்தது.

எனவே உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தை ஜனவரி மாதம் நடத்த அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் முடிவடைகின்றது. எனவே மே மாதமளவில் இத் தேர்தல்களை நடத்த அரசு தீர்மானித்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஐக்கிய நாடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் அதற்கான வழிமுறைகளையும் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தெளிவாகவும் நிதானமாகவும் தமது சாட்சியங்களை வழங்கவேண்டும் என்று இந்த அமைப்புகள் கோரியுள்ளன. புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள தமிழீழ மக்கள் பேரவைகள், ஏனைய தமிழ் அமைப்புகளுடனும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்றும் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்று அவர்களின் உதவியுடன் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களினது உதவியுடனும் செயற்படலாம் என்றும் இந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஆஸ்திரேலியா, பிரிட்டன், டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மன், நெதர்லாந்து, இத்தாலி, நோர்வே, சுவிஸ் ஆகிய நாடுகளில் இயங்கிவரும் தமிழ் அமைப்புகளே கூட்டாக மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இறுதி யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட தமது உறவுகளை சாட்சியமளிக்கும்படி புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஊக்குவிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# ரூபா 10 லட்சத்துக்கும் அதிகம் வருமானவரி செலுத்தும் 28 பேர் இரத்தினபுரி மாவட்டத்தில்!

## இவர்களுக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதி

இரத்தினபுரி மாவட்டத்தில் 28 பேர் 10 இலட்சத்திற்கும் அதிகமாக வருமானவரி செலுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்தம் பத்துலட்சம் ரூபாவுக்கு அதிகமான வருமானவரி செலுத்தும் இந்த 28 வர்த்தகர்களுக்குத் தங்கம் மற்றும் வெள்ளி அட்டைகள் வழங்கும் வைபவம் இரத்தின புரி லெல்லோபிட்டிய கில்வர்ரே ஹோட்ட லில் நேற்று முன்தினம் முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு பிரதம அதிதிகளாக தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் கே.எம். எஸ்.கந்தேகெதர மற்றும் இரத்தினபுரி மாவட்ட இறைவரி பிரதி ஆணையாளர் எம்.ஜே.குணசிறி ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

இவர்களுள் பெரும்பாலானவர்கள் இரத்தினபுரி, குருவிட்ட, பெல்மதுளை, காவத்தை, எம்பிலிப்பிட்டிய மற்றும் ரக்வான பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தேயிலை ஏற்றுமதியா ளர்கள், இரத்தினக்கல் வியாபாரிகள் மற்றும் விசேட மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் இந்த அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றிய இறைவரி பிரதி ஆணையாளர் குணசிறி தெரிவித்தவை வருமாறு:-

வருமான வரி செலுத்துவதில் மக்கள் மத்தியில் அதீத பயம் நிலவுகின்றது. சரியான முறையில் வருமானவரி செலுத்தப்படாவிட்டால் அரச நிர்வாகம் தடைப்படும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி யில் இறைவரி வருமானம் பெரும் பங்கைவகிக்கின்றது. தங்க அட்டை கள் பெற்றவர்களில் பெரும்பாலான வர்த்தகர்களின் கீழ் 300 தொடக்கம் 400 பேர் பணிபுரிகின்ற னர். வேலையற்ற திண்டாட் டத்தை பெருமளவில் இவர்கள் நீக்கும் அதேவேளையில் தேசிய வருமானத்திற்கும் உச்சப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

எனவே இவர்களது சேவையைப் பராட்டி இந்த விசேட தங்க வெள்ளி அட்டைகள் 2 1/2 இலட்சத்துக்கும் அதிகமான வரியை வருடாந்தம் செலுத்துபவர்களுக்கு தீர்வையற்ற வாகனத்தை இறக்குமதி செய்ய வாய்ப்பளிக்கின்றது. அதற்கு மேற்பட்ட வரியைச் செலுத்துபவர்களுக்கு ஏனைய வரப்பிரசாதங்களும் வழங்கப்படவுள்ளன. - என்றார்.

## சீனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்த முறைமையை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக நட்புறவு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் அபிவிருத்திப் பணிகளுக்கு இதுவரை வழங்கப்பட்ட பங்களிப்பைப் போன்று எதிர்காலத்திலும் தொடர்ந்து உதவிகள் வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சீனப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இதன்படி, இலங்கையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் நிதியுதவி வழங்கப்படும் என்று சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேபாள பிரதமர் ராம் பாரான் யாதேவை ஜனாதிபதி மஹிந்த சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இரு நாட்டு சமய உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளல் மற்றும் கல்வித் துறையை மேம்படுத்தல் போன்றன குறித்து இச்சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (சி)

## தமிழ் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளின் அரங்கின் ஒன்பதாவது கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தனக்கு அழைப்பு விடுக்கும் பட்சத்தில் அதுதொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் கூறினார்.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாடாளுமன்றத்தில் நான் தெரிவித்தேன். இதுபோன்ற சிறைத்தண்டனை மூலம் அவரது நாடாளுமன்ற எம்.பி பதவியைப் பறிக்க முடியாதெனவும் கூறியிருந்தேன்.

பிரிட்டனிலுள்ள பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தில் பொதுநலவாய அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக நாடுகளின் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருள்ளனர். சுமார் ஐம்பது நாடுகளின் பிரதிநிதித்துவம் அதிலுள்ளது.

எனது பிரிட்டிஷ் விஜயத்தின்போது நான் அந்த சங்கத்துக்கும் சென்றிருந்தேன். இராணுவ நீதிமன்றமொன்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு சிறைத் தண்டனை வழங்க முடியுமா என விசாரித்தேன். அவ்வாறான அதிகாரம் இல்லையென்று அவர்கள் உடனடியாகப் பதிலளித்தனர். அதேபோல் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற நபரொருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அவரை இராணுவ நீதிமன்றத்துக்கு முன்னால் ஆஜர் செய்ய முடியுமா என்றும் கேட்டேன். பொதுநலவாய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் எந்தவொரு நாடாளுமன்றத்திலும் இது போன்றதொரு நிலைமை ஏற்பட்டதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற ஒருவரை இராணுவச் சட்டத்தின் கீழ் தண்டனைக்கு உட்படுத்த முடியாதென்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர். இருந்தும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒருவர் சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டால் சிவில் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இராணுவ நீதிமன்றத்தின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது எவ்வாறென பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் வியப்புத் தெரிவிக்கின்றன. பிரிட்டனில் எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் பொதுக் கொள்கையொன்றின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்கின்றன. அதன்படி அந்த இரு தரப்பினரும் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.


### மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



செல்வி பரமேஸ்வரி குமாரவேல்
(பரா ரீச்சர்)

எமது கல்லூரியில் 23 வருடங்களாக ஆசிரியராக, பகுதித் தலைவராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் செல்வி பரமேஸ்வரி குமாரவேல் அவர்கள் ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம். (O.L.R.)

### வீட்டுப் பணிப் பெண் தேவை

பகல் நேரத்தில் வேலை செய்யக் கூடிய பெண் தேவை.
தொடர்புக்கு: 0718474239, 0750398036.

### வருமான வரிக் கணக்குகள்

உங்களுடைய வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் சம்பந்தமாக வருமானவரி, மொத்த விற்பனை வரி (Turnover Tax), வற் (VAT), வரி ESC வரி என்பவற்றின் கணக்குகள் அனுபவமுள்ள கணக்காளரினால் தயாரித்தும், வரித்திரட்டுக்கள் பூரணப்படுத்திக் கொடுப்பதுடன் வரிகள் தொடர்பான ஆலோசனையும் வழங்கப்படும்.
தொடர்பு : 0774431701, 0776150569. (105333)

யாழ். நகர் மத்தியில், அமைதியான சூழலில்
A/L-2012 வர்த்தகப்பிரிவு பிரிவு - II

கணக்கீடு : A.P.பகீரதன் Tue, Thur : 4-5 pm.
பொருளியல் : N.B.கஜீதரன் Tue, Thur : 5-6 pm.
வணிகக்கல்வி : S.பரசோ Tue, Thur : 3-4 pm.

ஆரம்பம் : 02.11.2010 Tue,
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

### THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2012

| சக்தியியல் | இரசாயன கணிப்புகள் | |
|---|---|---|
| ஆரம்பம் : 03.11.2010 | பிரிவு - I | Sat, Sun : (1-2) p.m |
| Wed (3.15-5.00) p.m | பிரிவு - II | Mon : (4.30-5.30) Thu : (5.30-6.30) |

By - அன்பு

### BIT கணனி பட்டதாரியாக

Semester 1,3,5
ஆரம்பம் - By: R.Kumaran- B.Sc. MIS
8 வருட BIT கற்பித்தல் அனுபவம்
தலையாழி / பிரம்படி / K.K.S. வீதி அல்லது இராமநாதன் வீதியிலிருந்து 200m தூரம்.
Contact No: 077 6577359, 021 3216083.

### THE COLLEGE OF CHEMISTRY
Specific Centre for Chemistry

A/L - 2011 DAY CLASSES
Sat, sun 7.30 - 9.30 Tu, Th 3.00 - 4.30

★ அலகு ரீதியான துரிதமீட்டல்
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ மாதிரி வினாக்கள்
★ கடந்தகால தெரிவு வினாக்கள்
★ தொடர் பயிற்சிப் பரீட்சைகள்

32, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
DIAS B.sc (Hons) Spl in Chem

### ACXஇன் உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால் சேவை
### ACX போன் சொப்

யாழ். நகரில் துரித தபால் சேவையின் முன்னோடியான ACX, தனது சேவையை மீண்டும் ஆரம்பிக்கின்றது.

உள்நாட்டு சேவை : கொழும்பு மற்றும் பிற இடங்களுக்கு, ஒப்படைக்கப்பட்ட 24 மணி நேரத்தில் கடிதங்கள் / பொதி ஒப்படைக்கப்படும்.

வெளிநாட்டு சேவை: இந்தியா / சிங்கப்பூர் / மலேசியா / கட்டார் போன்ற நாடுகளுக்கு 2 தினங்களிலும்,
ஐரோப்பிய நாடுகளுக்கு, 3 அல்லது 4 நாள்களிலும் உங்கள் கடிதங்கள் / பொதிகள் ஒப்படைக் கப்படும்.

5 kg மேற்பட்ட பொதிகள் விசேட கட்டணத்தில் அனுப்பி வைக்கப்படும்.

நம்பிக்கை, உத்தரவாதம், காப்புறுதி.

மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் லொக் உடைத்தல், போன் விற்பனை, திருத்தம் என்பவற்றுக்கும்...

ACX,
இல. 6, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம். (105348)
T.P : 0212226151
Fax : 0212224328


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.